224239

# ஸ்ரீ சுத்த வேதாந்த
# தமோ பாஸ்கரம்

1926

R65
N26
224239

ஞானபக்தி வைராக்ய போதக கிரந்த மாலை.

ஓம் தத் ஸத்.

# ஸ்ரீ சுஷ்க வேதாந்த தமோ பாஸ்கரம்.

22 SEP 1[illegible]
MADRA

இது

பிரம்ம நிஷ்டா கரிஷ்டராய்

ஏற்பேடு ஸ்ரீவியாஸாஸ்ரமத்தில் எழுந்தருளி யிருக்கும்

**ஸ்ரீ மலயாள ஸ்வாமிகளவர்கள்**

ஆந்தரத்தில் இயற்றியதை ஷை ஸ்வாமிகளது

உத்தரவின்படி,

**க. அரங்கநாதம் பிள்ளை அவர்களால்**

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதை

சில புண்ணிய புருஷர்களால் உபகரிக்கப்பட்டு

**பிரம்மஸ்ரீ-டங்கடூர் இராமஸ்வாமி ஐயர்**

அவர்களாற் பிரசுரிக்கப்பட்டது.

நெ. 5, கொண்டலய்யர் வீதி, மிண்ட்பில்டிங் போஸ்டு

மதராஸ்.

முதற் பதிப்பு **1000**.

Copyright Registered] 1926 [விலை அணா **10**.

## விஷய அட்டவணை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | பிரணவ படம் | .... |
| 2. | பீடிகை | 1 |
| 3. | விஞ்ஞாபனம் | 10 |
| 4. | விண்ணப்பம் | 12 |
| | **முதற் பாதம்.** | |
| 5. | மங்களம் | 14 |
| 6. | சம்சார விமுக்தி மார்க்கம் | 16 |
| 7. | அதிகார லக்ஷணம் | 19 |
| 8. | அஹிம்ஸை | 20 |
| 9. | ஜீவஹிம்ஸையின் பேதங்கள் | 25 |
| 10. | மதுமாம்ச நீக்கம் | 30 |
| 11. | மாம்ச நீக்கத்தால் வரும் சுகம் | 31 |
| 12. | விற்கிரய மாம்ஸ பக்ஷண வர்ஜனம் | 32 |
| 13. | ஆடு கோழிகளின் உபயோகம் | 34 |
| 14. | மச்சோபகாரம் | 36 |
| | **இரண்டாம் பாதம்.** | |
| 15. | குரு சிஷ்யர்களுடைய யோக்கியதை | 39 |
| 16. | குரு லக்ஷணம் | 40 |
| 17. | சிஷ்ய லக்ஷணம் | 43 |
| 18. | ஸ்திரீகளுக்குப் பிரஹ்ம வித்தையில் அதிகாரமுண்டெனல் | 47 |
| 19. | பிரம்ம தியானத்திற்குக் காலம் கருதவேண்டுவதின்றெனல் | 54 |
| 20. | ஜாதி பேத இரகசியம் | 68 |


R65 N26 325 15148 224239

ஸ்லோகங்களைச் செவ்வனே உச்சாரணத்துடன் படிக்க விரும்புவோர் தெலுங்கில் பார்த்துக்கொள்ளலாம்.

Kesari Printing Works, G. T., Madras.

ஓம்.

தத்! ஸத்!

அஹிம்ஸா பரமோ தர்ம:

ஸத்யம் வத.



தர்மம் சர.

நபோதாத் பரமம் சுகம்.

ஸர்வ ஜன ஸுகத்தைக் கோரும்

**ஸ்ரீ மலையாளஸ்வாமி.**

திருமலை.

திருப்பதி.

அஹிம்ஸா பரமோ தர்ம: ॐ

అహింసా పరమో ధర్మః

நமோ தாத பரம் ஸுகம்

నమో ధాదపరం సుఖం

"ஸத்யம் வத" "தர்மம்சர"

1. ஆசைக்குச் சமமான பிசாசமுமில்லை
நிராசைக்குச் சமமான தெய்வமுமில்லை
விராகத்திற்குச் சமமான அமிருதமுமில்லை
சராகத்திற்குச் சமமான விஷமுமில்லை.

2. தயைக்குச் சமமான புண்ணியமுமில்லை
நிர்தயைக்கு சமமான பாபமுமில்லை
ஞானத்திற்குச் சமமான சுகமுமில்லை
அஞ்ஞானத்திற்குச் சமமான துக்கமுமில்லை.

3. பக்திக்குச் சமமான பூஷணமுமில்லை
முக்திக்குச் சமமான தனமுமில்லை
அஹங்காரத்திற்குச் சமமான சத்துருவுமில்லை
சோஹங்காரத்திற்குச் சமமான பந்துவுமில்லை.

ஓம்:

ஸ்ரீரஸ்து.

22 SEP 1926
MADRAS

# பீடிகை.

ஓ ஆர்யோத்தமர்களும் பரம பவித்திரர்களுமான என் பிரிய சகோதரி சகோதரர்களே! இக்கால் மஹிமையினால் ஸம்ஸ்தமான ஜாதியிலிருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு ஆத்மஞான விஷயத்தில் ஒரு உயர்ந்த ஜிக்ஞாசை ஹ்ருதயத்தில் தோன்றிய சங்கதி லோக முழுமையும் காணப்படுகிறது. அருணோதயம் ஸூர்யோதயத்திற்கு முன் உதயமாவதுபோல், ஆத்மஞான உதயத்திற்கு முன்னே ஸூபேச்சை உதயமாகும். இந்த ஸ்திதிக்கு வந்தவர்களெல்லோரும் தன்யர்களே. இதற்கு ஸந்தேகமில்லை. இப்படி இருந்தாலும் வைராக்கிய பக்தி ஸதாசாரங்கள் பூர்த்தியாக இல்லாத காரணத்தினால், பூர்ணானந்த சுகத்தை யடையாமல் ஜனங்கள் பூர்வ ஸ்திதியிலிருந்து உயர்ந்த ஸ்திதியை அடையாமலிருக்கின்றார்கள். ஏனென்றால், போஷிப்பு இல்லாத பயிர்போல, பிரம்மானந்த சுகமான பலத்தை யனுபவிக்காமல், தாழ்ந்த ஸ்திதியிலிருக்கும் காரணத்தினால் மோக்ஷத்தைக் கோருகிறவர்களுக்கு வைராக்ய போத உபரதி பூர்த்தியாவதற்கே இக் கிரந்தம் எழுதக் காரணமானது. இந்தக் கிரந்தத்தில் சப்ததோஷம் அநேகவிதமாக வருகிற விஷயம் நீங்கள் யோசிப்பதற்கு முன்னமே, நான் அநேக விதமாகச் சொல்லுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், எனக்கு ஆந்திர தமிழ் பாஷா பரிக்ஞானம் மிகவும் குறைவாயிருக்கிறதென்னும் ஸங்கதி, என்னைத் தெரிந்தவர்களெல்லோருக்கும் செவ்வையாகத் தெரிந்த விஷயமே. அதனால் இக் கிரந்தத்திலிருக்கும் சப்ததோஷங்களைப் பாராமல், இதன் அர்த்தத்தை மாத்திரம் தெரிந்துகொள்ளப் பிரார்த்திக்கிறேன். "கரும்பு வளைவாக யிருந்தாலும் அதன் மாதுர்யம் கெடாது" என்பதாக நான் நிச்சயித்திருக்கிறேன். இன்னும்

இதில், சாத்யமான கடின பதங்களும் நீளமான அன்வயமும் இல்லாமல், எளிதாக இருக்க நான் கவனம் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், வித்தை தெரியாத ஸ்திரீ, பாலர்களுங் கூட இதைக் கேட்ட மாத்திரத்தில் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதே இதன் முக்கிய உத்தேசம். ஆதலால், சிறிய சிறிய பதங்களால் எழுதப்பட்ட இக் கிரந்தத்திலிருக்கும் விஷயங்களில் யாருக்காவது ஒன்று நன்றாகத் தோன்றினால், அது என்னுடைய ஸ்ரீ சத்குருவின் திவ்ய பாதாரவிந்தரேணு (பாததூளி) கோடிகளில் ஒருரேணுவின் கோடிபலாம்சமே தவிர மற்றொன்றுமில்லை. இதிலுள்ள விஷயங்களில் ஏதாவது ஒரு விஷயம் இஷ்டமில்லாததாகத் தோன்றினால், அந்தத் தப்பிதம் என்னுடைய பிரமாதத்தினு லுண்டானது. அதற்கு நான் பாத்திரனுவேனே தவிர, அப்படிப்பட்ட தோஷங்கள் யாவும் எமது குருவான அப் புண்ணிய புருஷரை எப்பொழும் சாரவே மாட்டா. ஏனென்றால், சமதிருஷ்டியுள்ள ஸூரியன், துர்கந்தமான மல முதலிய வஸ்துக்களில் வியாபித்தாலும், அத் துர்வாஸனை ஸூரியனிடத்தில் எப்படிச் சேராதோ, அப்படியே கருணைமூர்த்தியும் அஞ்ஞானந்த தமோ பாஸ்கருமான அந்த மஹாத்மாவானவர், மஹா மந்தபுத்தியை யுடைய என்னை அனுக்ரஹித்திருந்தாலும், அத்தோஷங்கள் யாவும் என்னிடத்திலிருக்குமேயன்றி, அவைகள் அந்தப் பாவன பவித்திரரிடம் இரா. ஆதலால், இக் கிரந்தத்தைப் படிப்பவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் படிக்கும்பொழுது இஷ்டமில்லாவிடினும், பூர்ணதயையோடு மன்னித்து மற்றொரு ஸமயத்தில் மனசாந்தி யுண்டாகும்பொழுது இக் கிரந்த முழுமையும் படிக்கும்படி பிரார்த்திக்கிறேன். இதைக் கோபத்தினால் தள்ளிவிடக்கூடாது. ஏனென்றால், ஒருதீவாந்தரத்திற்குப் போனவன் அந்தக் காலத்தை யனுசரித்து, மழை, வெய்யல், பனி ஆகிய பர்வங்களின் சமய சுபாவத்தைப் பார்த்து, அந்தத் தேச ஸ்திதி எப்பொழுதும் அப்படியேயிருக்கிறதென்று நிச்சயிக்க முடியாதல்லவா? ஆறு ருதுக்களையுடைய பன்னிரண்டு மாதங்கள் அங்கு வசித்திருந்தால், இந்த ஜோதிஸ் சக்கரம் ஒருமுறை சுற்றிவரும், அப்பொழுது மாத்திரம் அந்தத் தேச சீதோஷ்ண ஸ்திதிகளைக் கண்டு பிடிக்க ஸாத்தியமே யொழிய, அவஸரப் பட்டால் நிஜமாகத் தெரியாமற் போகுமல்லவா? அவ்விதமாகவே இக் கிரந்தத்திலும் சிற்சில இடங்களில் தங்களுக்கு அனிஷ்டமாகத் தோன்றினாலும், அவை முழுமையும் ஆலோசித்தால் மிகவும் இஷ்டமாகவே இருக்கும். ஞானவாசிஷ்டம் போல் இக்கிரந்தத்தைப் படிப்பது ஆத்மஞானமுடைய



ஆரூடர்களுக்கு அனுவசியம். அப்படியே, ஞானஹீனர்களான மந்தபுத்தி யுடையவர்களுக்கும் இக்கிரந்தம் பயன்படாது. ஆனால், யாருக்கு உபயோகப்படுமென்றால், அஞ்ஞான மஹா துக்கத்திலிருந்து விடுதல் பெறுவதற்குப் பிரயத்தனத்தைச் செய்யும் அப்பியாசிகளுக்கு மிகவும் உபயோகமாக யிருக்கும், இது பெரிய வியாதியஸ்தனுக்கு திவ்வியமான ஔஷதம் போன்றது. இது ஸம்ஸார மகா ஸாகரத்தைத் தாண்டுவதற்கு ஒருவிசாலமான அணைபோ லிருக்கிறது. வியாதி யில்லாதவர்களுக்குத் திவ்ய ஔஷதமும் பிரயோசனப் படாதல்லவா? அவ்விதமாகவே, அசாத்யமான ரோகிக்கும் மருந்து உபயோகமாகாது. சாத்தியமான நோயாளிக்கு ஔஷதத்தினுடைய உயர்ந்த பல சித்தியுண்டாகும்.

(சு) அஹம் பத்தோ விமுக்தஸ்ஸியா மிதியஸ்யாஸ்தி நிச்சய: ।
நாத்யந்த மஞ்ஞோநோ தஞ்ஞ: .சோஸ்மிங் சாஸ்திரே அதிகார வாங் ॥

(தா.) நான் ஸம்ஸாரபந்தத்தை யுடையவனு யிருக்கிறேன். இந்த மஹா பந்தத்திலிருந்து விமோசனம் அடைவேனுக, என்ற நிஜமான எண்ணம் யாருக்கிருக்கின்றதோ, அவனே இக்கிரந்தத்தைப் படிப்பதற்கு அதிகாரியாகிறான். எவன் சிறிதும் ஞானமில்லாத அஞ்ஞனோ அவனுக்கும், ஞானவானுக்கும் இந்தச் சாஸ்திரத்தில் அதிகார மில்லை. இன்னும் இவ்விஷயத்தை அதிகமாகச் சொல்ல வேண்டுவ தில்லை. ஸத்புருஷர்களான மஹான்களுடைய சுவபாவம் அஸத்தைத் தள்ளி ஸத்தை மாத்திரம் கிரஹிப்பது தன் கிடையாகவே யிருக்கிறது. எப்படி யென்றால், ஜலத்தையும் பாலையும் ஒன்றாகக் கலந்து வைத்தால், அன்னமானது ஜலத்தைத் தள்ளி பாலை மாத்திரம் கிரகிப்பது போலும், வண்டானது மரங்களிலிருக்கும் முள், இலை முதலியவைகளைத் தள்ளி, உள்ளேசென்று புஷ்பத்தின் நடுவிலிருக்கும் தேனைமாத்திரம் சுவீகரிப்பதுபோலும், சஜ்ஜன உத்தமர்கள் இதனுள்ளிருக்கும் உலோபங்களைத் தள்ளி சாரத்தைக் கிரஹிப்பார்களென்று நம்புகிறேன். துர்ஜனர்களுடைய சுவபாவம், ஸாரத்தைத்தள்ளி தோஷங்களைக் கிரஹிப்பது தொழிலாகவே யிருக்கிறது. எப்படி யென்றால், யானையை, அத்தர் பன்னீருடன் அபிஷேகம் செய்து, கஸ்தூரி, குங்குமம், பச்சைகற்பூரம் முதலிய சுகந்த வஸ்துக்களினால் அலங்காரம் செய்தாலும், அதற்கு நீசமான மண்ணினால் திருப்தியடைவது சுவபாவமாம். அவ்விதமாகவே, தெரு நாய்க்குப் பாலன்னம் முதலிய திவ்விய போஜனத்தைக் கொடுத்தாலும், துர்கந்தமான மலத்தைத் தின்பதற்கே அது

விரும்புகின்றதல்லா? அவ்விதமே புத்தியில்லாதவர்களான குதர்க்கவாதிகள் ஸாரத்தைத் தள்ளி ஸாரமில்லாத விஷயங்களைக் கிரஹிப்பது உலகப் பிரசித்தமல்லவா? ஆதலால் இந்த விஷயத்தை நான் அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை. இப்பொழுது சொல்லத் தொடங்கிய விஷயம், பிரம்ம நிஷ்டா கரிஷ்டர்களாய்க் குருஸ்தானத்தை யடைந்து, சிஷ்யர்களை அனுக்ரஹிக்கும் குருக்களுடைய கடமையா யிருக்கிறது.

ஓ, மஹாத்மாக்களே! தங்களுடைய ஸன்னிதானத்திற்கு வருகிற முமுக்ஷுக்களில் விஷயவைராக்யாதி குணங்கள் ஸம்பூரணமா யிருக்கின்றவர்களை, நிர்பந்தப்படுத்தி விவாஹம் செய்வித்து ஸம்ஸாரத்தில் சிலகாலம் இல்லாவிட்டால், மோக்ஷத்தை யடைவது மிகவும் பிரயாஸமென்று சொல்லாமலிருப்பதே முதல் பிரார்த்தனை.

இன்னும், ஸம்மதமில்லாத சிலருக்கு விவாஹம் செய்தால் அப்படிப் பட்டவர்கள் சில காலமிருந்து மனையாளை விட்டு விராகிகளாய்ப் போவதைப் பார்க்கிறோம். கணவனுக்கு இருக்கும் வைராக்ய பக்தியாதி குணங்கள் மனைவிக்கு இல்லாத காரணத்தினால் கஷ்டப் படுவதற்குக் காரணமாயிருக்கிறது. மற்றும் சிலருக்கு வைராக்யாதி குணங்களிருந்தாலும், அவர்கள் ஸம்ஸாரத்தினின்று விடுதல்பெற அநேக விதமாகக் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் சிலர் மற்று மேதோ காரணத்தினால் கஞ்சா, அபினி முதலிய ஸத்தில்லாதனவான மத்து (மயக்க) வஸ்துக்களை இளமையி லிருந்து அப்பியாசத்திற்குக் கொண்டு வருவதினாலும், இப்பொழுது அப்பழக்கத்தை விடுவதற்குக் கஷ்டமாயிருப்பதினாலும், அப்படிப்பட்டதுர் விருத்திகளைச் சிஷ்யர்களுக்குக் கற்றுக் கொடுக்காம லிருப்பது இரண்டாவது பிரார்த்தனை. ஏனென்றால், அநேகர், தியாகிகளாகி, கிருஹத்தை விட்டுவந்தாலும், இந்த மயக்க வஸ்துக்களை ஞான பத்திரியென்று பாவித்து, உதயம் முதல் மத்தியான்னம்வரை யாசித்தும் கஞ்சாவிற்குப் போதியவளவு கிடைக்காமற் கஷ்டப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஒரு பெரும் பிரதி பந்தத்தினால், ஞான நிஷ்டை பூர்த்தியாகாமல் சிரவண மனனத்திற்குங் கூட சமயம் கிடைக்காமல், வாழ்நாள் வீணாய்ப் போகிறது. இவற்றினின்றும் விடுதலடைந்தால், அதாவது, இந்த லாகிரி வஸ்துக்களை விட்டு விட்டால், சீக்கிரத்தில் இவ்வுலகம் உயர்ந்த பதவிக்கு வரும்.

மூன்றாவது பிரார்த்தனை யென்னவென்றால், பிராணஹிம்ஸாதி ஆகாரங்களில்லாமலிருக்க நீங்கள் முயற்சி செய்தால் அதைவிட ஒரு



உயர்ந்த சகாயம் இவ்வுலகத்திற்குச் செய்வது யாதுமில்லை. இம்மூன்று விஷயங்களும் முக்கியமானவை.

1. இன்னும் உத்தம, மத்யம, கனிஷ்டாதிகாரிகளை யோசித்துக் கண்டு பிடிக்காமல், எல்லோருக்கும் முதன் முதலில் அமனஸ்கத்தை (தன்னுடைய ஆத்மாவிலே மனோ விருத்திகளை நசிக்கச் செய்வதை)ப் போதித்தால், அதைக்காட்டிலும் வேறோர் பெரிய அபகாரம் இல்லையென்பது என்னுடைய திட அபிப்பிராயமாக இருக்கிறது.

2. தைலமில்லாமல் விளக்கு எப்பொழுது பிரகாசிக்குமோ ஜலமில்லாத பயிர் எப்பொழுது வளருமோ, அப்பொழுது மாத்திரமே ஜீவகாருண்ணிய மில்லாதவர்களுக்குப் பரிபூர்ணஞானம் உண்டாகுமென்று தமியேன் நிஸ் ஸம்சயமாகச் சொல்லுவேன்.

3. கரையில்லாத ஏரியில் எந்தக் காலத்தில் ஜலம் நிறைய நிற்குமோ, அப்பொழுதல்லவா இந்திரிய நிக்ரஹம் (விஷயவிரக்தி) யில்லாதவர்களுக்கு, ஞானம் ஸ்திரமாக யிருக்குமென்று நான் திடமாகச் சொல்லுவேன். இனிமேல் சொல்லப்படும் விஷயங்கள், குரு புத்திரர்களாய் ஆத்மஞானம் பூர்த்தியாவதற்கு அப்பியாசம் செய்கிற என் பிரிய சகோதரி சகோதரர்களுக்குச் சகாயகரமாக இருக்கும்.

ஓ, ஆத்மஞானமான சாசுவதாநந்த நிர்வாண சுகத்திற்காகப் பிரயத்தனம் செய்கிற என்பிரிய சகோதரி சகோதரர்களே! தங்கள் குருஸ்வாமிகளில் சிலர் விதிநிஷேத மில்லாதவர்களாகவும், சிலர் அதிவர்ணாச்ரம ஸ்திதியி லிருக்கின்றவர்களாகவும், இன்னும் சிலர் தாரணாத்யானத்தை விட்டவர்களாகவும், சிலர் தாவாக்நிபோல் (காட்டுத்தீப்போல்) ஸமஸ்தத்தையும் பக்ஷிக்கிறவர்களாகவு மிருக்கிறார்கள். அவர்களுடைய அவஸ்தைகளைத் தெரியாமல், நீங்கள் அவ்வாறான காரியங்களில் பிரவேசித்தால், இந்த ஜன்மம் நிரர்த்தகமாகும். மஹாத்மாக்களுக்கு நிக்ரஹாநுக்ரஹங்களாகிய இரண்டு சக்திகளிருக்கின்றன. இது எல்லோருக்கும் ஸாத்தியமல்ல. கருடனுக்குப் பெரிய விஷஸர்ப்பத்தைப் பக்ஷித்தல் சுககரமாயிருக்குமே யொழிய, மற்ற ஜந்துக்களுக்கு அது பிராண ஹாநிகரமாக இருக்கும். ஹம்ஸம் ஸமுத்திரத்தில் சுகமாக வசிக்கும், கிராமக்கோழி அதிற் பிரவேசித்தால், அதற்கு அதுவே இறப்பாம். பிள்ளைப் பூச்சிகள் மண்ணிலிருந்தாலும் அவைகளுக்கு அந்த இடம் ஸௌகரியமாக இருக்குமே தவிர, கம்பளிப் பூச்சிக்கு அது பிராண ஹாநியாக இருக்கும். அவ்விதமே மஹாத்துமாக்களுடைய மார்க்கத்தை, அபக்குவமான ஜீவர்கள் அவலம்பித்தால் (கைப்பற்றினால்) நாசகரமாயிருக்கும். ஆதலால் அவ்வாறான காரியங்களில் பிரவேசிக்

காமல் தன்னுடைய ஸ்வரூபஸ்திதியை அடைகிற வரையில் ஏகாந்தவாசம் (தனியாகஇருத்தல்) மிதாஹாரம் (மிதப்புசிப்பு) ஆத்மசம்யமம் (மனவடக்கம்) ஆத்மானுஸந்தானமான தியானம் இவைகளை விடக்கூடாது. இவையாவும் எவ்வளவு காலம் வரை வேண்டுமென்றால், தனக்கு அபரோக்ஷஞானம் வருகிற வரையில் வேண்டும். அது வந்தக்கால் நிறுத்திவிடலாம். வில்லியர்கள் (நெல் குத்துகிறவர்கள்) அப்பொழு தப்பொழுது அரிசியைச் சோதித்து, தவிடு இருந்தால் மறுபடியும் குத்துவதுபோலும், சமைப்பவர்கள் அப்போதைக்கப்போது ஒரு அன்னத்தைப் பிடித்துப்பார்த்து பக்குவ மில்லாவிட்டால் நெருப்பை அதிகப் படுத்துவதுபோலும், ரத்தினத்தைச் சாணைபிடிப்பவர்கள் அப்போதைக்கப்போது பார்த்து பூர்ண ஜோதி வரும்வரையில் சாணைக்கல்லில் தீட்டுவதுபோலும், தனக்குத் தானே பிரகிருதியான விக்ருதிகள் நசித்தனவா? விஷயங்களிடத்தில் மனம் பற்றற்றதா? குரு உபதேசப் பிரகாரம் பூர்ணத் தன்மையடைந்ததா? என்று தனக்குத்தானே பரிசோதித்து, இல்லாவிடில், மனனத்தையும் நிதித்யாஸனமான தியானத்தையும் விடக்கூடாது. விட்டவர்கள், பூர்ண ஸ்திதியை யடையாமல் பிரஷ்டர்களாவார்கள். பிரம்மானந்த சுகத்தை யடையமாட்டார்கள். எப்படி யென்றால், ஒன்பதுமாதம் பூர்த்தியாகமல் பிரசவித்த சிசுவும், பரிபக்குவ மில்லாத விதையிலிருந்துண்டான விருக்ஷமும், எப்படி உபயோக மில்லாமற் போமோ, இவர்களுடைய கதியும் அப்படியாய்விடும். இந்தக் காரணத்தினால், சிலர் சில காலம் தியானம் செய்கிறபொழுது, சொற்ப ஆத்ம ஸௌக்கியமும், சொற்ப வாக்குச் சித்தியும், அநேகருக்கு இவர் மேலானவரென்ற புத்தியும் உண்டாகும் பொழுது, தியான நிஷ்டையை விலக்கி, நாம் ஸர்வஞ்ஞரானோம் (எல்லாம் தெரிந்தவராய் விட்டோம்) என்று ஏமாந்து, உலக வியவஹாரத்திற் குட்பட்டு கேவலமான ஹீன ஸ்திதிக்கு வருகிறார்கள். எப்படியென்றால், மலேச்சுரம் (Malaria) வருகிறவர்களுக்குக் குவைனை (Quinine) முதலிய மருந்துகளைச் சாப்பிடும் பொழுது, உடனே ஜுரம் நின்று விடும். அப்பொழுது, அவர்கள் இனிமேல் ஜ்வரம் வராதென்று எண்ணி, மருந்து சாப்பிடாமல் பத்தியத்தை விட்டு விட்டால், சில தினங்களில் ஜுரம் முன்போல் மீண்டும் உண்டாகுமல்லவா? அப்படியே, அஞ்ஞானமான மஹாரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் ஆத்ம தியானமான திவ்விய ஔஷதத்தைச் சிலகாலம் சேவிக்கும் பொழுது, அற்ப ஸௌக்கிய முண்டாகும். அப்பொழுது, தியானத்தை விட்டவர்கள் மறுபடியும் ஸம்ஸார ஸாகரத்தில் முழுகுவார்கள்.



புத்திமான்கள் ஜுரம் நின்றுவிட்டாலும் சிலநாள் ஔஷதத்தையுட்கொண்டு பத்தியமாக யிருப்பதனால் நித்ய சுரூபர்களாவார்கள். அதுபோல் பூர்ண அபரோக்ஷ ஞானம் வரும்வரைக்கும் தியான நிஷ்டையிலிருப்பவர்களுக்கு அஞ்ஞானம் வேரோடும் நாசமாகி சாசுவதானந்த சுகமுண்டாகும்.

ஓ, பிரிய சகோதரி சகோதரர்களே! ஞானசித்தி அடைவதற்கு அநேகவிதமான விக்னங்கள் வருகின்றன. அவை முழுவதையும் கடப்பதற்கு ஜகதீச்வரனுடைய கருணாகடாக்ஷ வீக்ஷணமிருந்த ப்ரவாஹம் நிறைந்திருக்கவேண்டும். இல்லாதவர்களுக்கு, கடப்பது முடியாது. அதற்கு அனன்யமான தெய்வபக்தியைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்.

(சு) தைவீஹ்யேஷா குணமயீ, மமமாயா துரத்யயா ।
மாமேவ யேபிரபத்யந்தே, மாயா மேதாம்தரந்திதே ॥

(தா). முக்குணங்களோடு சேர்ந்த இந்தத் தைவ ஸம்பந்தமான என்னுடைய மாயை ஸாதாரண ஜனங்களால் கடக்க அரிதானது. ஆனால் எவர்கள் என்னையே சரணாகதியென்று பிரார்த்தித்து பக்தியோடு ஸேவிப்பார்களோ, அவர்கள் இக்கோரமான மாயையைச் சுலபமாகக் கடப்பார்கள் என்று ஸ்ரீபகவத்கீதை சொல்லுகின்றது. ஆதலால் யார் தன் குருவை ஈசுவரனாக நம்புவார்களோ, அவருக்கு மாத்திரம் மோக்ஷம் ஸித்திக்குமே தவிர, மற்றையர்களுக்குச் சாத்தியமாகாதென்று "சுவேதாசுவேதரோபனிஷத்" கோஷிக்கின்றது.

(சு) யஸ்யதேவே பராபக்திர் யதாதேவே ததாகுரௌ ।
தஸ்யைதே கதிதா ஹ்யர்த்தா : பிரகாசந்தே மஹாத்மந: ॥

(தா.) யாருக்கு ஈசுவரனிடத்தில் மிதமற்ற பக்தியிருக்கிறதோ, அப்படியே குருவினிடத்திலு மிருக்குமோ, அத்தன்மைய மஹாத்மாவிற்கு மாத்திரம் ஞானம் பிரகாசிக்குமே தவிர, இதரர்களுக்கு உண்டாகாது. அதாவது குரு வேறு, ஈசுவரன் வேறு என்ற பேதம் இருக்கக்கூடாதென்பது இதன் தாத்பரியமாம்.

(சு) குருவக்த்ரே ஸ்திதா வித்யா குருபக்த்யாச லப்யதே ।
த்ரைலோக் யேஸ்புடவக் தாரோ தேவர்ஷி பித்ருமானவா: ॥

(தா.) பிரம்ம வித்தை குரு முகத்தில் ஸ்திரமாக யிருக்கிறது. அதை அவரிட மிருந்து அமிதமான பக்தியினால் அடைய முடியுமேயன்றி வேறு எந்த விதத்திலும் அடைய முடியாதென்று மூவுலகில்

ருக்கும் தேவ ரிஷிகள், பித்ருக்கள், மானவர்கள் தெளிவாகச் சொல்லுகிறார்கள்.

ஆதலால் ஆர்யோத்தமர்களே! குருவினிடத்திலும் ஈசுவரனிடத்திலும் அனன்ய பக்தி யுடையவர்களாய், இந்த ஜனன மரண மஹா துக்ககரமான கோர ஸம்ஸார ஸாகரத்திலிருந்து சுகமாகத் தாண்டுவீர்களாக.

இப்போது சொல்ல ஆரம்பித்த விஷயம், எனது பிரிய சகோதரி, சகோதரர்களும், குரு உபதேசத்திற்காக அலைபவராயு முள்ள ஜிஞ்ஞாசுக்களான முமுக்ஷுக்களுக்கும் சிரேயஸ்கரமா யிருக்கும்.

அன்பர்களே! இக்காலத்தில் குருக்கள் அநேக ரிருந்தாலும் அவர்களை நன்றாகச் சோதித்துச் சமீபத்திற் செல்ல வேண்டும். இல்லா விட்டால் துக்கத்திற்கு ஆளாகு வீர்கள்.

(சு) குரவோ பஹவஸ் ஸந்தி சிஷ்யவித்தாப ஹாரகா:।
தமேகம் துர்லபம் மந்யே சிஷ்யஹ்ருத்தாப ஹாரகம்॥

(தா.) சிஷ்யர்களிடத்திலுள்ள தனத்தை அபகரிக்கும் குருஸ்வாமிகள் பலரிருந்தாலும், சிஷ்யனுடைய மனோ தாபத்தைப் போக்கடித்து, ஞானனந்தத்தைக் கொடுக்கும் குரு கிடைப்பது மிகத் துர்லபமென்று கருணைமயரான பரமேசுவரன் ஆதிகாலத்தில் குரு கீதையில் சொல்லியிருக்கிறார். ஆதலால் முமுக்ஷுக்களே! குருவென்றவரை நன்றாக யோசித்து, அவரிடத்தில் சேருவீர்களாக. அவசரப்படாதீர்கள். இல்லாவிட்டால், உங்களுக்கு இப்பொழுதுள்ள பக்தி, வைராக்யாதி ஸத்குணங்களும் நசித்துவிடும். இப்பொழுதிருக்கும் குருக்களில் சிலர் சிசுனோதர போஷண பராயணபர்களாய் ராஜயோகிகளென்று சொல்லுபவர்கள். மற்றும் சிலர் விகல்பமான கஞ்சாவை (பங்கிபத்திரத்தை)க் கல்பமென்று சொல்லுபவர்கள். இன்னும் சிலர் சித்த பிரமத்தைச் செய்யும் அபினியை மனோ நிக்ரஹமென்று வாதிப்பவர்கள். இன்னும் சிலர் நிஸ்ஸாரமான சாராயத்தை அமிருத பானமென்று எண்ணுபவர்கள். மற்றும் சிலர் மாமிசத்தைத் தேக போஷணமாக எண்ணுபவர்கள். வேறு சிலர் எல்லாம் செய்யலாம் ஆத்மா ஒன்றும் செய்வதில்லை, இந்திரியங்கள் அந்தந்த வேலைகளைச் செய்கின்றனவென்று சொல்லி நிஷித்த கிருத்யங்களைச்செய்யும் பாவிகளாவர். இப்படி இருப்பவர்களெல்லோரும்பாத குருக்களே யல்லாமல் போத குருக்களாக எப்பொழுதும்ஆக மாட்டார்களென்று சொல்லுவோம். இவ்விதமான சுஷ்க வேதாந்திகளைச் சாராமல், பக்தியோடு ஸர்வஜீவராசி களிடத்தில் காருண்ய



முடையவர்களாய், உங்களுடைய ஹ்ருதயகமலத்தில் குருவுக்குக்குருவாய் வீற்றிருக்கும் கருணை நிதியான பரமேசுவரனைத் தியானித்தால், அவர் உங்களுக்குத் தரிசனம் தந்து உபதேசிப்பார், இது சத்தியம். அல்லது தகுந்த ஸத் குருவைத் தடஸ்திக்கும் வண்ணம் செய்து பக்தர்களைத் தன்யர்களாகச் செய்வார். அல்லது ஸ்வப்னத்தில்ரூபத்தோடாவது தோற்றி உபதேசிப்பார்.

(சு) தேஷாம் ஸததயுக்தானாம் பஜதாம்ப்ரீதி பூர்வகம்
ததாமி புத்தியோகம்தம் யேநமாமுபயாந்திதே .

(தா) எவர்கள் பகவானை நம்பி பரமாத்மாவினிடத்தில் ஆசக்தர்களாய்ப் பிரீதி பூர்வகமாகப் பஜிப்பார்களோ, அப்படிப்பட்டவர்கள் என்னையடைவதற்கு எவ்வெவ்வுபாயமுண்டோ, அம்மார்க்கத்தை நான் பிரத்யக்ஷ ரூபமாகவாவது, அல்லது வேறெவ்விதமாகவாவது போதித்துக் கொண்டிருக்கிறேனென்று ஸ்ரீ பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார். ஆதலால், ஒருவர் குருவை அடையும்பொழுது, தட்டார் எவ்விதம் பொன்னைப் பரீக்ஷித்து அதில் சந்தேகமிருந்தால் ஆணி வைத்து உரைத்துப் பார்ப்பாரோ பின்னும் சந்தேகமிருந்தால் சுத்தியாலடித்துச் சோதிப்பாரோ, பின்னும் ஸந்தேகமிருந்தால் உண்மை வெளிப்பட உருக்கிப் பார்ப்பாரோ பின்னும் சந்தேகமிருந்தால் வெட்டிப்பார்ப்பாரோ அவ்விதமே அவரை நாலுவிதமாகப் பரிசீலனை செய்தால் தன்யர்கள் ஏற்படுவார்கள். என்றால், அவர்களுடைய சொற்கள் சாந்தமாய், ஸத்யமாய், ஸ்வாநுபவமாய் இருக்கின்றனவா? அவர்கள் இந்திரியாதி சுகத்தில் ரமிப்பவர்களா? அல்லது ஆத்மாராமர்களா யிருக்கிறார்களா? அவர்களுடைய ஆகாராதி நித்திய காரியங்கள் ஸாத்விகமாகவும் மிதமாகவுமிருக்கின்றனவா? அவர்கள் செய்யும் காரியங்கள் தனக்காகவா? லோகோப காரத்திற்காகவா? என்று நாலு விதமாய்ப் பரிசீலனை செய்யவேண்டும். இல்லாவிட்டால் தங்கமென்று பிரமித்து கில்ட்டு நகைகளை வாங்குகிறவர்கள்போல், கஷ்டத்திற்குப் பாத்திரர்களாவார்கள். ஒருவர் தன்யாத்மாவாயிருந்தால் அப்படிப்பட்டவர் இந்திரிய சுகத்தைக் கோரமாட்டார். எல்லா ஜீவராசிகளையும் தன்னைப் போலவே பாவிப்பார். செய்யும் காரியங்களெல்லாம் லோகோபகாரத்திற்காகவே யிருக்கும். சத்ரு மித்ரு பேதங்கள் காணப்படா. தன் வஸ்துக்கள் போனாலும் துக்கப்படமாட்டார்கள். அயலாருடைய வஸ்துக்களுக்கு ஆசைப்பட மாட்டார்கள். தயாஸ்வ ரூபர்களாக யிருப்பார்கள். பிரகிருதி ஸம்பந்த புருஷ ஸங்கத்திலிருக்க விரும்ப மாட்டார்கள். மிருதுவாயும், மதுரமாயுமுள்ள வசனங்களைச்

சொல்லுவார்கள். இவ்விதம் அநேக ஸத்குணங்களை யுடையவர்கள் சண்டாளர்களானாலும், ஸ்திரீகளானாலும், அவர்களிடமிருந்து வேத பிராமணர்களும் உபதேசம் பெற்றுக்கொள்ளலாம். “சாண்டாளோஸ்து ஸது த்விஜோஸ்து குருரித்யேஷா மனீஷாமம,” என்று ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யர்கள் மனீஷா பஞ்சகத்தில் சொல்லியுள்ளார். “அநித்யா தபி பரம் தர்மம்” என்று மனுஸ்மிருதி. இவ்வாறு இருப்பவர்களைச் சாக்ஷாத் பகவத் ஸ்வரூபர்களென்று நினைக்கவேண்டும். அவருக்கு லோகத்தில் வித்தையில்லாவிடினும் விரோதமில்லை. அவர்களுடைய பேச்சுக்களெல்லாம் வேதவசனங்களாக இருக்கும். அவர்களுடைய தரிசனத்தால் எல்லாப் பாபங்களும் நசிக்கும். தர்மார்த்த காமமோக்ஷமான நான்குவித புருஷார்த்தங்கள் சுலபமாகக் கிடைக்கும். அப்படி இருப்பவர்களுக்கு ஈசுவரன்கூட வேலைக்காரன் போல் அவர்கள் காரியம் பூர்த்தியாவதற்குப் பாடுபடுவான். இது நிஜம்.

இப்படி,

தங்கள் பிரிய சகோதரனும் சர்வஜன சுகாபிலாஷியுமான,

ஸ்ரீ மலயாள ஸ்வாமி.

லோகாஸ் : ஸமஸ்தாஸ் : ஸுகினோபவந்து.

---

ஓம்

## விக்ஞாபநம்.

ஓ. பாவன பவித்திரர்களான பிரிய சகோதரி சகோதரர்களே! இந்த “சுஷ்க வேதாந்த தமோ பாஸ்கரம்” என்னும் கிரந்தத்தின் முதல் பதிப்பும் இரண்டாவது பதிப்பும் ஆந்திரத்தில் எழுதியது விரைவாகச் செலவழிந்து விட்டதாலும், அநேகர் அப்புத்தகத்தைக் கேழ்ப்பதினாலும், தெய்வத்தின் கிருபையினால் மூன்றாவது பதிப்பு ஆந்திரத்தில் அச்சிடப்பட்டது. அக்கிரந்தத்தைத் தமிழ் பாஷையில் பக்தர்கள் கேழ்ப்பதினால் பகவத் அனுக்ரஹத்தினால் அச்சிடுவதற்குப் பிரயத்தன மாயினோம். முதல் பதிப்பிலும் இரண்டாவது பதிப்பிலும் ஆந்திரத்திலிருக்கும் அக்ஷர தப்பிதங்களை ஸாத்தியமான வரையில் திருத்தஞ் செய்து புதிய சங்கதிகளையும் கூடச்சேர்த்து இப்பொழுது தமிழில் அச்சிடப்பட்டது. இதிலும் அநேக லோபங்களிருக்குமென்று நான் திடமாக நம்புகிறேன். அத்தப்பிதங்கள் எனக்கு ஆந்திர தமிழ் பாஷாபரிக்ஞானம் இல்லாததினாலும் புத்தி சக்தி பூர்ணமாக இல்லாததினாலும் நேரிட்டன. ஆதலால் இக்கிரந்தத்தைப் படிப்பவர்களான புத்தி



சாலிகள் இதைச் சரிசெய்து படித்து, அர்த்தத்தை நன்றாகக் கிரஹிக்கப் பிரார்த்திக்கிறேன். கங்காநதி வளைவாகப் பெருகினாலும்அது பாபவிமோசனத்திற்குத் தடையாயில்லாததுபோல், இக்கிரந்தத்தில் அநேக சப்த லோபங்களிருந்தாலும் அர்த்தத்திற்குக் கெடுதியிராதென்று நம்புகிறேன். மேலும், படிப்பவர்கள் மிகவும் சிரத்தையோடு இக்கிரந்தத்திலிருக்கும் தப்புகளைக் கண்டுபிடிப்பதுடன் அந்தந்தப்பக்கத்தைக் குறிப்பிட்டு எந்தெந்த விஷயங்கள் அத்வைத சாஸ்திரத்திற்கு ஒற்றுமையில்லாதவைகளோ, அவைகளை எங்களுக்கு எழுதும்படி விரும்புகிறோம். அப்படி எழுதுபவர்களிடம் நன்றி பாராட்டுவதன்றி நாங்கள் அதைப் பூர்ண தயையோடுபெற்றுக்கொண்டு, மறுபதிப்பில் அச்சிடும்பொழுது அதை விசாரித்து புத்தகத்தில் சேர்த்து மிகவும் சந்தோஷமாய் அச்சிடுவோம். இன்னும் இக்கிரந்தம் ஒரு மதத்தையாவது ஒரு தெய்வ பக்தனையாவது தூஷிப்பதும், மற்றொரு மதத்தைப்புகழ்ந்து பேசுவதுமல்ல. இதில் எழுதியிருக்கும் விஷயங்கள் என் ஹிருதயத்தில் அப்போதைக்கப்போது தோன்றினவைகளே. அதைச் சில முமுக்ஷுக்களின் கோரிக்கையினால் அச்சிட்டதேயொழிய எனக்குக் கிரந்தம் எழுதுவதற்குவேண்டிய வித்தையும் புத்தி சக்தியும் யோக பலமுமில்லை. ஸர்வ சக்தனான பகவத் அனுக்கிரஹமும் ஸத்குருகிருபையும் இருந்தால் என்னைவிடச் சிறியவன்கூட எவ்வளவோ உயர்ந்த காரியத்தையும் சுலபமாகச் செய்யக்கூடும். இன்னும், இப்போதிருக்கும் முமுக்ஷுக்களில் சிலர், நித்யசுகமடையாமல் பிராண ஹிம்ஸை செய்வதையும், கஞ்சா குடித்து கெட்டுவிடுவதையும் பார்த்து, என் ஹிருதயம் துக்கப்படுகிறது. எப்படியென்றால், பிரம்ம நிஷ்டனான ஒரு பிராமணனுக்கு நான்கு புத்திரர்களிருந்து ஒருவன் ஜாதி பிரஷ்டனாய் நீசமான மது மாம்ஸாதிகளைப் புசிப்பதையும், கஞ்சா குடித்து மதிகெட்டுவிடுவதையும் பார்க்கும்பொழுது மற்றைச் சகோதரர்கள் எவ்வளவு துக்கிப்பார்களோ, அவ்வளவாக நித்ய சுத்த முக்தர்களான மஹரிஷிகளின் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் இந்தப் பிரம்ம வித்யா விசாரணை செய்பவர்களில், சண்டாளர்கள்கூட செய்வதற்கு ஸந்தேகித்து பயப்பட்டு நிற்கும் பிராண ஹிம்ஸையையும், மாம்ஸ பக்ஷணத்தையும் லாகிரி வஸ்துக்களினால் நிஜபோதம் மறந்திருப்பதையும் பார்த்து சகிக்க முடியாத சங்கடமுண்டாவதால், இக்கிரந்தத்தை அச்சிட்டோம். ஏனென்றால், நான் பரிசுத்த போதஸ்வரூபர்களாய் ஸம்ஸாரத்தின் முடிவைப் பார்த்தவர்களான ஸாதுக்களைப் பின்தொடர்ந்தவனாயிருப்பதால், அவர்களுக்கு நான் சகோதரனானேன்.

நான் ஏதாவது அபசாரம் செய்திருந்தால் ஆயிரம் முறை க்ஷமிப்பார்களாக. ஆனால் என் பிராணன் இருக்கும்வரையில் இப்படிப்பட்ட துர்விருத்திகள் கூடவேகூடாது என்றும், அது பசாசச் செயலென்றும், சாஸ்திர நிஷித்தமென்றும், மோக்ஷ ப்ரதிபந்தகமென்றும் சொல்லிக்கொண்டே யிருப்பேன். அப்படிச் சொல்லிவருவதினால் ஒரு புத்திமானாவது தெரிந்துகொள்ளாம லிருப்பானா? இனி வரும் முமுக்ஷுக்கள் சன்மார்க்கத்தில் நடந்துகொண்டு சாசுவத சுகமான மோக்ஷத்தை யடைவார்கள். இன்னமொரு விஷயம் சொல்லாமலிருக்க என் மனம் ஒப்பவில்லை. அது என்னவென்றால், ஆதி காலத்தில், ஸம்ஸாரத்திலிருந்து அநேக ஸ்திரீ புருஷர்கள் ராஜ யோகத்திலிருந்து முக்தியடைந்த ஸங்கதி ஸத்தியம். அப்பொழுது அவர்கள் ஸம்ஸாரத்திலிருந்துகொண்டே சாக்ஷாத் ருஷிசர்யைகளோடு சேர்ந்திருந்தார்கள். இப்போது இருப்பவர்கள் அந்தப்பரிசுத்த மார்க்கத்திலிருந்து எவ்வளவோ யோசனை தூரமாக விலகிப் போய்க் கொண்டு வருகின்றார்கள். இவ்விஷயத்தை மாத்திரம் எவரும் எப்பொழுதும் கவனிப்பார்களாக.

இப்படி,

சர்வஜன சுகாபிலாஷியான, ஸ்ரீ மலயாள ஸ்வாமி.

ஹரி : ஓம்.

---

ஓம்

அஹிம்ஸா பரமோ தர்ம:

## விண்ணப்பம்.

இந்தக் கிரந்தத்தில் பிரத்யேகமாகப் பிரித்துத் தாரக, சாங்கிய, அமனஸ்கங்களை விவரித்துச் சொல்ல முயலவில்லை. ஏனென்றால், வேதாந்த விஷயமாய்ப் பிரஸ்தானத் திரயங்களும், பஞ்சதசி, ஞான வாசிஷ்டம், சீதாராமாஞ்சனேய சம்வாதம், விசார சாகர முதலிய ஞான கர்ப்பிதங்களான அநேக திவ்ய கிரந்தங்களிருக்க, புதியதோர் நூலை இயற்றுவது சூரியன் எதிரில் வைக்கும் விளக்கைப்போலும், ஹனுமானது எதிரே தவளை குதிப்பதுபோலும் இருக்குமென்று நினைக்கின்றேன். இன்னும் வேதாந்த மார்க்கம் மேலான எல்லையை அடைந்திருந்தாலும், மேற்கூறிய கிரந்தங்களிலிருக்கும் விஷயங்களை விடப் புதிதாகச் சொல்லவேண்டிய விஷயம் இல்லாவிட்டாலும் இக்காலத்திற்கிசைய ஓர் கிரந்தத்தை நிர்மாணம் செய்வதற்காகப் பிறர் தூண்டியதே இதை இயற்றக் காரணமானது. ருஷி சிரேஷ்டர்



களினால் சொல்லப்பட்ட திவ்ய கிரந்தங்களிருந்தும், விலையில்லாத அதன் சாராமிருதத்தைப் பானம் செய்வதற்கு முமுக்ஷுக்கள் தக்க பரிபக்குவமடையாமற் போய் விட்டார்கள் என்பது என்னுடைய எண்ணம். அதற்கு மத்திய காலத்தில் நமக்குச் சமீபத்தில் அபார பிரஹ்ம நிஷ்டர்களும் தயாமூர்த்திகளும் தீவிர விரக்தர்களும் யதார்த்த ஞானபோதகர்களும் அவதரிக்காததினால், இப்பொழுது ஜனங்கள் பிரஹ்ம நிஷ்டைக்கு யோக்யதை யில்லாமற் போய்விட்டார்களென்று விசனபூர்வகமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. திருஷ்டாந்தமாக, ஒரு மார்க்கம் விசாலமாயிருந்தாலும் சிலகாலம் ஜனசஞ்சாரம் இல்லாவிட்டால் எப்படி புல், மரம், முள் முதலியவைகளினால் அடர்ந்துவிடுமோ, அப்படியே விஸ்தீர்ணமாயும் விசிதமாயுமிருக்கும் மோக்ஷ மார்க்கத்தில் மஹாத்மாக்கள் அப்பொழுதப்பொழுது அநுசரிக்காததினால் அந்தப் பிரதேசம் துராசார துர்க்குண துஷ்ட விருத்தியினால் நிறையப்படும். ஆதலால் இது சிறிய கிரந்தமானாலும் உண்மையறிய விரும்புபவர்களுக்குப் பவித்திர மார்க்கத்தைப் புகட்டுமென்று நம்புகிறேன். சிலர் பூர்வாசாரமென்று பெயரிட்டு, துராசாரங்களிலீடுபடும் அத்தன்மையருக்கு இதிற் சொல்லிவை அதிருப்தியாக இருக்கலாம். இவர்களும் இக்கிரந்தத்தினிடத்தில் விஷம திருஷ்டியை விட்டுப் பொறுமையோடு சிறிது சகித்துக் கொண்டு ஊன்றிப் படிப்பார்களாயின், உயர்ந்த நலத்தை அடைவார்களென்று உறுதியாக நம்புகிறேன். துவேஷ எண்ணத்தோடு படிப்பவர்கள் நிஜார்த்தத்தை அறிந்துகொள்வது கஷ்டம். அது எப்படியென்றால், சிவப்பு நீல முதலிய வர்ணங்களையுடைய கண்ணாடியைப் பார்ப்பவர்களுக்கு வெண்மை மஞ்சள் வர்ணங்கள்கூட அக்கண்ணாடியில் காணப்படும். வெண்மை நிறம் பொருந்திய கண்ணாடியைப் பார்ப்பவர்களுக்கு மாத்திரம் எல்லா வர்ணங்களும் யதார்த்தமாகத் தெரியும். அவ்விதமாகவே, சாந்த புத்தியுடையவர்களாய்ச் சத்துவகுணத்தோடுகூடி இக்கிரந்தத்தைப் படிப்பவர்களெல்லோரும் துராசார துர்க்குண பாப தூரஸ்தர்களாய் மாயா விமுக்தியடைந்து, சாசுவத சுகத்தைக் கொடுக்கும் மோக்ஷத்தை அடைவார்கள். வஜ்ஜிர சூசிகோபனிஷத் ரீதியாக "தூஷணம் ஞான ஹீனானாம், பூஷணம் ஞான சக்ஷுஷாம்" (ஞானமற்றவர்களுக்கு தூஷணமும், ஞானக் கண்ணுடையவர்களுக்கு பூஷணமுமாம்). இன்னும் இக்கிரந்தத்தில் சந்திகளை விசேஷமாகச் சேர்க்காமல் எல்லோருக்கும் தெரியும்படி மிகவும் தேசிய பதங்களினால் எழுதுவதற்குக் கவனம்கொண்டேன்.

"லோகாஸ் ஸமஸ்தாஸ்ஸுகினோபவந்து."

ஓம்

ஓம் தத்ஸத். பரப்பிரம்மணே நம:

அஹிம்ஸா பரமோ தர்ம:

# ஸ்ரீ சுஷ்க வேதாந்த தமோ பாஸ்கரம்.

# பிரதம பாதம்.

---

## மங்களம்.

(சு)1. ஓம் ஓம் ஓங்காரரூபம் திரயஹமிதிச பரம்யத் சுவரூபம்தூரீயம்
திரைகுண்யாதீதநிலயம் கலயதி மனஸஸ்தேஜ சிந்தூர மூர்த்திம்
யோகிந்திரைர் பிரஹ்மரந்த்ரைஸ் ஸகலகுணமயம் ஸ்ரீ ஹரேந்
[திரேண சங்கம்
கம்கம்கம்கம் கணேசம் கஜமுக மபிதோவியாபகம் சிந்தயந்தி

(சு) 2. குரவேஸர்வலோகானாம் பிஷஜேபவரோகிணாம்|
நிதயேஸர்வவித்யானாம் தக்ஷிணாமூர்த்தயே நம:||

(சு) 3. ஓம் நமோ தேவதேவாய லோகானாம் சித்திஹேதவே|
சச்சிதானந்தரூபாய சிவாய பரமாத்மனே||

(சு) 4. பரஸ்மைபிரம்மணே பூர்ண காமாய பரமாத்மனே|
பிரபன்னபரதத்வாய வேங்கடேசாய மங்களம்||

(சு) 5. அசிந்தியாவியக்தரூபாய நிர்குணாயகுணாத்மனே|
சமஸ்தஜகதாதார மூர்த்தயே பிரம்மணே நம:||

(சு) 6. ஓம் பிரம்மணே மூர்த்திமதே சுருதானாம் சுத்திஹேதவே|
நாராயண யதீந்திராய தஸ்மை ஸ்ரீ குரவே நம:||

(சு) 7. மங்களம் குருதேவாய மஹநீய குணாத்மனே|
சர்வலோக சரண்யாய சாதுரூபாய மங்களம்||

## கிரந்த ஆரம்பம்.

அத்தியாத்ம தியானத்தில் மூழ்கினவராய், சாந்தராய், தாந்தராய், ஏகாந்தமாகப் பிரம்ம நிஷ்டையிலிருந்தவரான ஸ்ரீ மலயாள சுவாமிகளவர்களை வினய பக்தியோடு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து சிவப்பிரசாதன் என்னும் நான் வணக்கத்தோடுங் கேட்டேன்.

வினா—ஓ, மஹாத்மாவே! அஞ்ஞானாந்த காரமான கோர சம்சாரரூப ஆரண்யத்தில் தாபத்ரயாக்னியினால் எரிக்கப்படும் என்னை, தாங்கள் கருணாகடாக்ஷ வீக்ஷணாமிருதமயமான சீதள வர்ஷத்தினால் நனைத்து, சாசுவதாநந்த மோக்ஷ சுகத்தை அருளுமாறு தழுதழுக்



கும் வண்ணமாக வேண்டிக்கொண்டேன். இந்த வினாவிற்குத் தியான நிஷ்டையிலிருந்தவராய் சித்திரப் பிரதிமைபோல் இருந்ததால், பதில் ஒன்றும் சொல்லவில்லை. சிறிது நிதானித்து மறுபடியும் வினாவினேன். ஓ, புண்ணிய புருஷா! தங்களைப்போன்ற மஹாத்மாக்கள் மாத்திரம் சாசுவதானந்த நிர்வாண சுகத்தை அனுபவித்து மௌனமாயிருந்தால், எங்களைப்போன்று சம்சார சாகரத்தில் முழுகி நாசத்தை யடைபவர்கள், எவருடைய கருணையென்னும் படகில் ஏறி மோக்ஷமாய கரையைச் சேருவார்கள்?

விடை—ஓ, பாவன பவித்திரரான பிரிய சகோதரனே! நீ கேட்டதற்குத் தகுந்த பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேனே யல்லாமல் வெறுமையில்லை. நீ அதை அறியாமலிருக்கின்றாயென்று சொல்லி புன்சிரிப்போடு இனிய மிருது வசனங்களை அர்த்தகாம்பீர்யத்தோடுஞ் சொல்லலுற்றார்.

ஓ, நிர்மல ஹிருதயத்தையுடைய குழந்தாய்! பவித்திரமான ஏகாந்த ஸ்தலத்தில் மனோ வாக்கு காயேந்திரியங்களை அடக்கி ஏகாக்ர சித்தனாய் மௌனியாய் சுவஸ்ரூப ஞானத்தில் ஸ்திரமாக நிற்பதே பரமபுருஷார்த்தமான மோக்ஷ சாம்ராஜ்ய சாசுவதாநந்த சௌக்கியமென்று தெரிந்துகொள்ள வில்லையா?

இந்தப் பிரஹ்ம ஞானாம்ருதத்தைப் பருகுவதற்கு இக்காலத்தில் அநேக ஸ்திரீ புருஷர்களான முமுக்ஷுக்கள் பிரயத்தனஞ் செய்துகொண்டிருந்தாலும், விஷய வைராக்கியம் ஒன்று மாத்திரம் சம்பூரணமாக இல்லாத காரணத்தினால், விஷயானந்தத்தில் அழுந்தி நிஷ்பிரயோஜன ஜன்மத்தை உடையவர்களா யிருக்கிறார்கள். இக்காலத்திற்குச் சரியான உன்னுடைய கேள்வி மிகவும் உபயோகமாக இருக்கிறது. ஆதலால் மிகவும் சந்தோஷத்தை யடைந்தேன். இத்திவ்விய பதவியை அடைபவர்கள் சமஸ்த விஷய வாசனைகளான மனோ விருத்திகள் நாசமடைந்து, சரத்காலத்தில் மேக நீக்கத்தாலுண்டாகும் நிர்மலாகாசம்போல் பரிசுத்தமான இருதயத்தையும், அநேக ஜன்மங்களிற் செய்த அனன்ய பக்தியினால் கருணாநிதியான பரமேஸ்வரனுடைய அபார கருணையையும், நானாவித ஸத்குரு ஸேவைகளை நீண்ட காலமாகச் செய்வதாலுண்டாகும் சமதமாதி குணங்களையும் அடைவதன்றி, ஸ்ரீ குருவின் கருணாகடாக்ஷ வீக்ஷணாமிருதப் பிரவாஹத்தையும் அவர்களடைந்து இருக்கவேண்டுமென்று எம்முடைய ஆசிரியர்களான தபோநிதிகள் சொல்லுகின்றார்கள். இவ்விஷயம் சுருதி சம்மதமாக இருக்கின்றது.

(சுருதி) புத்திப்பிரசாதாச்ச சிவப்பிரசாதாத் குருப்பிரசாதாத்
புருஷஸ்ய முக்தி:

இதன் பொருள் முன் சொன்னதே.

## ஸம்ஸார விமுக்தி மார்க்கம்.

வினா—மனோ நிர்மலம், தெய்வானுக்கிரஹம், ஸத்குரு கருணை ஆகிய இம்மூன்றும் ஏககாலத்தில் ஒருவருக்கு உண்டாகமுடியுமா?

விடை—உண்மையே, இம்மூன்றும் இல்லாதவர்களுக்கு மோக்ஷம் கிடையாதே? ஒரே சமயத்தில் இம்மூன்றும் உண்டாவது அருமையானாலும், ஒவ்வொன்றையும் படிப்படியாகச் சம்பாதித்துப் பரிபூர்ணனாக வேண்டும். இக்காரணத்தினால் மோக்ஷ மார்க்கத்தில் மிருது, மந்த, தீவிரமென்று (உத்தம, மத்யம, கனிஷ்டாதிகாரிகளென்று) மூன்று வகுப்பாக மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

1. மிருது என்றால் ஒருவர் நீண்டகாலம் பிரவிர்த்தி மார்க்கத்திலிருந்து சந்மார்க்கியாய் அப்போதைக் கப்போது மாத்திரம் ஸாதுசங்கம் ஆத்மவிசாரம் என்பவற்றோடுகூடியிருந்தும் பிரபஞ்ச விஷயத்தைவிடுவது கஷ்டமாகத் தோன்றும். பகவத்கீதையில் சொல்லியிருக்கும் விதமாக நிஷ்காமகர்மம், சிரத்தை, பக்தி இவைகளோடு கூடியிருந்தால் இவருக்கு மனோநிர்மலம் உண்டாகும்.

(சு) யஞ்ஞதானதப: கர்ம நத்யாஜ்யம் கார்யமேவதத் |
யஞ்ஞோதானதபஸ்சைவ பாவனானிமனீஷிணாம் ||.

(தா) யஞ்ஞம், தானம், தபஸ், விரதம், யோகாப்பியாசம் முதலியவைகளைச் சிரத்தைபக்தியோடு ஸம்பூரணமாகச் செய்யவேண்டும். ஒருபொழுதும் விடலாகாது. இக்கர்மங்களை யெல்லாம் ஈசுவரார்ப்பண புத்தியோடு செய்துகொண்டு வர வர சமஸ்த பாபகர்மங்களும் நசித்து மனோ நிர்மலமுண்டாகும். இந்த ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி வசனத்தை மறக்கக்கூடாது. இந்த விஷயத்தைக் கருணாமூர்த்தியான ஸ்ரீ ஜகத்குரு சங்கரபாதாசாரியர்கள் ஆத்ம போதத்தில் முதலிலேயே இச் சுலோகத்தைச் சொல்லியிருக்கிறார்.

(சு) தபோபி: க்ஷீணபாபானாம் சாந்தானாம்வீதராகிணாம் |
முமுக்ஷூணாமபேக்ஷ்யோய மாத்மபோதோவிதீயதே ||

(தா) சாஸ்திரோக்தமான ஜபம், பூஜை, தியானம், தபம் இவைகளை ஈசுவரார்ப்பண புத்தியோடும் சிரத்தா பக்திகளோடும் செய்யும்பொழுது ஸமஸ்தபாபங்களும் நசித்து பிரகிருதி விகிருதிகள் நாசமடைந்து, நிர்மல ஹிருதயர்களாய்ப் பரம சாந்தர்களாவார்கள், பிறகு



ராகத்வேஷம் நசித்து, விஷயவிரக்தி உண்டாய் வைராக்கிய மடைவார்கள். பிறகு, நித்தியா நித்தியவஸ்து உதயமாகி அநித்தியமான தேக, தன, புத்ர, தாரங்களிடத்தில் துச்ச புத்தி யுண்டாகி, மோக்ஷத்தில் தீவிரதர விசாரமுண்டாகும். அப்படி இருப்பவர்கள் நிரதிசயானந்த மோக்ஷமடைவார்கள். இதின் சாரமென்னவென்றால், தபோத்யான நிஷ்டையில்லாதவர்களுக்கு மனப் பரிசுத்தமுண்டாகாது. மனோநிர்மலம் இல்லாதவர்களுக்கு சாந்தமுண்டாகாது. சாந்தியில்லாதபொழுது ராகத்வேஷங்களான அரிஷட்வர்க்கங்கள் அழியா. அரிஷட்வர்க்கங்கள் நாசமடையாதவர்களுக்கு மோக்ஷாவஸ்தை துர்லபம்.

2. மந்தனென்றால், விஷய சுகத்தில் பூர்ண நிராசைவராமலே மோக்ஷத்திற்கு அதிகமான இஷ்டமுடையவன். அவன் பாதிச் சமயத்தைச் சம்சாரத்தில் தர்மமாகச் செய்ய வேண்டிய காரியங்களிலும், மற்றப் பாதிசமயத்தை ஈசுவர தியானத்திலும் ஸாதுஸேவையிலும் காலத்தைக் கழிப்பான். இவனுக்கு யஞ்ஞவிரதாதி தபங்கள் அத்யாவசியமில்லை. ஈசுவரோபாசனை மாத்திரம் தப்பாமல் இருக்கவேண்டும். ஜப, தியான, மிதாகாரங்கள் உள்ள இவனுக்கு ஸ்ரீ கீதையில் 8 அ. 14-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறபடி அனன்யபக்தி மாத்திரம் போது மானது. இப்படியே ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரியர் அபரோக்ஷானுபூதியில் சொல்லியிருக்கின்றனர்.

(சு) நித்தியாப்யாஸாத்ருதே பிராப்திர் நபவேத்சச்சிதாத்மந: ।
தஸ்மாத்பிரஹ்ம நிதித்யாஸோ ஜிஞ்ஞாஸு: சிரேயஸேசிரம். ॥

(தா) பரப்பிரஹ்ம தியானம் அனன்ய சிந்தையோடு நித்தியம் பழகாதவனுக்குப் பிரம்ம பதவிகிடைக்காது. ஆகையால் ஜிஞ்ஞாசுவானவன் மோக்ஷ சுகத்தையடைவதற்கு, எப்பொழுதும் ஸர்வாவஸ்தைகளிலும் பரப்பிரம்மதியான நிஷ்டையிலிருக்கவேண்டும். இவ்விதமாகவே, வாஸிஷ்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(சு) யாவந்நாநுக்ரஹஸ்ஸாக்ஷா ஜ்ஜாயதேபரமேசுவராத்।
தாவந்நசத்குரும்கஸ்சித் ஸச்சாஸ்திரம்வாபிநாலபேத்.॥

(தா) எவ்வளவு காலம்வரையில் சாக்ஷாத் ஜகதீச்வரனுடைய அனுக்ரஹம் ஸம்பூரணமாகக் கிடைக்கவில்லையோ, அதுவரையில் இவனுக்கு உத்தமமான குருவாவது ஸாரமான கிரந்தமாவது அகப்படாது. இக்காரணத்தினால் கருணா சமுத்திரனான பகவானைப் பிரீதிசெய்ய பஜனை செய்யவேண்டும்.

3. உத்தமாதிகாரியின் லக்ஷணமாவது இவர் ஜன்மத்திலேயே விரக்தனாய்ப் பூர்வ ஜன்மஸம்ஸ்கார சக்தியினால் மல, விட்சேபமற்றவராய், சுக வாமதேவர்போல் பிரபஞ்சவாஞ்சை இல்லாமலிருப்பார். இவருக்கு யஞ்ஞ, தான, தபகர்ம பக்திகளைச் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. இவர் தத்வமசியாதி மஹாவாக்ய சிரவண மனன நிதித்யாசனம் செய்யவேண்டும்.

(சு) பரிபக்வம் மனோ யேஷாம் கேவலோ யம்ச ஸீத்தித:।
குருதைவத பக்தானாம் சர்வேஷாம் ஸுலபோஜவாத் ||.

(தா) மேற் சொன்ன விஷயங்களை நன்றாகச் செய்தவனுடைய ஹிருதயம் பஞ்சுபோல் பவித்திரமாக இருக்கும். இவனுக்குச் சீக்கிரமாக ஆத்ம சித்தியுண்டாகும். அக்னி பிரவேசிக்கும்பொழுது பஞ்சு எப்படி எரிந்துவிடுமோ, அவ்விதமே குரு உபதேச ஸமயத்தில் ஹிருதயக்ரந்திகள் நசித்து ஸ்வரூபசித்தி உண்டாகும். பரிபக்வமான ஹிருதயத்தையுடையவர்களுக்குத் தானாகவே இந்த ராஜயோக அமனஸ்கம் உண்டாகும். அப்படியே குருவினிடத்திலும் தெய்வத்தினிடத்திலும் பக்தியை யுடைய அநேக மனிதர்களுக்கும் பிரயாசமில்லாமலே சீக்கிரத்தில் ஆத்மசித்தி உண்டாகுமென்று அபரோக்ஷானுபூதி. இவன் சிலகாலம் ஜனக்கூட்டமில்லாத நிர்மலமான ஸ்தளத்தில் பிரணவ மந்திரத்தை மாத்திரம் ஆத்மானுஸந்தானமாகத் தியானம் செய்யவேண்டும். என்றால், நான் பஞ்சகோச விலக்ஷணன், அவஸ்தாத்ரய ஸாக்ஷி, தேகதிரயாதீதன், நித்ய சுத்த புத்த முக்தனாய் ஓங்காரலக்ஷ்யனான பரமாத்ம சுத்த சிவசுவரூபன் நானென்று தியானிக்கும் பொழுது, மல விக்ஷேப அஞ்ஞானங்களான ஹிருதய கிரந்திகள் அறுபட்டு மேகநீங்கிய சூரியன்போல் சுவயமாகவே சுவஸ்வரூப ஸ்திதியுண்டாகும்.

(சு) சிவோங்யஸ் த்வஹமேவான்ய : பிருதக் பாவம் விவர்ஜயேத்।
யச்சிவஸ்ஸோஹ மேவேதி அத்வைதம் பாவயேத்ஸதா||.

(தா) சிவ சுவரூபமான பரமாத்மாவேறு, ஜீவனான நான்வேறு, என்ற பேதத்தை நீக்கி எந்த சிவ சுவரூப மிருக்குமோ, அதுவே நானென்று அத்வைத சிந்தனை செய்யவேண்டும்.

(சு) யதா ஸர்வே பிரமுச்யந்தே காமாயஸ்ய ஹ்ருதி சிரிதா :|
அதமர்த்தியோ மிருதோ பவத் யத்ர பிரஹ்ம ஸமஸ்நுதே ||.

(தா) எப்பொழுது ஹிருதயத்திலிருக்கும் ஸமஸ்த காமங்களும் நசித்து ஆத்மதியானத்தில் இவனுடையமனம் ஸ்திரமாகுமோ, அப்போதே அவன் மர்த்தியனாயினும் அமிருதமான பரப்பிரஹ்மஸ்வரூபனே யாவான் (அதாவது தேகத்தோடு கூடி ஜீவித்திருந்தாலும் அவன் முக்தனே).



## அதிகாரிலக்ஷணம்.

1. உத்தமாதிகாரியானவன் பஞ்சுபோல் நிர்மலமாயிருப்பான். அவனுடைய மாயாமயமான ஸமஸ்த விஷயவாசனைகளும் அநேக ஜன்மங்களிற் செய்யப்பட்ட யோக தியான தபங்களினால் நசித்துவிட்டன. ஆதலால், அவனுக்கு இந்த ஜன்மத்திலேயே குரு உபதேச சமயத்தில் ஸத்யோ முக்திகிடைக்கும். எப்படிப் பஞ்சு அக்னியின் ஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் பஸ்மமாய்விடுமோ, அப்படியே இவனுடைய அஞ்ஞானம் வேரோடு நாசமாய்விடும்.

2. மத்தியமாதிகாரியானவன், உலர்ந்த விறகுபோலிருப்பான். அதில் அக்னி பிரவேசித்தாலும், சிறிது நேரம் ஊதிய பிறகு அதினின்றும் அக்னி ஜ்வலிப்பதுபோல், இவனுக்கு யோகம் தியானம் சிரவணம் மனனம் நிதித்யாஸனம் என்பவைகள் சிலகாலம் வரைவிடாமற் செய்யவேண்டுவதுண்டு. அப்பொழுது அவனும் கிருதார்த்தனாவான்.

3. கனிஷ்டாதிகாரியாவன் ஈர விறகுபோலிருப்பான். இதை வெயிலில் உலரவைக்காமல் எரியாதல்லவா? அவ்விதமாகவே இவன் ஜபம் தியானம் தபம் விரதங்கள் இவைகளை ஈசவரார்ப்பண புத்தியோடு தவறாமல் செய்யவேண்டும். அப்பொழுது இவனும் ஈச்வரானுக்ரஹத்தினால் தன்யனாவான். இம்மூவருக்கும் அளவில்லாத பூததயை ஹ்ருதயத்தில் நிறைந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் செய்யும் தப தியான யோகங்களெல்லாம் வீணாய்விடும். ஏனென்றால், எண்ணெய் இல்லாத விளக்கும் நீரில்லாத பயிரும் எப்படி நிஷ்பலமாகுமோ, அப்படி இவர்களுடைய முயற்சி முழுமையும் நிஷ்பிரயோஜனமாகும்.

வினா—ஐயா ஸ்வாமிகளே! இப்பொழுது சில ராஜயோகிகள் குரு பூஜை முதலான பரிசுத்தகாரியங்களில் ஜீவஹிம்சை செய்வதேயல்லாமல், ஸமஸ்தவஸ்துக்களையும் புஜிக்கலாம், ஜீவன் கொல்லப்படுபவனல்ல, அதின் மாம்சத்தை மாத்திரம் சாப்பிடுவது யாதொரு விரோதமில்லை யென்று சிஷ்யர்களுக்குப் போதிக்கும் பொழுது, தாங்கள் சொன்னவிதமாக பூததயை இவர்களுக்கு எங்கிருக்கின்றது?

விடை—ஆஹா! கொடிய காரியம்; இந்தப் பேச்சைக் கேட்பதற்கே கூடாதே ஐயோ! இப்படிக்கூட இருக்குமா? பெரும் பாவத்

தொழிலல்லவா, பவித்திரமான ராஜயோகியென்று சொல்லுகின்றாயே, ஸாதாரணமாக ஸம்சாரத்திலிருக்கும் கிருகஸ்தர்கள்கூட இந்தப் பயங்கரமான கிருத்தியத்திற்குப் பயப்படாம லிருப்பார்களா? கிருகஸ்தாச்ரமத்தி லிருக்கும் எவ்வளவோ புண்ணியர்கள் சாந்தர்களாய்த் தெய்வ பக்தியுடையவர்களாய் ஜீவகாருண்ய தயா ஸ்வரூபர்களாயிருக்கிறார்கள். அவ்வாறு திவ்ய ராஜயோகிகளென்று பேர் படைத்த புண்ணியர்களில் இந்தக் கொடுந் தொழில் கூடுமா? இப்படி நடந்தால் அவர்களைச் சுஷ்க வேதாந்திகளென்று வேதாந்த இரகசியத்தையறிந்த பெரியவர்கள் சொல்லமாட்டார்களா? அந்தத் துராசாரகிருத்யத்தைச்செய்பவர்களை ராஜபோகி என்றாவது ராகரோகி என்றாவது ராக்ஷஸபோகி என்றாவது பெயரிடவேண்டுமே யொழிய, தேவதைகளினால் துதிக்கத்தக்கவர்களான ராஜயோகிகளென்று சொல்லலாமா?

## அஹிம்ஸை.

வினா—பேதா பேதமில்லாமல் எல்லாவற்றையும் புசிப்பவர்களல்லவோ பெரியவர்கள்?

விடை—பேதா பேதங்களினுடைய பொருள் அளவிடமுடியாததாயிருக்கின்றது. மாம்ஸாதி வஸ்துக்களைப் புசிப்பன பருந்து முதலியன அல்லவா? அதாவது, பிணத்தைத் தின்பன பக்ஷிகளான பருந்துக்களே யல்லாமல் பெரியவர்களல்ல. இந்தப் பெரியவர்களை விடப் பருந்துக்களே மேலானவை. ஏனென்றால், பருந்துகள் நீச ஜெந்துக்களாகையினால் அவைகட்குச் சுபாவ சித்தமான நீச ஆகாரங்களைத் தின்பதினால் எவ்வித ஆக்ஷேபணையும் கிடையாது. மனிதர்கள் சிரேஷ்டர்களா யிருந்தும் சுபாவத்திற்கு விரோதமான அசுத்தாகாரங்களைக் கொள்வதால் அவர்களைக் காட்டிலும் அப்பருந்துக்களே மேலானவை. இப்படி இருப்பவர்களுக்குப் பருந்து என்ற பெயர் வருவதுமல்லாமல், இவர்களால் உலகத்தில் இனிவரும் அநேக புண்ணியாத்மாக்களான முமுக்ஷுக்களின் வைராக்கிய பக்தி ஞானங்களுக்குக் கெடுதியும் சம்பவிக்கும். இந்த ஹிம்ஸா விஷயத்தைக் குறித்து வேதசாஸ்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்பதைச் சிறிது யோசிப்போம்.

(சு) சுலோகார்த்தேன பிரவக்ஷ்யாமி யதுக்தம் கிரந்த கோடிபி:|
தயாஸமம் நாஸ்திபுண்யம் பாபம் ஹிம்ஸா ஸமம்நஹி ||

(தா) நான் அரைச் சுலோகத்தினால் கோடிக் கணக்கான வேத சாஸ்திரங்களின் சாரத்தைச் சொல்லுகிறேன். பூத தயைக்குச் சமமான புண்ணியமில்லை. பிராண ஹிம்சைக்குச் சமமான பாபமில்லையென்பது ஸ்ரீநாரத மகரிஷியின் அபிப்பிராயம்.



இந்தக்கொடுந் தொழிலான பிராணிஹிம்ஸையை நிறுத்துவதற்கு, ஸ்ரீபகவான் புத்தாவதாரமெடுத்து " அஹிம்ஸா பரமோ தர்ம: " என்னும் பேரிகை ஆரவாரித்தனர். பிராணிகளின் கொலையான எஞ்ஞாதி கர்மங்களை அழித்தனர். ஜீவ வதையாதிகளைக் கூறும் துர்மதங்களைக் கண்டித்தனர். ஸர்வ ஜனங்களின் ஸகோதர பாவத்தைப் பிரத்யக்ஷமாக அனுஷ்டித்தனர். சாசுவதாநந்த நிர்வாண சுகத்தைப் போதித்த தயைக்கடலான ஸ்ரீ புத்த தேவருடைய சரித்திரத்தை ஒருமுறை படிப்பவர்களுக்கு வேறோர்விதமான தூய்மைவேண்டுவதில்லை. இப்பொழுது உலகத்திலிருக்கும் ஜனத்தொகையில் நான்கில் மூன்று பங்கு புத்தமதத்தர்களாய், ஜப்பான், சைனா, டிபெட், பர்மா, சிலோன் முதலிய பல விடங்களில் அதிகமாய் வியாபித்திருக்கின்றார்கள்.

அஹிம்ஸை என்றால்,

(சு) கர்மணா மனஸா வாசா ஸர்வபூதேஷு ஸர்வதா |
அக்லேச ஜனனம் ப்ரோக்தா த்வஹிம்ஸா பரமர்ஷிபி: ||

(தா) மனத்தாலும் காயத்தாலும் வாக்காலும் எப்போதும் ஒரு பிராணிக்காவது துக்கத்தைச் செய்யாமலிருப்பதே அஹிம்ஸையென்று மஹாத்மாக்களான மகரிஷிகளால் சொல்லப்பட்டது. அதாவது கொடூரமான பேச்சுக்களினால் கஷ்டமும், மனத்தினால் பரத்ரோக விசாரமும், கைகால்களினால் செய்யும் கெட்ட காரியத்தால் உண்டாகும் துக்கமும் வாராமலிருக்கும்படி செய்துகொள்வதே அஹிம்ஸையின் முக்கிய தர்மமென்று சுருதிகள் சொல்லுகின்றன.

(ச) அஹிம்ஸாபரமோதர்ம: அஹிம்ஸாபரமம்தப: |
அஹிம்ஸாபரமம்தானம் இத்யூசுர்முனயஸ்ததா ||

(தா) அஹிம்ஸைக்குச் சமமான தர்மமுமில்லை. அஹிம்ஸைக்குச் சமமான தவமுமில்லை. அஹிம்ஸைக்குச் சமமான சிறந்த தானமுமில்லையென்று தபோதனர்களான முனிசிரேஷ்டர்கள் சொல்லுகின்றார்கள். அதாவது, அநேக எஞ்ஞாதி கிருதுக்களையும், கிருச்சிர சாந்திராயணாதி கோர தபங்களையும், அன்னதானாதிகளான கோடி மஹா தானங்களையும், தீர்த்த யாத்திரைகளான புண்ணிய கர்மங்களையும், கணக்கில்லாமற் செய்தவர்களானாலும் கொல்லாமை என்னும் ஓர் மேன்மையான குணம் இல்லாவிட்டால் மேற்சொல்லியவைகளெல்லாம் சாம்பலிற் பெய்த அவிஸுபோல் பயனற்றவையாய் விடும்.

(சு) பிரவிஸந்தி யதாநத்யஸ் ஸமுத்திரம் ருஜுவக்ரகா: |
ஸர்வேதர்மா அஹிம்ஸாயாம் பிரவிஸந்தி ததாத்ருடம் ||

(தா) எவ்விதம் எல்லா நதிகளும் கால்வாய்களும் நேராகவாவது வளைவாகவாவது சென்று சமுத்திரத்தைச் சேருகின்றனவோ, அவ்விதமே எல்லாத் தர்மங்களும் அஹிம்ஸையென்னும் தயாசமுத்திரத்தைச்சேருகின்றன, இது உண்மை. அதாவது உயிர்களினிடத்திரக்கம் என்னும் விரதம் எவர்களுக்கு இருக்கின்றதோ, அவர்களுக்கு வேறு தபங்களும் தானங்களும் விரதங்களும் தீர்த்த யாத்திரைகளும் யோகாப்பியாசங்களும் ஒன்றும் வேண்டுவதில்லை. அக்கொல்லாமையொன்றே சகல குணக்கேட்டையும் நீக்கும்.

(சு) ஸர்வஎஞ்ஞேஷு யத்தானம் ஸர்வதீர்த்தேஷு யத்பலம்|
ஸர்வதான பலம்வாபி தந்நதுல்ய மஹிம்ஸயா ||

(தா) அஸ்வமேத முதலிய வேள்விகளில் செய்யும் தானத்தில் எந்தப் பலம் உண்டாகுமோ ஸப்தஸாகர தீர்த்தங்களிற் படிந்தால் எப்பலமுண்டாகுமோ பசுத் தான முதலிய பதினாறு மஹாதானங்களைச் செய்வதால் எப்பலன் கிடைக்குமோ, அவைகளெல்லாம் அஹிம்ஸையினுடைய கோடி பலன்களில் ஒரு பாகத்திற்குக்கூட ஈடாகா.

(சு) அஹிம்ஸா பரமோ தர்ம: ஸ்த்வதர்ம: பிராணிஞம் வத :||

(தா.) கொல்லாமையைவிட மேலான தர்மமுமில்லை. கொலையைவிட வேறு அதர்மமுமில்லை.

(சு) ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம்பஸ்யதி யோஅர்ஜுன
ஸுகம்வா யதிவாதுக்கம் ஸயோகீ பரமோமத :

ஸ்ரீபக அ. 6. சு. 32.

(தா.) ஓ அர்ஜுன! எந்தப் புண்ணியன் ஸர்வ பூதங்களினுடைய சுக துக்கங்களைத் தன்னுடைய சுகதுக்கங்களாக ஒப்ப நோக்குகின்றானோ அவன் மேலான யோகியாக மதிக்கப்படுகின்றான். அதாவது தன் சரீரத்திற்குப் பாதை உண்டானால் அது எப்படித் தனக்குக் கஷ்டமாக இருக்குமோ, அப்படியே எல்லா ஜீவராசிகளுக்கு முண்டாகும் பாதை கஷ்டமாக யிருக்குமென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

பாதஞ்சலி யோக சூத்திரம்,

(சு) அஹிம்ஸா பிரதிஷ்டாயாம் தத்ஸந்நிதோ வைரத்தியாக :||

(தா.) எவர் ஹிருதயத்தில் அஹிம்ஸையென்னும் தர்மம் ஸ்திரமாக இருக்குமோ, அவருடைய எதிரில் குரூரமான புலிகளும் சிம்மங்



களும் கொடிய சர்ப்பங்களுமான ஜந்துக்களுங்கூட விரோதமில்லாமல் விளையாடும். (விசேஷார்த்தம்) தன்னைப்போல் எல்லா ஜந்துக்களையும் ஸமமாகப் பார்ப்பவர்களை எந்தச் சீவராசியும் உபத்திரவம் செய்யமாட்டாது. பூதப் பிரேத பிசாசு காளி பேதாள முதலாய பூத கணங்களும் எமதூதர்களுடன் பிரியமாக நேசிக்கும். இதனாற்றான் பூர்வமிருந்த ரிஷி ஆச்ரமங்களில் இயற்கைக்கு மாறாகப் பசுவுடன் புலியும் சிம்மத்துடன் யானையும் பாம்போடு தவளையும் பூனையோடு எலியும் சகோதரர்கள்போல் ஒன்றாக வசித்த சங்கதி சாஸ்திரத்தில் காணப்படுகின்றது.

(சு) அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதஞ்ச ஸம்ஸ்ரிதா:
மாமாத்ம பரதேஹேஷு பிரத்விஷந்தோ அப்யஸூயகா :

ஸ்ரீ பக. அ 10. சு 15.

(தா.) அகந்தையையும் பலத்தையும் இறுமாப்பையும் காமத்தையும் கோபத்தையு முடையவர்களாய்த் தம்முடைய தேகத்திலும் பிறருடைய தேகங்களிலும் ஒரே பிரகாரமாயிருக்கும் என்னைப் பகைப்பவர்கள், ஸத்புருஷர்களிடத்தில் அசூயை உடையவர்கள் ஆசுர இயல்பினர். அதாவது இந்த ஜந்துக்கள் தங்களுடைய ஆகாரத்திற்காக நிருமிக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லி பலாத்காரமாக ஹிம்ஸிப்பவர்கள் அஸுர ஸ்வபாவிகள் என்று கிரகித்துக்கொள்ளுங்கள்.

(சு) தானஹம் த்விஷத: குரூரான் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷீபாம் யஜஸ்ர மசுபா நாஸுரீஷ்வே வயோநிஷு

(தா.) அப்படி ஸர்வ ஜீவருடைய ஹிருதயத்திலிருக்கும் என்னை ஹிம்சிப்பவரும் கொடியவருமான அக்கடைப்பட்ட மனிதர்களை ஜனனமரண துக்க வடிவமான கோர ஸம்ஸாரத்தில் மிகத் துக்ககரமான அசுரப் பிறவிகளில் அடிக்கடி போடுகின்றேன்.

(சு) ஆஸுரீம் யோநிமாபன்ன: மூடாஜன்மனி ஜன்மனி |
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ||

(தா.) ஓ, அர்ஜுன! அப்படி ஆசுர யோனியிற் பிறந்த பிராணி ஹிம்ஸகர்களான மூடர்கள் பிறவிதோறும் என்னையடையும் மார்க்கத்தைத் தெரியாமல் மயங்கியவராய் அதனினும் கீழான கதியையடைந்து நீண்ட காலம் துக்கம் நிறைந்த தீய நரகத்தை யடைவார்கள். இவர்கள் அசுரசுவபாவ முடையவர்களென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அபிப்பிராயம். அன்றியும், பூர்வகாலத்தில் தர்மராஜாவானவர் தேவகுருவான பிருகஸ்பதியைப் பார்த்து, ஸ்வாமி! எப்

பொழுதும் மனதைப் பரமாத்மாவினிடத்தில் ஐக்கியப்படுத்தித் தியானிப்பதும், ஸர்வேந்திரியங்களையும் அவைகளுடைய விஷயங்களில் போகவொட்டாமல் தடுப்பதும், ஹிம்ஸை செய்யாமலிருப்பதும், விதிப்பிரகாரம் குருவைப் பூஜிப்பதும், எப்பொழுதும் ஸ்வதர்மானுஷ்டானத்தைவிடாமல் அநுசரிப்பதும், தபம் செய்வதும் ஆகிய இவ்வறுவகை விதிகளுள் மிகவும் சிரேஷ்டமானது எது? என்று கேழ்க்க,

பிருகஸ்பதி சொல்லுதல்:—

ஓ, தர்ம ராஜவே! நீ கேட்ட இவ் வாறும் நல்லமார்க்கங்களாகவே யிருக்கின்றன. ஆனாலும் அஹிம்ஸை என்பது மற்ற ஐந்தையும்விட மிகவும் பவித்திரமானது. ஆதலால் எல்லா உத்தம தர்மங்களையும் இது பிரகாசிக்கச் செய்கின்றதென்று சொன்னார். இவ்வாறு சுராசாரியர் சொல்லிப்போய்விட்டார்.

பிறகு ஒருநாள் தர்ம ராஜாவானவர் பீஷ்மாசாரியரை அணுகிப் பிதாமகரே! அகில தேவதைகளும், பூமிதேவதைகளும், முனிச் சிரேஷ்டர்களும் அஹிம்ஸை யென்னும் தர்மத்தையே விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அதனுடைய இரகசியத்தைத் தெளிவாக எனக்குத் தெரிவித்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க,

பீஷ்மர் சொல்லுதல்:—

தர்ம நந்தன! யானையினது பாத அடிக்குள் எல்லா ஜந்துக்களினுடையஅடிகளும்எப்படிஅடங்கிவிடுமோ, அப்படியே தர்மங்களெல்லாம் அஹிம்ஸை என்பதற்குள் அடங்கிவிடுகின்றன, இது யதார்த்தம்.

இதுவுமல்லாமல், மானவநாதா! பாத்திரர்களாக யிருப்பவர்களுக்கு தன் சக்திக்கேற்ப தானம் கொடுப்பதும், சுவதர்மத்தை விடாமலிருப்பதும், காயக்கிலேசங்களைப் பொறுத்துக் கொண்டு உபவாசங்கள் செய்வதும், சிரத்தையோடு எஞ்ஞங்கள் செய்வதும் ஆகிய சத்காரியங்களெல்லாம் அஹிம்ஸை என்னும் தர்மத்திற்கு ஸமானமானவையென்று வேதார்த்தத்தை யறிந்த பெரியவர்கள் சொல்லுவார்கள். தானம், தபம், தர்மம், யஞ்ஞம், சௌசம், மந்திரஜபம், அநுஷ்டானம், ஸத்தியம் இவையெல்லாம் ஹிம்ஸையற்ற காரியங்களானமையால் அஹிம்ஸா சுவரூபங்களென்று பெரியவர்கள் சொல்லுவார்கள்.

ஓ, தர்ம ராஜா! நூறு வருஷங்கள் மிகவும் கோரமான தபஸைச் செய்வதினால் எவ்வளவு பலமுண்டோ, அவ்வளவு பலன் மாமிச பக்ஷணத்தை விடுவதினால் உண்டாகுமென்று தர்ம சாஸ்திரமறிந்த பெரியவர்கள் சொல்லுவார்கள்.



தவத்தினாலும், தியானத்தினாலும் பிரஹ்மலோக வாசம்கிடைத்தாலும் கிடைக்கலாம், கிடைக்காமற் போனாலும் போகலாம், மாம்ச பக்ஷணத்தைவிட்ட புண்ணியாத்மாக்களுக்கு அந்தப் பிரஹ்மலோகம் தவறாமல் சித்திக்குமென்று ஆரியர்கள் சொல்லுகிறார்கள். இப்படிப் பீஷ்மர் தர்ம ராஜாவிற்குச் சொன்னதாக மஹாபாரத மோக்ஷ தர்மத்தில் காணப்படுகின்றது.

இன்னும் மநு ஸ்மிருதியில்:—

(சு) வர்ஷே வர்ஷே அஸ்வமேதேன யோயஜேத சதம்சமா: |
மாம்சானிச நகாதேத் யஸ் தயோ: புண்யபலம்ஸமம் ||

(தா.) எந்தப் புருஷன் நூறு வருஷங்கள் கிரமமாக நூறு அஸ்வமேதயாகங்களைச் செய்வானோ, எந்தப் புருஷன் மாமிசப் புசிப்பில்லாமலிருப்பானோ, அவர்களிருவருடைய பலனும் ஸமானமென்று சொல்லியிருக்கிறது.

ஆதலால், பிராணிஹிம்ஸையாவது அதைப் புசிக்கும் சுவபாவமாவது மேலான மானவ ஜன்மத்திற்கு விதிக்கப்படவில்லை. ஆயிரம் சொல்லியென்! பசு, பக்ஷிகளிலும் உத்தம ஜந்துக்களுக்கு மாமிசப் புசிப்பு காணப்படவில்லை. உயர்ந்த ஜந்துக்களான பசு, மான் யானை குதிரை முதலிய ஜந்துக்களும் புல்லையும் இலைகளையும் தான்யங்களையும் மாத்திரம் புசிக்குமே யொழிய நீச ஜன்மங்களிற் ஜனித்த நாய் நரி புலி முதலிய நீசஜந்துக்களைப்போல் அவைகள் மாம்சத்தைத் தின்னுவல்லவா? அப்படியே, பக்ஷி வர்க்கத்திலும் அன்னம் குயில் கிளி முதலிய உயர்ந்த பக்ஷிகள் இந்த நீசவிருத்தியை அப்பியசிக்கா. அவற்றிலும் காக்கை, பருந்து, கழுகு முதலிய நிக்ருஷ்ட பக்ஷிகள் மாத்திரம் இந்த நீசவிருத்தியை அப்பியசிக்கின்றன. இவ்வித மிருக்க, சிரேஷ்டமான மானவ ஜன்மமெடுத்து அதிவிருந்து பவித்திரமான வேதாந்த விசாரம் செய்பவர்கூட யோசிக்காமல் இக்குரூர கிருத்தியத்தைச் செய்கின்றார்களே, எவ்வளவு ஆச்சரியம்!

## ஜீவ ஹிம்ஸையின் பேதங்கள்

வினா ||. ஓ, ஸ்வாமி! ஜீவன் இல்லாத வஸ்து ஒன்றுவது இல்லை யல்லவா? அரைக்கீரை கத்திரிக்காய் முதலிய கரிகளில் ஜீவன் இல்லையா? இவைகளைப் புசிப்பவர்களுக்கு ஜீவ இம்ஸை இல்லையா?

விடை ||. ஓ, சற்குண சீலா! அவைகளிலும் ஜீவன் இருந்தாலும் தாரதம்மிய மிருக்கின்றது. பல மூலாதி பக்ஷணத்திற்கு சாஸ்

திரம் குற்றம் சொல்லவில்லை. ஆதலால், சாஸ்திரமே பிரமாணம். இதுவுமல்லாமல், பல மூலாதிகளில் ஜீவ சக்தியிருந்தாலும் அவை ஜடம். அவைகளுக்கு ஜீவ ஜந்துக்களைப் போல் மனுதிய அந்தக்கரணமும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுமில்லை. இந்திரியங்கள் எப்பொழுதில்லையோ, அப்பொழுது சுக துக்கங்கள் உண்டாவதற்கு அவகாசமில்லை. ஸஸ்யம் (பயிர்) என்பதற்கு பல பத்ர விஷமாய் இவ்விடத்தில் சொன்னதே யன்றி, மஹாசயரான போஸ் என்பவரின் ஸைன்ஸ் சாஸ்திரம் சொல்லும் மர முதலிய வற்றின் சம்பந்தமானதல்ல. இவ்விதம் சொல்லாவிட்டால் இப்படிப் பட்டவர்களுக்கு மனதிற் பதியாதாகையால் இங்ஙனம் சொல்லப்பட்டது. திருஷ்டாந்தமென்ன வென்றால், ஒருவனை வைத்தியர் மூர்ச்சிக்கச் செய்து ஆயுதப் பிரயோகம் செய்கின்ற சமயத்தில் அவனுக்குத் துக்கம் தெரியாதல்லவா? அப்பொழுது அவனிடத்தில் ஜீவன் இல்லாமலில்லை. மேலும் சரீரத்திலிருக்கும் நக மயிர்களை வெட்டும்பொழுது துக்கம் தெரியாமலிருக்கின்றது. நககேசங்கள் கூட பயிர்கள் போல் உற்பத்தி நாசங்களை அடைகின்றன. பயிர்களினுடைய ஸ்திதியும் அப்படியே, ஜந்துக்கள் அப்படியல்ல. மனிதர்களிடத்தில் எவ்விதம் இந்திரியாதி சுகங்களிருக்குமோ, அவ்விதமே மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் இருக்கின்றன. அவைகளுக்குங்கூட ரதிக்ரீடாசுகம், புத்திரவாச்சல்யம், மரணபீதி, சுகாபிலாஷை முதலிய எல்லாம் இருக்கின்றன. இதுவுமல்லாமல் அந்த ஜந்துக்கள் மனிதர்களைப் போல், ஸ்திரீ புருஷ ஸம்யோகத்தினால் உற்பத்தியாவனவே தவிர, பயிர்கள் போல் உற்பீஜங்களல்ல. பயிர்ப் போஷணம் முக்கியமாக சூர்ய சக்தியினால் விருத்தியாகின்றது, மற்றவைகளின் (பூமி, ஜலம், வாயுக்களின்) சகாயம் சொற்பமாக இருக்கும். சூர்யனிடத்திலிருக்கும் சக்தி பயிர்களிடத்தில் அதிகமாக இருப்பதினால், அதைப் புசிப்பவர்களுக்கு அதிகமான ஞானம் உற்பத்தியாகின்றது. எப்படி யென்றால், சூர்யன் இருளை அழிப்பதுபோல், சாகா (காய் இலை முதலிய) பக்ஷணத்தினாலுண்டாகும் சக்தி அஞ்ஞானமான தமோ குணத்தை அழித்துவிடும். இதுவுமல்லாமல், பயிர்களுடைய ஜீவ சக்திக்கும் ஜீவர்களுடைய ஜீவ சக்திக்கும் எள்ளுக்கும் மலைக்கும் பேதமிருப்பது போல் பேதமிருக்கின்றது. ஒரு மரத்தின் சாகோப சாகைகளை லக்ஷம் பாகங்களாகச் செய்து விட்டால் அவை யெல்லாம் விருத்தியாகும். அவ்விதமாகவே, வேர்களைக் கூட அநேக பாகங்களாகச் செய்தாலும் அவற்றினின்றும் பெரிய மரங்கள் உண்டாகும்.



அவ்விதம் ஜந்துக்களின் கைகால்களைத் துண்டித்தால், அவைகளிலிருந்து மிருகங்கள் விருத்தியாகுமா? ஆகா. அதுபோல் பிராணி ஹிம்ஸையின் ஆகாரத்தினால் உண்டாகும் பாபம் இப்பொழுது காணப்படாவிடினும், அதனால் மற்றொரு பெரிய பாப முண்டாகும். எப்படி யென்றால், எந்த வஸ்து புசிக்கப் படுமோ, அதனிடத்திலிருக்கும் சாரம், ரக்தமாய்ச் சரீரமாகப் பரிணமிக்கும். அச்சரீரத்தை அனுசரித்து சத்வ ரஜஸ் தமோ குணங்களோடு மனது வேலையைச் செய்யும். சத்துவ குணத்தினால் ஞானமும், ரஜோ குணத்தினால் கர்மமும், தமோ குணத்தினால் அஞ்ஞானமும் உண்டாகும். இதற்கு ஒரு திருஷ்டாந்தத்தைச் சொல்லுவோம். பெரிய ஆரண்ணியத்தில் சஞ்சரிக்கும் யானையைப் பிடித்து இரண்டு மூன்று வருஷம் அதைப்பழக்கினால், அந்த மகா பலமான மிருகமும் மனிதனுக்கு சுவாதீனப்பட்டு இட்ட வேலைகளைச்செய்கின்றதல்லவா? அப்படி, ஒரு சிறிய ஜந்துவான புலியைச் சுவாதீனப்படுத்த முடியுமா? இதிலிருக்கும் இரகசியம் என்ன வென்றால், யானை பெரிய ஜந்துவானாலும் சாத்வீகாம்சமான பத்ர திருணங்கள் அதற்கு ஆகாரமாயிருக்கின்றன. ஆதலால், அது கிரகிக்கும் சக்தியான புத்தியையும், மகா சாந்த குணத்தையும் பெற்றிருக்கின்றது. புலியோ க்ரூரமான மாம்ச பக்ஷணத்தினால் அதன் க்ரூர சுவபாவம் எவ்வளவும் எப்பொழுதும் மாறவே மாறாது. ஆகையினால், மோக்ஷத்திற்குச் சாந்தமே பிரதான குணமாயிருக்க வேண்டும். ஆதலால் முமுக்ஷுக்கள் நிச்சயமாகச் சாத்வீக ஆகாரத்தைப் புசிக்கவேண்டும். இல்லாவிட்டால் மனது சிறிதளவும் சுவாதீனத்தில் நிற்காது. இது மிகவும் இரகசியமான விஷயம். இதுவுமல்லாமல், மாம்சம் ஸ்திரீ புருஷர்களுடைய சுக்ல சோணிதத்தினின்றும் உற்பத்தியானது. அக்காரணத்தினால் மிகவும் அசுசியாக இருக்கின்றது. இதனுடைய இரகசியத்தைச் சிறிது சொல்லுகிறேன் சிரத்தையோடு கேள். ஒரு ஸ்திரீ, ருதுவானால் நான்கு நாள்வரையில் அவளைத் தொடுபவர்கள் ஸ்நானம் செய்ய வேண்டும். காரண மென்ன வென்றால், அவளுக்கு ருது காலத்தில் ரக்தம் பாய்வது மிகவும் தோஷகரமாக இருக்கின்றது. தொடுபவர்கள் கூட ஸ்நானம் செய்யும்படி தோஷங்களிருப்பதானால், அந்த ரக்தத்தைப் பானம் செய்பவர்களின் அசுசியை என்னவென்று சொல்லக்கூடும். அதாவது, ருது காலத்திலிருக்கும் ரக்தமும் புருஷனுடை ரேதஸ்ஸும் சேர்ந்து பிண்டம் உற்பத்தியாகின்றது. இந்த விதி மனிதர்களுக்கு இருப்பது போல் ஜந்துக்களுக்கும் இருக்ன்றது. இது சாதாரணமான பசு எருமை ஆடு முதலிய ஜந்துக்களுக்

குக் கர்ப்ப காலத்தில் யோனி துவாரத்தில் வெளிமுகமாகக் காணப்படுகின்றது. இதனாற்றான் மனோமாலின்னியத்தை உண்டாக்கும் வஸ்துக்களைத் தின்பவர்களுக்குப் பரமாத்ம தியானத்தில் மனம் நிலையாக நிற்காது. இதைக் குறித்தே, மது மாம்சாதிகளைப் புசிப்பவர்கள் ராஜயோகிகளல்லவென்று சொல்லி இவர்களுக்கு இராக்ஷஸயோகிகளென்று பூர்வகாலத்தில் பெயர் வைக்கப்பட்டது. ராக்ஷதர்களுள்ளும் இராவண கும்பகர்ணாதியர்கள் மஹா தபோதனர்களே, அணிமாதி அஷ்ட சித்திகளையும் அடைந்தவர்களே, மூன்று உலகங்களையும் ஜயித்தவர்களே, ஒன்பது கோடி சிவாலயங்களைப் பிரதிஷ்டித்துப் பூசித்தவர்களே, இப்படி இருப்பவர்களை ஸ்ரீராம தாரகா பரப்பிரம்ம கருணா மூர்த்தி இவர்களை வம்சத்தோடு ஒழிக்க வேண்டியதேன்? இச் சங்கதியைச் சிறிது விசாரிக்கலாம். பவன புத்திரரான பரம பக்த ஆஞ்சநேயர் இல்ங்கைக்குப் போய் வந்து இலங்கைத் தீவின் வைபவத்தை ஸ்ரீராமருக்கு விண்ணப்பித்தார். அதாவது அந்த ராக்ஷஸர்களுடைய வீடுகள்தோறும் நடக்கும் வேத பாராயணமும் ஹோமங்களும் சிவார்ச்சனைகளும் தியான ஜபங்களும் சொலற்கரியவை, அவர்களெல்லோரும் பரம சிவனது பக்தர்களென்று அவர்களுடைய பிரபாவத்தைச் சொன்னார். அதைக்கேட்ட மாத்திரத்தில் கருணா நிதியான ஸ்ரீராம சந்திரர், இப்படியிருக்கும் பரம பக்தர்களான லங்கையிலுள்ள ராக்ஷதர்களை நான் எப்படி சங்கரிப்பேனென்று தன்னிடமிருந்த தநுவை எறிந்து விட்டார். பக்த வத்ஸலரான ஸ்ரீ இராம சந்திரருடைய அபாரமான தயையைப் பார்த்து, சுக்ரீவன் ராக்ஷஸ ஸம்ஹாரத்தைச் செய்ய வேண்டுமென்ற மனோ அபிப்பிராயத்தோடு, ஆஞ்சநேயருடைய முகத்தைப் பார்த்தார். அப்போது அந்தப் புத்திமானான ஆஞ்சநேயர் அதைக் கண்டுகொண்டு ஸ்ரீராமரவர்களோடு ராக்ஷதர்களுடைய ஆகார விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தார். ஓ, மஹாப் பிரபுவே! அவர்கள் ஜீவ காருண்ணிய மற்றவர்கள், மஹா குரூர கிருத்யங்களான பிராணி ஹிம்ஸையைச் செய்து சாப்பிடுபவர்கள், சத்தியம், ஆசாரம் இல்லாதவர்கள் என்று சொன்னவுடனே துஷ்டர்களைத் தொலைத்து சிஷ்டர்களைக் காப்பவரான ஸ்ரீ இராம சந்திர மூர்த்தி ஆஹா! பிராணி ஹிம்ஸகர்களான அத்தீயோர்களை ஒரே அஸ்திரத்தினால் வேரோடு நாசம் செய்கிறேனென்று சொல்லி, வில்லைக்கையில் சந்தோஷத்தோடு ஏந்தினார். இவ்விஷயம் இங்கு வரக் காரணமென்ன வென்றால், இப்பொழுதிருக்கும் சுஷ்க வேதாந்திகளில் சிலர் சாஸ்திர பாண்



டித்திய முடையவர்களாகவும், மற்றும் சிலர் பரமேசுவரலிங்கத்தைப் பக்தியோடு கழுத்தில் அணிந்து கொண்டிருப்பவர்களாகவும், இன்னும் சிலர் யந்திரங்களைப் பூஜிப்பவர்களாகவும், மற்றும் சிலர் ஜடை முண்டன காஷாய பஸ்ம ருத்ராக்ஷ தாரிகளாகவுமிருந்தாலும், ஜீவகாருண்ணியம் ஒன்று மாத்திரம் இல்லாத காரணத்தினால் ஜகதீச்வரனுடைய கருணாகடாக்ஷத்தை இவர்கள் பெற இயலாது. இவர்கள் நிச்சயமாகக் கோர ஸம்ஸாரத்தில் வீழ்வார்கள். எமதூதர்கள் இவர்களை விடமாட்டார்கள். இப்படி இருப்பவர்கள், ராகிகளேயொழிய யோகிகளாக மாட்டார்கள். இவர்கள், தாங்கள் நாசத்தையடைவது மல்லாமல், இதரர்களான முமுக்ஷுக்களையும் நாசமடையும்படிச் செய்வார்கள். எப்படி கலரா, பிளேக் முதலிய தொத்து வியாதிகளை உடையவர்களைச் சமீபித்தவரும் மரணப்படுவர்களோ அப்படி போலாகும். ஆகையால், முமுக்ஷுக்கள், இவர்கள் தமது சமீபத்தில் வரும்பொழுது மிகவும் ஜாக்கிரதையோடிருக்கவேண்டும். இவர்களிற் சிலர் வேதாந்த யுக்திகளை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கலாம். இவர்கள், வித்தையில்லாமல் வைராக்ய பக்தியோடு கூடி சன்மார்க்கத்தைச் சார்ந்து நிற்கும் சில, பண்ணிய புருஷர்களிடம் சென்று, சுஷ்க வேதாந்தத்தால் குதர்க்க வாதத்தைச் செய்து அவர்களுடைய நிஷ்டையைப் பங்கப்படுத்துவார்கள். இவர்களுடைய விவாதம் என்னவென்றால், ஜபமேன்? தபமேன்? தியானமெதற்கு? இவற்றாற்பயனென்? சொன்னார் யார்? எந்தச் சாஸ்திரத்திலிருக்கின்றது? ஏன் மணம் புரிந்து கொள்ளலாகாது? மதுமாம்சாதிவஸ்துக்கள் ஈஸ்வரனால் ஏன் படைக்கப்பட்டன. தின்பதற்கல்லவா? நான் ஞானியல்லவா? நான் எல்லாவற்றையும் தின்பதைப் பார்க்கவில்லையா? என்னைப் போலிருப்பவருக்கு மோக்ஷம் கிடைக்காதா? என்குருவான இன்ன மல்லையா அவர்களும் அவர் குருவான தொம்மர கொண்ட பொம்மையா அவர்களும் காக்ஷிததீக்ஷிதர்களுமாகிய இவர்களெல்லோரும் மோக்ஷத்தை யடையவில்லையா? இவ்வாறு அநேக விதம் விருத்தளான ஓர் வேசி ஸ்திரீயானவள் வேசியா விருத்திக்கு வல்லமையில்லா விட்டாலும் தனத்திற்காகக் கை கால் கண் முகம் இவைகளால் அநேக வித காமனாட்டியத்தைச் செய்வாளோ, அதுபோல் இவர்களும் வெட்கமில்லாமலே ராஜயோகிகளென்று பெயர் படைத்துக் கொண்டு வைராக்கியத்தோடு நெறியாக இருக்கும் ஞான விருப்ப முடையவர்களைப் பாழ்படுத்துகின்றார்கள். பொருளைப் பறிப்பதற்கு சிஷ்யர்களை அதிகமாகச் சேர்க்க அவ்விதமான சேஷ்டைகளைச் செய்கிறார்கள்.

இவ்விதம் சொல்லுவது சாது தூஷணமென்று கனவிலும் நினையாதீர்கள். உலகத்தின் தற்கால நிலைமையை நோக்கினால் துக்கமாக விருப்பதால் இப்படிச் சொல்லவேண்டி யிருக்கிறது. அதற்காக மிகவும் விசாரப்படுகிறோம்.

## மது மாம்ச நீக்கம்

வினா—ஓ ஸ்வாமி? மதுமாம்ச முதலிய புசிப்பற்றவர்கள் ஞானிகள் என்று சொல்லுகின்றீர்களே இப்பொழுது உலகத்திலிருக்கும் சூத்திரர்களிற் சிலருக்கும், வைசியர்களுக்கும், பிராமணர்களுக்கும், மற்றையோருக்கும் அவ்விதப் புசிப்பில்லாவிட்டாலும் அவர்கள் ராகத்வேஷம் நசித்து சாந்தர்களாயும் பக்தர்களாயுமிருக்கக் காணப்படவில்லையே, ஆதலால் புசிப்பவர்களை விட இவர்களுக்கு உயர்ந்த குணங்கள் என்ன இருக்கின்றன?

விடை—அன்பனே! இவ்விஷயத்தைச் சற்று ஊன்றி நோக்கிலை. ஆகாரசுத்தி ஒன்று மாத்திரம் போதாது. அதற்குச் சரியான மனோநிர்மலமும் கூடவே இருக்க வேண்டும். ஆகாரம் சிறிது சகாயமாக இருக்குமே யல்லாமல் வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஆகாரசுத்தியினால் ஸ்தூலதேகம் பரிசுத்தமாகுமே தவிர மனோமயமான சூக்ஷ்மதேகம் பரிசுத்தமாகாது. மோக்ஷத்திற்கு மனோநிர்மலம் மாண்பானது. ஆதலால் பிரம்ம சரியம், குருதேவதைகளின் பூஜைக்குரிய சாத்விக ஆகாரம் பிராணாயாமாதியோகம் இவற்றால் ஸ்தூலதேகம் பரிசுத்தமாகும். தெய்வ பக்தி பிரணவாதி மந்திரங்களின் ஜபம் ஸத்தியசம்பாஷணம் ஏகாந்தவாசம் மனோநிக்ர முதலிய சாதனங்களினால் மனோமயதேகம் பரிசுத்தமாகும். இவ்விரண்டும் எவருக்குப் பரிசுத்தமாக விருக்குமோ அவர்களுக்கு மாத்திரம் ஞானமுண்டாகும். ஆதலால், இவ்விரண்டும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். எவ்வாறெனின், ஒரு லாந்தரினுள்ளே அமைந்திருக்கும் கண்ணாடியும் சிம்னியுமாகிய இரண்டும் பரிசுத்தமாக இருந்தால் மாத்திரம் விளக்கின் வெளிச்சம் பிரகாசிக்கும். லாந்தரிலிருக்கும் கண்ணாடிகள் நிர்மலமாயிருந்தும் சிம்னி புகையினால் கப்பப்பட்டிருந்தால் விளக்கின் வெளிச்சம் பிரகாசிக்காது. ஆகவே ஸ்தூல சூக்ஷ்ம தேகங்களிரண்டும் பரிசுத்தமாக இருந்தால் மாத்திரம் பூர்ண விக்ஞான போதம் உதயமாகும். இக்காரணத்தினால் யோகமெனவும் ஞானமெனவும் இரண்டு மார்க்கங்கள் மகரிஷிகளினால் ஏற்படுத்தப்பட்டன. யோகாப்பியாசத்தினால் காய சுத்தியும் ஞானாப்பியாசத்தினால் ஆத்ம (மன) சுத்தியுமுண்டாகும். அப்பொழுதுதான் ஒருவன் பரிபூர்ண ஞானியாவான்.



(சு) துவௌக்ரமௌ சித்தனாசஸ்ய யோகம் ஞானஞ்ச ராகவ |
யோக: தத்விருத்தி ரோதோஹி ஞானம் சம்ய கவேக்ஷணம்||.

(தா) ஓ, ராகவா! மனோ நாசனத்திற்காக இரண்டு மார்க்கங்களிருக்கின்றன. அவை ஞானமும் யோகமுமாம். யோகத்தினால் மனோ நிக்ரஹமும், ஞானத்தினால் சாக்ஷாத் தரிசனமும் கிடைக்கும் என்று ஞான வாசிஸ்டம்.

(சு)-|. நாஸ்தி தியானம் வினா ஞானம் நாஸ்தி தியான மயோகின: |
தியானம் ஞானஞ்ச யஸ்யாஸ்தி தீர்ணஸ் தேன பவார்ணவ:||.

(தா). தியான மில்லாதவனுக்கு ஞானமிராது. யோகாப்பியாசம் இல்லாதவனுக்கு மனோஸ்திரமான தியானம் உண்டாகாது. தியானமும் ஞானமும் எவனுக்கிருக்குமோ, அவன் பவக்கடலை எளிதாகத் தாண்டுவான் என்று ஸ்காந்தம். எப்படி ஒரு படகால் நதியைத் தாண்டுவதற்கு துடுப்பும் சுக்கானுமாகிய இரண்டும் இல்லாவிடில் முடியாதோ, துடுப்பு மாத்திர மிருந்தாலும் அது சரியாகச் செல்லாதோ, துடுப்பில்லாமல் சுக்கான் மாத்திர மிருந்தாலும் செவ்வையாகச் செல்லாதோ, ஆதலால் இரண்டும் வேண்டுமோ, எப்படி ஒரு பறவை ஆகாயத்தில் எளிதாகச் சஞ்சரிக்க வேண்டினால் இரண்டு சிறகுகளும் புச்சமும் (வாலும்) வேண்டுமோ இல்லாவிடில் சாத்தியமாகாதோ, இம் மூன்றில் ஒன்று பங்கப்பட்டாலும் கீழே விழுந்து விடுமோ, அப்படி ஜீவனான பறவைக்கு மோக்ஷமென்னும் ஆகாயத்தில் சஞ்சரிப்பதற்கு வைராக்ய மென்ற சிறகு ஒன்றும், ஞானமென்ற மற்றொரு சிறகும், யோகமென்றவாலும் சம்பூரணமாக இருக்கவேண்டும். எல்லா மகரிஷிகளுக்கும் இம்மூன்றும் இருந்தனவாகக் காணப்படுகின்றது. இந்த மூன்றில் ஏதாவது ஒன்று குறைந்தால் ஸம்ஸாரக் கடலில் வீழ்ந்து பரிதபிப்பான் ஜீவன்.

## மாம்ச நீக்கத்தால் வரும் சுகம்.

மாம்சத்தினால் வளர்ச்சி யடைந்த இச்சரீரம் அதை விட்டால், நோய் வருமென்று சிலர் சொல்லுகிறார்கள், அது உண்மையா?

ஓ, சற்குண சாலியே! இச்சரீரம் முதன் முதல் மாம்சத்தினால் பெருக்கத்தை யடையவில்லை. சாதாரணமாய் ஐந்து வருஷம் வரையில் பாலினால் விருத்தி யடைந்த பிறகு சொற்ப காலம் அன்னத்தினாலல்லவா ஜீவிக்கின்றது. அவ்வாறிருக்க அந்த யுக்தி எப்படிச் சரியாகும். அது இருக்கட்டும், இப்பொழுது பிரத்யக்ஷானுபவமாகச் ஸைன்ஸ் சாஸ்திர மறிந்தவர்கள் எந்திரத்திலிட்டு வஸ்துக்களைச் சோதிக்கும் பொழுது, மாம்சத்தை விட கோதுமை ரொட்டி

துவரம் பருப்பு உருளைக் கிழங்கு இவைகள் எண் மடங்கு அதிகமாகப்புஷ்டியைத் தரத்தக்கவையென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இதைப் பிரத்யக்ஷமாக இப்பொழுதும் பார்க்கலாம். மாம்சபக்ஷணத்தைவிட்டால் நோய் வருமென்றும் பங்கி அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை விட்டவர்களுக்குச் சரீர பாதை உண்டாகுமென்றும் சுஷ்க வேதாந்திகள் சொல்லும் வசனங்கள் சத்தியமாகா. திருடர்களுக்குத் தலைவனான ஒருவனுக்குத் தினந்தோறும் மாம்சம் சாராயம் சுருட்டு பொடி தாம்பூலம் முதலிய துராசாரங்களிருந்தும் அவனைப் பிடித்துச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட பொழுது அவைகளில்லாமையால் அவன் இறந்து விடுவானா? இந்தத் துர்விருத்திகள் அப்பொழுது எங்கே போயின? இவ்விதப் பேச்சுக்களெல்லாம் குதர்க்கங்களே யல்லாமல் வேறொன்றுமல்ல. வாஸ்தவமாக இந்தச் சுஷ்க வேதாந்திகளுக்கு இவைகளெல்லாம் தப்பு மார்க்கங்களென்று மனதில் நிச்சயமாகத் தெரிந்தும் துர் யுக்திகளினால் மூலை முடுக்களிலிருந்துகொண்டு பேதையர்களுக்குப் போதிப்பார்களே யன்றி பகிரங்கமாக வெளியில் வந்து சொல்ல மாட்டார்கள். இவர்கள் எத்தகையரென்றால், லோபிகளான சில வக்கீல்கள் பண ஆசையினால் பொய்யான கேஸைப் பிடித்து மெய்யாக நடந்ததல்ல வென்று தெரிந்தாலும் பல விதமான குயுக்திகளினால் தம் கட்சியை ஸ்தாபிக்க இன்ன நெம்பர் புத்தகத்தில் இன்ன ரூல் பிரகாரம் இது சரியென்று வாதிப்பது போல் இவர்களும் அவ்வவ்விடங்களிலிருந்து கொண்டு அவ்விதமாகக் கவிகள் சொன்ன பாடல்களைக் கற்றுக் கொண்டு பாடித்திரிவார்களேயொழிய அவை யெல்லாம் சாஸ்திர சம்மதமானவையாகா. மனவடக்க மில்லாமல் இந்திரியலோலர்களான அவர்களைப் பெரியவர்களென்று பாவிப்பவர்கள் எப்படிப் பட்டவர்களென்றால் ஒருபகல்வேஷக்காரன் அரசவேஷம் தரித்து நான் கந்தர்வ நகரத்திலுறையும் மகா சூரர்களான மலடிமைந்தரான அரசர்களை முயற்கொம்பான மகா தனுசினால் கொன்ற வீரனன்றோ? என்ற வார்த்தைகளைக்கேட்டு இவனை மகாசூரனென்று நினைக்கும் மனிதர்கள் எவரோ, அவர்களல்லவா இவர்களைப் பெரிய வர்களென்று எண்ணுவார்கள்.

## விற்கிரய மாம்ச பக்ஷண வர்ஜனம்

வினா—சரி, பிராணிஹிம்ஸை மஹாபாபமென்று ஏற்பட்டது. யாரோ கொன்றுவிற்கும் மாம்சத்தை வாங்கித் தின்னும் விஷயத்தில் குற்றமில்லை யல்லவோ?



விடை—அது சரியானதல்ல. தின்பதற்கு மனிதர்கள் இருப்பதினாலல்லவா, கொல்வதற்கும் மனிதர்களிருக்கின்றார்கள். இல்லாவிடில் கொலைக்காரர்கள் எவரும் காணப்படமாட்டார்கள்.

ஆனால் தின்பவர்களே கொலைக்குக் காரணமாகின்றார்கள். அவர்களுக்கே அதிகமான பாபமென்றும் கொல்பவர்களுக்குச் சொற்ப பாபமென்றும் சாந்தி பர்வத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அது யுக்தி யுக்தமாக யிருக்கின்றது. ஒரு கசாப்புக்காரன் ஐந்து ரூபாய் கொடுத்து வாங்கிய ஒரு ஆட்டை, இம்ஸித்துக் கொன்று, அதன் ஊனை விற்கும்பொழுது சீக்கிரம் செலவழிந்து இரண்டு அல்லது மூன்று ரூபாய் லாபம் கிடைக்குமே யானால், மறுதினம் இரண்டு ஆடுகளைக் கொல்லக் காரணமாகின்றதல்லவா? முதல் நாள் ஒருவரும் வாங்காமல் அந்தக் கசாப்புக்காரனுக்கு நஷ்டம் வருமானால் மறுநாள் அக் கொடுமையான பாபத்தொழில் நிகழவே நிகழாதல்லவா? இதற்கு வேறொரு திருட்டாந்தமுமுண்டு. ஒரு கிராமத்தில் ஒருபிரபு இருந்தான். மற்றொரு கிராமத்தில் அத்தகைய வேறொரு பிரபு இருந்தான். இருவருடைய கைக்கீழ் நான்கு வேலைக்காரர்களிருந்தார்கள். பிரபுக்களிருவருக்கும் பகையுண்டாகவே. ஒரு பிரபுவின் வேலையாட்கள் தருணம் பார்த்து மற்றொரு பிரபுவை அடித்துக் கொன்று விட்டார்கள். அச்சங்கதி துரைத்தனத்தாருக்குத் தெரிந்தது. கொன்றவரைப் பிடித்து விசாரிக்க நடந்த சங்கதி முழுவதும் உண்மையாக வெளிப்பட்ட பொழுது நீங்கள் ஏன் இந்தக் கோர கிருத்தியத்தைச் செய்தீர்களென்று கேட்க, அவர்கள் ஐயா! நாங்கள் இன்ன பிரபுவினிடம் வேலை செய்து பிழைப்பவர்கள். அவர் இட்ட வேலைகளைச் செய்யாவிடில் எங்களுக்கு அன்னம் கிடைக்காது. ஆகையால் அவருடைய அபிப்பிராயப்படி செய்தோம். இவ்விஷயத்தை யோசித்து நியாயாதிபதி கொல்வதற்குக் காரணமாயிருந்த பிரபுவுக்கு மிகக் கடின சிக்ஷையையும், கொன்ற வேலைக்காரர்களுக்குச் சொற்ப சிக்ஷையையும் விதித்தார். அவ்வாறே இறைச்சியைத் தின்பவர்கள் கொலைக்குக் காரணமாகின்றார்கள். ஆகவே அவர்களுக்கு அதிக பாபமும் கொன்றவர்க்கு அற்பபாபமும் உண்டாகும். பாபம் அவ்வாறிருக்க ஈன உணவால் மனது தமோகுணத்தைச்சார்ந்து பல பாபத் தொழில்களுக்குக் காரணமாகி நாசமடையச் செய்யுமென்று ஸ்ரீ பகவத்கீதையில் (அ 2 சு 62, 63) சொல்லப்பட்டிருக்கின்றது.

(சு) தியாயதோ விஷயான்பும்ஸ: ஸங்கஸ்தேஷூ பஜாயதே|
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோபி ஜாயதே||.
க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்மிருதிவிப்ரம:|
ஸ்மிருதி பிரம்சாத் புத்திநாசோ புத்தி நாசாத் பிரணயஸ்தி||.

(தா) மதுமாம்சாதி துர் விஷயங்களை நினைக்கும் புருஷனுக்கு அவற்றின்மேல் பற்று உண்டாகின்றது. பற்றினின்றும் ஆசை உண்டாகின்றது. ஆசையினின்றும் கோபமுண்டாகின்றது. கோபத்தினின்றும் மயக்க முண்டாகின்றது. மயக்கத்தினின்றும் நினைவுதவறும். நினைவுத்தவறினின்றும் அறிவுக்கேடு உண்டாகின்றது. அறிவு கெடுதலால் ஒருவன் முற்றும் அழிந்து போகின்றான். ஆதலால் தீயவிஷயத்தில் அற்ப சிந்தனையுமிருக்கலாகாது.

சுருதி|| அன்னதோஷேண சித்தஸ்ய காலுஷ்யம் ஸர்வதா பவேத்|
கலுஷீ கிருத சித்தானும் தர்மஸ்ஸம்யக் நபாசதே||

(தா) ஆகார தோஷத்தினால் எப்போதும் சித்தத்திற்கு கல்மஷ முண்டாகும். கல்மஷ சித்தமிருப்பவர்களுக்குத் தர்ம ரகசியமான ஞானம் பிரகாசிக்காது.

சுருதி|| ஆகார சுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வ சுத்தௌ துருவா ஸ்மிருதி:
ஸ்மிருதி லாபே ஸர்வகிரந்தீனும் விப்ரமோக்ஷ:||

(தா) ஸாத்வீகமான சுத்த ஆகாரத்தினால் மனோ சுத்தியும், மனோ சுத்தியினால் திடமான பிரக்ஞையும், திடப்பிரக்ஞையினால் ஸர்வகிரந்திகளும் முற்றும் நாசமடையுமென்பது சன்னியாசமுச்சயம்.

## ஆடு கோழிகளின் உபயோகம்.

வினா—ஓ, ஸ்வாமி! ஆடுகோழி முதலியவை மனிதர்களுக்கு உபயோகமில்லாவிட்டால் அவைகளை ஏன் கடவுள் படைக்க வேண்டும்?

விடை—ஓ, பாபமற்றவனே! மனிதர்களை ஏன் சிருஷ்டிக்க வேண்டுமென்று யோசிக்கக்கூடாதா? மனிதர்கள் போலவே இந்த ஜந்துக்கள், தாமும் நிரம்பவாழ வேண்டியே. ஒருதாழ்வான பிறவியிலிருக்கின்றனவே யல்லால் அவைகளை மனிதர்கள் தின்பதற்காகப் படைக்கப் படவில்லை. அந்த ஜந்துக்களினால் மனிதர்களுக்கு அளவில்லாத உபகாரமுண்டு. முதலில், ஆட்டுமந்தைகளினால் பயிர்கள் அபரிமிதமாக விருத்தியாகின்றன, அந்த அன்னத்தைக்கொண்டு அனந்தகோடிஜனங்கள் பிழைக்கின்றார்கள். இரண்டாவது, அவைகள் பாலைக்கொடுத்து மனிதர்களுக்கு மட்டில்லாத உதவியைச் செய்கின்றன. மூன்றாவது, அவைகளின் மிருதுவான மயிர்களினின்றும் பற்பலவிதமான கம்பளங்கள் செய்யப்பட்டு அவைகள் மனிதர்களுக்கு உபயோககரமா யிருக்கின்றன. நமக்குத் தின்பதற்கு அன்னத்தையும், குடிப்பதற்குப் பாலையும், உடுப்பதற்கு ஆடையையும் அந்த ஸாதுக்களான ஜந்துக்கள் கொடுத்து நம்மைக் காப்பாற்றுகின்றனவல்லவா? கொடியவர்களான மனிதர்கள் என்ன பரோபகாரம் செய்கின்றார்கள்? இவர்களால் உலகத்திற்கு அளவற்ற அநர்த்தமுண்டாகின்றது. பூதேவி பாபிகளான நரர்களின் பாரத்தைச் சகிக்கலாகாது பகவானைப் பிரார்த்தித்து மஹாபர்வதங்களையும் பெரிய விருக்ஷங்களையும் நதிகளையும் விசாலமான சமுத்திரங்களையும் இன்னும் மற்றவைகளையெல்லாம் சுமப்பது எனக்குக் கடுகளவு பாரமில்லை, ஆனால் பிராணி ஹிம்ஸகர்களான கொடியோர்களைச் சுமக்க முடியவில்லை யென்றிவ்வண்ணம் துக்கத்தோடுமுறையிடும் பொழுது, அப்பகவான் ராமகிருஷ்ணாதி யவதாரமெடுத்து தீயோரைச் சங்கரித்து நல்லோரைக் காத்தருளுகின்றனர் எனப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குச் சாக்ஷியாக ஸ்ரீபக. (அ 4 சு. 7-8-ல்,)



(சு) யதா யதாஹி தர்மஸ்ய கிளாநிர் பவதி பாரத|
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம் யஹம்||
பரித்ராணாய ஸாதூனும் விநாசாயச துஷ்கிருதாம்||
தர்ம ஸம்ஸ்தாப னார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே||

(தா) ஓ, அர்ஜுனா! எப்பொழு தெப்பொழுது தர்மத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு விருத்தியும் வருமோ அப்பொழுதப்பொழுது நான் என்னை அவதரித்துக் கொள்ளுகின்றேன். பிராணிஹிம்சையால் தீமையைச் செய்பவரை முற்றும் ஒழித்தற்கும், நல்லோரைப் பாதுகாப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் அவதரிக்கின்றேனே யல்லாமல் வேறொன்றுமில்லை.

வினா—ஆடுகளால் மனிதர்களுக்கு உபயோகமென்பது சரியே. ஆனால் கோழிமுதலிய பறவைகளினால் என்ன உபயோகம்? அவைகளை ஏன் புசிக்கக்கூடாது?

விடை—ஐயையோ! அந்த ஜந்துக்களும் நம்மைப்போலவே மனைவி மக்கள் வீடு முதலியவைகளோடுகூடிச் சுகித்துச் சந்தோஷமாகப் பாட்டுகளைப்பாடிக் காலத்தைக் கழிப்பனவேயல்லாமல் மனிதர்களுக்கு எவ்வளவோ உபகாரமா யிருக்கின்றன. முற்காலத்தில்

கடியாரம் முதலிய காலங்காட்டும் கருவிகளில்லாத காரணத்தால் கோழிகளை வளர்த்தார்கள். அவை சரியாக இராத்திரி மூன்றாவது ஜாமமானவுடன் பாராச்சேவகர்களைப் போல் கொக்கரித்து நம்மை அழைக்கின்றனவே அப்படி ஒருமுறை அழைத்தது செவிக்கேறவில்லையோ என்னமோ என்று சம்சயித்து சிறிது நிதானித்து மறுபடியும் கூச்சலிடும். அப்படி இரண்டு மூன்று தடவைகள் கத்தி, விடியற்காலம் வந்துவிட்டது எழுங்கள், கடவுளைத்தொழுங்கள், அவரவர் தத்தம் வேலைகளுக்கு ஆயத்தமாகுங்கள் என்று நமக்கு எச்சரிக்கையிடுகின்றனவே. இதுவுமல்லாமல் வீட்டுக்கருகில் சிந்திக்கிடக்கும் அன்ன முதலியவைகளைக் கொறித்து பரிசுத்தம்செய்து நமக்கு வியாதிகள் அணுகாவண்ணம் செய்கின்றனவே. இதுவேயுமல்லாமல், பற்பலவிதமான விஷப்பூச்சிகள் வீட்டில் வரவொட்டாமல் உட்கொண்டு விடுகின்றன. வீட்டிற்கருகிற்கிடக்கும் அன்னமுதலிய அழுகின வஸ்துக்களிலிருந்துவரும் காற்றினால் மனிதர்களுக்கு வியாதி யுண்டாகுமென்று சைன்ஸ்சாஸ்திர மறிந்தோர்கள் சொல்லுகின்றார்கள். இப்பக்ஷிகளும் நாய்கள்போல் நம்மைக் காக்கவேயல்லாமல் கொன்றுதின்பதற்காகவல்ல. அப்படியானால் வளர்க்கும் நாயைமாத்திரம் ஏன் சாப்பிடக்கூடாது?

## மச்சோபகாரம்

வினா—கோழிகளால் உபகார மிருக்கிறதென்று சொன்னது சரியே. ஆனால் மச்சங் (மீன்)களால் என்ன உபயோகம் அவைகளை ஏன் தின்னக்கூடாது?

விடை—அப்பனே! அவைகளும் மனிதர்கள்போல் குட்டிகளோடு கூடிக்குலவி குடும்பகார்யங்களை நடத்துகின்றன. அவைகளாலும் மனிதர்களுக்கு சாலவும் உபயோகமுண்டு. நீரிலிருக்கும் அநேக விதமான விஷ வஸ்துக்களையும் பாசி முதலிய அசுத்தங்களையும் தின்று நீர்கெடாது நிர்மலமாகச் செய்து நம்மைக் காப்பாற்றுகின்றன. மீன்கள் இல்லாவிட்டால் ஜலத்தில் சேரும் அநேக விதமான தோஷங்களினால் ஜனங்களுக்கு வியாதி யுண்டாகும். இதற்காகவே, தவளையைக் கூட ஈஸ்வரர் சிருஷ்டித்திருக்கின்றார். அவைகளையுங்கூட ஏன் புசிக்கக் கூடாது! அவைகளும் நீர்வாழ்வன வல்லவா? நீ கேட்கும் கேள்விகள் குதர்க்கமே தவிர சரியானவையல்ல. மனிதர்களுக்கு ஆகாரமாக ஜந்துக்கள் படைக்கப்பட்டன என்றால், மனிதர்களைப் புசிப்பதற்கு புலிகள் நிர்மிக்கப்பட்டன வென்று ஏன் சொல்லக் கூடாது? குழந்தாய்! மனிதரைப் போல் எல்லா உயிர்களுக்கும்



வியவகாரம் சமானமே. ஆனால் ஞானம் ஒன்று மாத்திரம் அதிகமாயிராது. மற்ற விஷயங்களில் ஓர் பேதமுமில்லை.

(சு) ஆஹாரநித்ரா பயமைதுனஞ்ச| ஸாமான்யமேதத் பசுபிர்நராணாம்|
ஞானந்நராணாமதிகம் விசேஷம்| ஞானேனஹீனபசுபிஸ்ஸமான:||

(தா) உணவு, உறக்கம், பயம், புணர்ச்சி முதலியவை மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஸமானமாக விருக்கின்றன. தன்னைப்போலவே எல்லாம் என்று அறியும் ஞானம் ஒன்று மாத்திரம்இல்லை. இந்த ஞானம் எவர்களுக்கில்லையோ, அவர்கள் இரண்டு காற் பசுக்களே யல்லால் மனிதர்களல்லவென்று உத்தர கீதை போதிக்கின்றது. அவைகளுக்கும் நம்மைப்போல் பாஷா ஞானமுண்டு. ஒரு கோழி குஞ்சு பொரித்திருக்கும் பொழுது காக்கை பருந்து முதலிய பறவைகள் வருமாகில் அந்தத் தாய்க்கோழி 'கோ' வென்று ஈனசுரத்தோடு சப்தித்த வளவில், குஞ்சுகள் அங்கும் இங்குமாகவோடி அபாயமற்ற விடத்திற்குப் போய் ஒளித்துக் கொள்ளும். இவ்வுபத்திரவ பக்ஷிகள் போன பிறகு தாய்க்கோழி, கு, கு, கு, என்று கூப்பிடும் பொழுது எல்லாக் குஞ்சுகளும் அருகில் ஓடி வருவதைக் காணவில்லையா? இவ்வாறே எல்லாப் பிராணிகளுக்கும் சம்பாஷணை ஞானம் இருக்கின்றது. இல்லாவிடில் எப்படித்தெரியும்? ஆகாயத்தில் மனோஸம்யமத்தைச் செய்யும் சக்தியையுடைய யோகிக்கு எல்லாப் பிராணிகளினுடைய பாஷை கோசரமாகுமென்று பாதஞ்சல யோகசூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வளவு தூரம் எதற்காகச் செல்லவேண்டும்? அக்கரையில்லை. இந்தத் தேசத்தில் சமீபத்திலிருக்கும் உன்னைப் போன்ற மநுஷ்யனை நான், மலையாள பாஷையையாவது, சிங்கள பாஷையையாவது சொன்னால் இங்குள்ள ஒருவருக்கும் தெரியாதல்லவா? அப்படியிருக்க மனிதனைவிட எவ்வளவோ தாழ்ந்த ஜன்மத்திலிருக்கும் ஜந்துக்களின் பாஷையையறியச் சாத்தியமா? தெரியாத் தன்மையாக அவைகட்குப் பாஷையில்லை யென்று சொல்லலாமா? குருடனுக்குச் சூரியன் தெரியாமற் போனாலும், கண்ணுள்ளவர்களுக்குக் காணப்படாமற் போகுமா? ஐயோ! எளிய ஜந்துக்களைப் பலாத்காரமாக வதைப்பது எவ்வளவு பாபம். ஆதலால் எல்லாப்பிராணிகளிடத்திலும் காருண்யம் வைத்து எல்லாவற்றிலுமுள்ள நன்மையைக் கிரஹிக்க வேண்டும். அவற்றிலிருக்கும் குற்றத்தைக் கவனிக்கப்படாது என்பது எமது முக்கிய உபதேசம். (பரமகாம்பீர்யமாய் வேத முடிவின் விளங்கும் உத்தம வித்தையாகிய பிரஹ்ம வித்தையின் மகிமைப் பொருளை அறியமாட்டாமல் மனம்போனவாறு

மாறு பொருள் கொண்டொழுகும்) சுஷ்கவேதாந்தியர்களுடைய பாமர வசனங்களைச்செவியில் ஏறவிடாதீர்கள். தேகபுத்தி தடித்திருத்தலால் கருணாநிதியான கடவுளை நிதமும் பக்தியோடு தியானியுங்கள். விஷயங்களைப் பின்பற்றிச் செல்லும் மனத்தை அவ்விஷயங்களிற் போகவொட்டாமல் தடுத்து, விஷய வின்பம் விஷங்கலந்த தேன் போன்றது என்னும் துக்கபுத்தி கொண்டு, துக்கலேசமுமற்று நித்திய நிரதிசயசுகவடிவப் பிரம்மத் தியானநிஷ்டையில் இருங்கள்.

சுஷ்கவேதாந்த தமோபாஸ்கரம் பிரதமபாதம்

ஸம்பூர்ணம்.

ஓம். தத் ஸத்.

ஓம்.

ஸ்ரீரஸ்து

ஓம் தத்ஸத். பரமாத்மனே நம:

அஹிம்ஸா பரமோ தர்ம:

# ஸ்ரீ சுஷ்கவேதாந்த தமோ பாஸ்கரம்.

## இரண்டாம் பாதம்.

## குரு சிஷ்யர்களுடைய யோக்கியதை

வினா:—ஓ, ஸ்வாமி! ஆத்மஞான சித்தியின் பொருட்டு, சமதமாதி குணங்களையுடையசிஷ்யனது சாமர்த்தியமே போதுமா? குரு சகாயங்கூட வேண்டுமோ? என்று எனக்கு ஒரு பெரிய ஸந்தேகமிருக்கின்றது, அதைக் கருணையோடு அருளி, என்னைத் தன்யனாக்க வேண்டுகின்றேன். ஓ, மகாத்மாவே!

விடை.—ஓ, சற்குணசீலனான சகோதரா! சாதன சதுஷ்டய ஸம்பத்தி நிறைந்துள்ள சிஷ்யனும் சுருதி சாரத்தை நன்றாக அறிந்த பிரம்ம நிஷ்டரான குருவும் இருந்தால் மாத்திரம் இந்தப் பிரம்ம வித்தை பிரகாசிக்குமே யல்லாமல், இருவரில் எவருக்காவது அச் சாதனங்கள் பூர்த்தியாக இல்லாவிட்டால் பிரகாசிக்கச் சாத்தியமாகாது. எப்படி யென்றால், வேளாண்மை முழுவதும் பயனைக் கொடுப்பதற்கு சுத்தமான பூமியும் (கற்கள், முட்கள், உவர்ப்பு முதலிய தோஷமில்லாத செழிப்பான நிலமும்) பரிபக்குவமான விதைகளும் இருந்தாலல்லாமல் பலிக்கச் சாத்திய மாகாது. பூமி மிருதுவாயும் எல்லாக் குணங்களோடு கூடினதாயு மிருந்தாலும், விதை முதிராததாக இருந்தால் பலத்தைக் கொடுக்கச் சாத்தியமாகாது. அவ்விதமாகவே, விதை பக்குவமாக விருந்தாலும், பூமியில் உவர்க் குற்றம் இருந்தால் உபயோகமாகாது. உவர்மண் பூமி என்றால், விஷய வாசனைகளோடு சேர்ந்திருக்கும் மனது. கற்களென்பன, அகங்கார மமகாரங்கள். முட்களெவை யெனில், துர்க்குணங்கள். இவை இருக்கக்கூடா. இவைகளெல்லாம் பூர்த்தியாக இருந்தாலும் வைராக்ய மென்ற வேலி இல்லாவிடில் காமக் குரோதங்களாகிய உயிர் வர்க்கங்கள் அதை அழித்துவிடும். பரிபக்குவமான விதை யென்றால், தபோ

நிஷ்டையும் சம தமாதி குணங்களும் பொருந்தி ஆத்மஞான ஸ்வாநுபவத்தையுடைய பிரம்ம நிஷ்டரான குருவாவார். பக்குவமற்ற விதை யென்றால், வைராக்கிய முதலிய குணங்களில்லாதவரும் பூர்ண ஸ்வாநுபவ சித்தி யில்லாதவருமாவர். ஓரிடத்திலிருந்து தந்தி யடிப்பவர் மற்றோரிடத்தில் அத்தந்தியைக் கிரகிப்பதற்கு சாமர்த்திய முள்ளவராக இருந்தால் மாத்திரம் அதிற் சொல்லப்படும் விஷயம் கிரகிக்கக் கூடுமே யல்லாமல், கிரகிக்க ஆற்றல் இல்லாவிடில் சாத்திய மாகாது. அதாவது, தந்தியை யடிப்பவரும் அதை வாங்குபவருமாகிய இருவரும் சாமர்த்தியர்களா யிருக்கவேண்டும். அல்லது, நோயாளி, வைத்தியர் சொல்லிய பத்தியம் தவறாமல் இருப்பவரும், நோயை யறிந்த வைத்தியரும், அவரிடத்தில் நோய்க்குத்தக்க ஔஷதமுமிருந்தால் மாத்திரம் அந்நோய் நீங்குமே யல்லாமல் அவர் திவ்ய ஔஷதத்தைக் கொடுத்தாலும் ஆகாரபத்தியம் சரியாக இல்லாவிட்டால் அம்மருந்து பலத்தைக் கொடுக்காது. ஆகாராதி பத்தியங்களில் ஜாக்கிரதையாக இருந்தும் ஔஷதம் சரியாக இல்லாவிடில் ஆரோக்கியம் உண்டாகாதல்லவா?

(சுருதி) தத்விக் ஞானார்த்தம் ஸகுருமேவாபி
கச்சேத் ஸமித்பாணி: சுரோத்ரியம் பிரம்ம நிஷ்டம் ||

(தா) சிஷ்யன் அகக்கரண புறக்கரண தண்ட முடையவனாய் ஆத்மஞானம் உண்டாவதற்கு பூஜைக் குரியவைகளைக் கையிற் கொண்டு சுருதி சாரத்தை அறிந்தவரும் பிரம்ம நிஷ்டருமான குருவை ஆசிரயிக்க வேண்டுமென்று முண்டகோ உபநிஷத் உரைக்கின்றது. இதனால், குரு சிஷ்யர்களான இருவரும் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டு மென்று மிகத்தெளிவாக விளங்குகின்றது.

## குரு லக்ஷணம்

(சுருதி) அவித்தியா ஹ்ருதய க்ரந்திர் பந்தமோக்ஷா பவேத்யத:|
தமேவ குருரித் யாஹு: குரு சப்தார்த வேதின:||

(தா) எந்த மஹாநுபாவரால் அவித்யா இருதய முடிச்சான பந்தம் நீங்கி மோக்ஷம் கிடைக்குமோ, அவரைக் குருவென்று குரு சப்தத்தின் பொருளுணர்ந்த பெரியோர்கள் சொல்லுகின்றார்கள்.

(சுருதி) 2—குசப்தஸ் த்வந்தகார: ஸ்யாத் ருசப்தஸ் தந்நிரோதக:|
அந்தகார நிரோதத்வாத்குருரித் யபிதீயதே ||

(தா)'கு' என்னும் சப்தம் அந்தகாரத்திற்குப் பெயராம். 'ரு' என்னும் சப்தம் அதை நாசம் செய்யும் தேஜஸுக்குப் பெயராம்.



அதாவது, பிரம்ம உபதேசத்தினால் அஞ்ஞானாந்தகாரமான இருளைப் போக்கடித்து, சுவயம் பிரகாசமான பரப்பிரம்மத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அளிப்பவர் குரு சப்தத்திற்கு அர்த்தமாவரென்று அத்வயதாரகோபனிஷத் சொல்லுகின்றது.

(சு) 3-குகாரஸ் சாந்தகா ரோஹி| ருகாரஸ் தேஜ உச்யதே|
அஞ்ஞான க்ராஸகம் பிரஹ்ம| குருரேவ நஸம்சய:||

(தா) குகாரம் அந்தகாரம் (அஞ்ஞானம்) என்றும் ருகாரம் அதைப் போக்கடிக்கும் தேஜசு (ஞானம்) என்றும் சொல்லப்படும். அதாவது அஞ்ஞானமான தமஸ்ஸை விழுங்குபவரே பிரம்ம குருவாவர், ஸந்தேகமில்லை.

(சு) 4-குகாரஸ்ச குணாதீதோ| ரூபாதீதோருகாரக:|
குணரூப விஹீநத்வாத்| குருரித் யபிதீயதே||

(தா) குகாரம் குணாதீதமாம். ரூபாதீதம் ருகாரமாம். நாம ரூப குணமற்ற பிரம்மத்தைக் காட்டுபவர் குருவென்று சொல்லப்படுகின்றார்.

(சு) 5-சாதுர் யவான் விவேகீச| அத்தியாத்ம ஞானவான்சுசி:|
மானஸம் நிர்மலம் யஸ்ய| குருத்வம் தஸ்ய சோபதே||

(தா) சாதுர்யம் உள்ளவராய், விவேகியாய், அத்தியாத்ம ஞான சம்பன்னராய், உள்ளிலும் வெளியிலும் பரிசுத்தராய், எவருடைய மனது நிர்மலமாயிருக்குமோ, அவருக்கு மாத்திரம் குரு சப்தம் சோபிக்குமே யன்றி, சிசுனோதர போஷண பராயணபரர்களான சுஷ்க வேதாந்திகளுக்கு அப்பதம் பொருந்தாது.

(சு) 6-குரவோ நிர்மலாஶ் ஶாந்தா:| ஸாதவோ மிதபாஷிண:|
காமக்ரோத விநிர்முக்தா:| ஸதாசாரா ஜிதேந்திரியா:||

(தா) மிகுந்த நிர்மல இருதயத்தை உடையவர்களாய், பரம சாந்தர்களாய், மேலான சதுஷ்டய சாதனம் மேவி நிறைந்த சாதுக்களாய், அளவோடுங்கூடிய பேச்சையுடையவர்களாய், காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங் (ஆறு உட்பகை) களில்லாதவர்களாய், எப்பொழுதும் சன்மார்க்கத்தில் நடப்பவர்களாய், கண் காது முதலிய பத்து இந்திரியங்களை வென்றவர்களாயுள்ளவர்கள் மாத்திரம் குருஸ்தானத்திற்கு ஏற்றவர்களாவார்களேயன்றி, இந்திரியங்களின்வசப்பட்டவர்களுக்கு அதிகாரமில்லையென்று குருவுக்குக் குருவான ஸ்ரீபரமேஸ்வரர் குருகீதையில் பார்வதி தேவியாருக்கு உபதேசித்திருக்கின்றார்.

(சு) 7-ஆசார்யோ வேத ஸம்பன்ளே | விஷ்ணு பக்தோ விமத்ஸர :|
யோகக்ஞோ யோகநிஷ்டஸ்ச | ஸதா யோகாத்மகஸ்ஶுசி :||

(தா) ஆசார்யன் வேதசம்பன்னனுய், பரமபக்தனுய், மற்சரமற்றவனுய், யோகமறிந்தவனுய், யோகநிஷ்டையிலிருப்பவனுய், எப்பொழுதும் யோகாத்மசுவரூபனுய், உள்ளும்புறம்பும் சுத்தியையுடையவனுய் இருக்கவேண்டும்.

(சு) ஏதேஷாம் தேசிகானுஞ்ச | லக்ஷணம் சுருணுஸுவ்ரத |
அஹிம்ஸ ஸ்ஸத்யசௌசாதி | விஶ்வஜீவ தயாபர: || 1.
(சு) க்ஷமாவான் சாந்தசித்தஸ்ச | நிக்ரஹாநு கிரஹேக்ஷம :|
சதாசாரயுதோ தக்ஷோ | ஜபத்யான பராயண :|| 2.
(சு) ஞானதீக்ஷா ஸமாயுக்தோ | குருபக்தி விசாரத : |
ஞானயோக கிரியாசர்யா | சதுஷ்பாதாந்த சாஸ்திரவித்|| 3.
(சு) தம்பாசார விநிர்முக்த : | க்ஷுத்ரகர்ம விவர்ஜித : |
சிஷ்யாணும் குணதோஷேஷு | விக்ஞாநீச ஜிதேந்திரிய :|| 4.
(சு) ராகத்வேஷ விநிர்முக்த: | கிருபயாச ஸமன்வித : |
சமயானுஞ்ச சர்வேஷாம் | ஞானஸார பரிக்ரஹீ|| 5.
(சு) சிவானுபூதி ஸம்யுக்த: | ஸம்சயச் சிதஸம்சய : |
க்ஷயகுஷ்டாதி ரஹித: | வீதராக ஸ்ச சுந்தர :|| 6.
(சு) நிர்மமோ நிரஹங்காரோ | நிஸ்ஸங்கோ நிர்விகல்பக : |
தமோவிஹீந: சாஸ்திரக்ஞ: | பரமார்த்த விசிந்தக :|| 7.
ஏவம்லக்ஷண ஸம்யுக்தோ | ஹ்யாசார்ய வரவுச்யதே||

(தா) ஆசாரியனுடைய லக்ஷணத்தை, ஓ, ஸுவிரத!, நிதானமாகக் கேள். மூன்று கரணங்களினுல் ஹிம்சை செய்யாதவனும், ஸத்யசௌசாதி குணங்களையுடையவனும், எல்லாஜீவ ராசிகளிடத்திலும் அளவற்றதயையுள்ளவனும், க்ஷமையுள்ளவனும், சாந்தமான சித்தத்தையுடையவனும், நிக்ரஹாநுக்ரஹ சக்தியுடையவனும், ஸதாசாரனும், எல்லாவிஷயத்திலும் சமர்த்தனும், ஜபத்யான பராயணனும், ஞானதீக்ஷையைத்தரித்தவனும், குருபக்தியில் பிராணனை விடுபவனும், ஞானம் யோகம் கிரியை சரியைகளாகிய நான்கு பாதங்களின் முடிவுவரை சாஸ்திர (கர்ம, பக்தி, யோக, ஞான) மறிந்தவனும், டம்பாசாரமில்லாதவனும், அற்பகர்ம (நீசதேவதோபாஸனை) இல்லாதவனும், சிஷ்யர்களின் குணதோஷங்களில் விசேஷஞானம் உடையவனும், சர்வேந்திரிய நிக்ரஹமுடையவனும், ராகத்வேஷ மில்



லாதவனும், கிருபைக்கடலானவனும், எப்பொழுதும் ஞானஸாரத்தைக் கிரகிக்கும் சுவபாவமுடையவனும், பரப்பிரம்ம சுவானுபவமுடையவனும், எல்லா ஸம்சயங்களையும் சேதித்த நிஸ்ஸம்சயனும், க்ஷயம் குஷ்டமுதலிய ரோகங்களில்லாதவனும், வைராக்கிய முடையவனும், சுந்தரனும், மமகாரம் நசித்தவனும், அஹங்காரம் நீங்கினவனும், சங்கையில்லாதவனும், விகல்பமற்றவனும், அஞ்ஞானம் நசித்தவனும், சாஸ்திரசாரம் தெரிந்தவனும், பரமார்த்த தத்துவமான பிரம்மத்தை விசேஷமாகச் சிந்திக்கும் சுவபாவமுடையவனும், இவை போன்ற மற்றும் அநேக குணங்களையுடையவன் ஆசாரியன் (குரு) என்று சொல்லப்படுவான். நீசாசாரமுடையவர்களாய், துர்போஜனம் செய்பவர்களாய், பிராணிஹிம்ஸை செய்பவர்களான குருக்களைப் பெரியவர்களெனப் படாதென்று அசிந்திய விஶ்வவன தார்க்கிக யோகம் சொல்லுகின்றது. இவ்வளவும் குருவின் லக்ஷணமாம்.

## சிஷ்ய லக்ஷணம்.

வினு—ஓ, சற்குணசம்பன்னனுன சகோதரா! இப்பொழுது சிஷ்யனுடைய லக்ஷணத்தைச் சொல்வோம்; இதைமிகவும் சிரத்தையோடு கேள். மோக்ஷத்திற்கு சிஷ்யனுடைய சிரத்தா பக்தியே முக்கியசாதனமே தவிர, வேறொரு விதத்தால் அதையடைய முடியாது.

(சு) உபதேசக் கிரமோ ராம | வியவஸ்தா மாத்ர பாலனம் |
ஞானேஸ்து காரணு சுத்யா | சிஷ்யப் பிரக்ஞைவ கேவலா||

(தா) ஓ, ஸ்ரீராமா! உபதேசக்கிரமம் வியவஸ்தையைப் பரிபாலிக்கும் பொருட்டு மாத்திரமேயன்றி, ஞான சித்தியின் பொருட்டன்று. அதற்கு சிஷ்யனுடைய சுத்தமான பிரக்ஞாவல்லபமே முக்கிய காரணமாக இருக்கின்றது. ஆதலால், சிஷ்யனுக்கு விஷயவைராக்கியமும் மஹாபிரக்ஞையும் இருக்கவேண்டுமென்று வாசிஷ்டம் சொல்லுகின்றது. எவனுடைய சிரசின்மீது ஸ்ரீகுருவின் பாதோதகம் விழவில்லையோ, அவனுடைய தாபத்திரயமான அக்நி ஆறுதலடையாது. குருவினுடைய உச்சிஷ்டத்தை எவன் உண்ணவில்லையோ, அவனுக்கு ஸம்ஸாரமென்னும் நோய் சாந்தியாகாது. எவனுடைய சரீரத்தின் பேரில் குருவின்பாத தூளிபடவில்லையோ, அவனுக்கு ஸம்ஸாரதுக்கமென்னும் விரணம் மாறுபடமார்க்கமில்லை. எவன் குருவின் கிருபை உண்டாகும் பொருட்டுச் சரீரத்தினுல் பாடுபடவில்லையோ, அவனுக்கு இந்திரிய நிக்ரஹம் ஸாத்தியமாகாது.

(சு) அக்ஞான மூலஹரணம் | ஜன்மகர்ம நிவாரணம் |
ஞானவைராக்கிய ஸித்தியர்த்தம் | குருபாதோதகம்| பிபேத் |
குருபாதோதகம் பானம் | குரோருச்சிஷ்டபோஜனம்.||

(தா) அனாதியான அக்ஞானத்தை வேரோடுகளைவதும் ஜனன மரணத்திற்குக் காரணமான கர்மத்தை நிவாரணம் செய்வதும் குருவின் பாதோதகமாம். ஞானவைராக்கிய ஸித்தியின் பொருட்டு அதை அவசியம் பானம் செய்யவேண்டும். குருபாததீர்த்தமும், குரோருச்சிஷ்டபோஜனமும் சிஷ்யர்களுக்கு மோக்ஷபலத்தைக் கொடுப்பதற்குக் காரணமாக இருக்கின்றன.

ஓ, அஞ்சனாதேவியின் மைந்தனான ஆஞ்சநேயா ! சத்குருவினுடைய பாதபங்கஜங்களைச் சேவிக்கா விட்டால் அதி நிர்மலமான விரக்தி என்னும் அதிசயமான பாக்கியம் கிடைக்குமா? கிடைக்காது. சத்குருவின்பாதோதகத்தைப் பருகாவிடில் ஞானம்(சாஸ்திரஞானம்) விஞ்ஞானம் (அனுபவஞானம்) கிடைக்குமோ? கிடைக்காது. சத்குருவினது சேடத்தைப் புசிக்காவிடில் சமானமற்ற சித்த சாந்தியினாலுண்டாகும் சுகம் கிடைக்குமோ? கிடைக்காது. குருதத்வத்தைத் தன்னிடத்தில் தெரிந்து கொள்ளாவிடில், சர்வோத்தமமான மோக்ஷம் சித்திக்குமா? சித்திக்காது, என்று சீதாராமாஞ்சனேய ஸம்வாதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

(சுருதி) தஸ்மை ஸவித்வா னுபபன்னாய ஸம்யக் |
பிரசாந்த சித்தாய சமன்விதாய | ஏனாக்ஷரம்புருஷம்
வேதசத்தியம் | ப்ரோவாச தாம்தத்வதோ பிரம்மவித்யாம்||.

(தா) அந்த வித்வான் (குரு) சமீபத்தில் வந்தவனும், விதிப்படி சரணாகதி அடைந்தவனும், இறுமாப்பு முதலியன இல்லாதவனும், புற இந்திரிய வடக்க முள்ளவனுமான சிஷ்யனுக்கு எந்த ஞானத்தினால் ஸத்தியமாயும் அக்ஷரமாயுமிருக்கிற புருஷன் அறியப்படுமோ, அந்தப் பிரம்ம வித்தையை உபதேசிக்க வேண்டு மென்று முண்டகோபநிஷத்.

(சு) சாதுர்வர்ண்யேது ஸம்ஜாத: | சாஸ்திரக்ஞான நிரூபக: |
பக்திஞான விராகேண | புத்திமான் நீதிமான்ஸதா||.

(சு) புருஷார்த்த பிரவக்தாச | ஸதாநிர்ணய புத்திமான் |
சுச்ரூஷாயாஞ்ச குஶலோ | குருகார்யே பிரயத்னவான்|| 2.



(சு) ஸந்ததம் குருசுஶ்ரூஷா | வாகுல்லங்கன பீருக : |
ஏதல்லக்ஷண ஸம்பன்ன: | ஸசிஷ்ய: பரிகீர்த்தித:|| 3.

(சு) அமத்தியபாஸ்து யேசூத்ரா:| சௌசாசார கிரியாதரா: |
சிவபக்தாஸ்ச ஹ்யேதேஷாம் | தீக்ஷாகார்யாந்யதாநஹி|| 4.

(சு) ஸர்வேஷாமேவ சிஷ்யாணா | மதிகம் சதகுணம் ஶ்ருணு |
பக்திவிஶ்வாஸ மத்ரோஹோ | குர்வாக்ஞா பாலனஸ்திதி:|| 5.

(சு) சிரத்தாசாந்தி: க்ஷமாஸத்யம் | ததாசௌசம் தப:சுருதம்
கிருதக்ஞதா த்வாதசகம் | யஸ்ய சிஷ்யஸ்ய வித்யதே|| 6.

(சு) சிஷ்யாணாஞ்ச பிரதானஸ்ச | நான்யே தேஹி பிரதானகா :||.

(தா) நான்கு வர்ணங்களில் பிறந்தவர்யாராகிலும்சரி, சாஸ்திர ஞான நிரூபகனும், பக்திஞான விராகத்தினால் சூக்ஷ்ம புத்தியுடையவனும், நீதிமானும், பரம புருஷார்த்தமான மோக்ஷத்தையடைவதற்கு எப்பொழுதும் பிரயத்னப் படுபவனும், எப்பொழுதும் ஸ்திர புத்தியுடையவனும், குருவின் பணிவிடையில் அன்புடையவனும், எப்பொழுதும் குருகாரியத்திற்காகப் பாடுபடுபவனும், குருவசனங்களைக் கடந்து நடப்பதில் பயப்படுவோனுமாகிய இவ்வித லக்ஷணங்களையுடையவன் சிஷ்யனென்று சொல்லப்படுவான். மத்திய மாம்சாதி போஜனமில்லாதவரும், சௌசாசார கிரியைகளிடத்தில் ஆதரவு கொண்டிருப்பவரும், ஈஶ்வரபக்தியுள்ளவருமானவர்கள் சூத்திரர்களாயினும் அவர்களுக்குப் பிரம்ம வித்பாதீக்ஷை செய்யலாம். இக்குணங்களில்லாதவர்களுக்குச் செய்யக்கூடாது. சிஷ்யர்களெல்லோருக்கும் மற்றவர்களைவிட அதிகமாக இருக்கும் சிறப்புக் குணங்களைச் சொல்வோம் அவற்றைக்கேள். பக்தி, விஶ்வாஸம், துரோகமில்லாமை, குருஆக்ஞையைப் பரிபாலிக்கப் பிரயத்னப்படுதல், சிரத்தை, பரம சாந்தம், பூமியைப்போல் பொறுமையுடைமை, ஸத்தியம், உள்ளும் புறமும் சுத்தியாயிருத்தல், தபசு, சாஸ்திர சிரவணம், செய் நன்றிமறவாமையாகிய பன்னிரண்டு குணங்களும் எவனுக்கிருக்குமோ, அவன் சிஷயர்களில் பிரதானமானவன். இவை இல்லாதவன் தாழ்ந்தவனென்று பராக்கியமென்னும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(சு) அஹிம்ஸா ஸத்யம ஸ்தேயம் | பிரம்மசர்யம் தயார்ஜவம் |
க்ஷமா திருதிர் மிதாஹார: | சௌசம்சேதி யமாதஶ.||

(தா) கொல்லாமை, மெய்மை, கள்ளமின்மை, பிரம்மசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைரியம், மிதபோஜனம், பரிசுத்தம் என்ற இப்பத்தும் இயமம் என்று சொல்லப்படும்.

(சு) தபஸ் ஸந்தோஷ மாஸ்திக்யம் | தான மீஶ்வர பூஜனம் |
வேதாந்த சிரவணம்சைவ | ஹ்ரீர் மதிஸ்ச ஜபோவிரதம் ||

(தா) தபசு, சந்தோஷம், ஆஸ்திக்பம், தானம், ஈசுவர பூஜை, வேதாந்த சிரவணம், வெட்கம், மதி, ஜபம், விரதம் என்ற இப்பத்தும் நியமம் என்று சொல்லப்படும்,

சூதஸம்ஹிதை

(சு) வித்யுக்தகர்ம ஸம்யுக்த: | காமஸங்கல்ப வர்ஜித: 1.
யமைஸ்ச நியமைர்யுக்த: | ஸர்வஸங்க விவர்ஜித:||

(சு) க்ருதவித்யா ஜிதக்குரோத: | ஸத்யதர்மபராயண: |
குருசுசரூஷணரத: | பித்ருமாத்ருபராயண: || 2.

(சு) ஸ்வாஶ்ரமஸ்த: ஸதாசாரோ | வித்வத்பிஸ்ச ஸுசிக்ஷித:||

(தா) விதிப்ரகாரமான கர்மத்தைச் செய்பவனும், காமசங்கல்ப மில்லாதவனும், யமநியமங்களோடு கூடியிருப்பவனும், ஸம்ஸாரப்பற்றற்றவனும், ஆசாரியரால் போதிக்கப்பட்ட வித்யையோடு கூடியவனும், காமக்ரோதங்களை ஜயித்தவனும், ஸத்யதர்மபராயணனும், குருஸேவையில் அன்புள்ளவனும், தாய்தந்தையரைப் பூஜிப்பவனும், தனது ஆஶ்ரமத்தில் ஸ்திரமாக இருப்பவனும், ஸதாசாரத்துடனிருப்பவனும், மகான்களினால் செவ்வே சிட்சிக்கப்பட்டவனுமாக சிஷ்யன் இருக்கவேண்டும்.

(சு) மோக்ஷஸ்ய பிரதமம்துவாரம் | வாங்நிரோதோ அபரிக்ரஹ: |
நிராசாச நிரீஹாச | நித்யமேகாந்தசீலதா||.

(தா). மோக்ஷத்திற்கு முதல்முதல் உள்ளவாயில் வாக்கடக்கம் (மிதப்பேச்சும்), பரிக்கிரக மின்மை (தனக்கெனச் சொந்தமின்மை) நிராசை, கோரிக்கையற்றிருப்பது, ஸத்யம், எப்பொழுதும் தனித்திருப்பது என்று விவேகசூடாமணி சொல்லுகின்றது.

(சு) ஸத்ஸங்கோ வாஸனாத்யாகோ | த்யாத்மவித்யா விசாரணம் |
ப்ராணஸ்பந்த நிரோதஸ்சே | த்யுபாயா சேதசோஜயே||

(தா). மனது நசித்து, பரப்பிரம்ம ஸ்திதியுண்டாவதற்கு நான்கு ஸாதனங்கள் முமுக்ஷுக்களுக்கு அதிக அவசியமாக இருக்கின்றன. அவற்றுள், முதலில் ஸத்ஸங்கம், இரண்டாவது விஷயவாஸனாத்யாகம், மூன்றாவது அத்யாத்மவித்யாவிசாரம், நான்காவது பிராணகதியைத்தடுத்தல் (த்யான யோகாப்பியாசம்) இவை யெல்லாம் சிஷ்யனுக்கு இருக்கவேண்டிய முக்கியமான விதிகள்.



ஓ சாதன சதுஷ்டயசம்பன்னனான சகோதரா! நீ அதிகமாகக் கேள்வியில் காலத்தைக் கழிக்காமல், சீக்கிரமாக சுவரூப ஸ்திதியை யடைந்து சாஸ்வதானந்த நிர்வாண சுகத்தை யடை, குழந்தாய்!

(சு) கேசிதாகம ஜாலேன | கேசிந்நிகம ஸங்குலை: |
கேசித்தர்க்கேண முஹ்யந்தி | நைவஜாநந்தி தாரகம்||

(தா). சிலர் ஆகமசாஸ்திரமென்னும் வலையில் சிக்கியும், சிலர் வேதசாஸ்திரங்களைப் படித்துப் படித்துக் காலத்தை வீணாகக்கழித்தும், மற்றும் சிலர் பரமாணுவாதமான தர்க்கசாஸ்திரங்களை அப்பியசித்தும், ஆத்மசிந்தையில்லாமல் மோகிதர்களாய் ஸம்சாரக்கடலைக் கடத்தற்கு உபாயம் தெரியாமல் துன்பத்திற்குப் பாத்திரர்களாய் அழிவை அடைகின்றார்கள். ஆகையால் இனி கேள்விகளை நிறுத்திவிடுவாய். குருதெய்வம் இவரிடத்து அன்பு பூண்டு சிலகாலம் அதிகஜனமில்லாத நிர்மலப்பிரதேசத்தை யடைந்து, அவஸ்தாத்திரய சாக்ஷியாய்ப் பஞ்சகோசவிலக்ஷணனாயுள்ள உனது சுவரூபஸ்திதியைத் தியானித்து பிரம்மானந்த நிர்வாண சுகத்திலிருப்பாயாக!

## ஸ்திரீகளுக்குப் பிரம்மவித்தையில் அதிகாரமுண்டெனல்.

பரமபக்தியையுடைய நாராயணம்மாள் கேட்டகேள்வி.

வினா—ஓ, ஸ்வாமி! இந்தக் கோர ஸம்ஸாரஸாகரத்தில் அக்ஞானமென்னும் முதலையினால் பிடிக்கப்பட்டுப்பரிதவிக்கும் என்னைத்தேவரீருடைய கருணாகடாக்ஷ வீக்ஷண மென்னும் சக்கரத்தினாலதைக் கண்டித்து கிருதார்த்தனையாகும்படி செய்து, ஜனனமரண ரோகத்திலிருந்து ரக்ஷிப்பீராக. நான் சுகதுக்கங்களுக்கு ஆலயமான இச்சரீரமென்னும் பஞ்சரத்தில் (கூண்டில்) அடைக்கப்பட்ட பறவையைப் போல், பசி தாகமுதலிய ஷடூர்மிகளினாலும் நரை திரைமுதலிய ஷட்விகாரமான தேக துக்கத்தினாலும் வரும்பாதையைப் பொறுக்கமுடியாமல், என்னுடைய சுவரூப ஸ்திதியைத் தெரிந்து கொண்டு விடுதல் பெறுவோமென்றெண்ணி அநேகபண்டிதர்களிடம் சென்று வேண்டிக் கொண்டும், அவர்கள் என்பேரில் தயையில்லாதவர்களாய், ஸ்திரீகள் பிரம்ம ஞானத்திற்கு யோக்யதையில்லாதவர்களென்றும், அவ்வளவு மாத்திரமே யல்லாமல் பாபப்பிறவியரென்றும், இதுவுமல்லாமல், சுத்

தமற்றவர்களென்றும் சொல்லி என் மனக்கோரிக்கையை நிறைவேற்ருமற் போனார்கள். அதுகேட்ட அப்போதே நீர்வற்றிய விடத்திலிருக்கும் மச்சங்களைப்போலவும், காட்டுத்தீ நடுவிலிருந்து தன்னுயிரைக் காக்கும் பொருட்டுப் பரிதவிக்கும் மானைப்போலவும் ஸம்ஸார அக்நியினால் பரிதவித்துக் கொண்டிருக்கிறேன். என் மீது ஸர்வஜீவர்களை ரக்ஷிக்கும் கருணைக் கடலான பகவானுக்கும் இரக்கமுண்டாகவில்லையே? ஆ,! என்செய்வேன்! இது சாஸ்திர சம்மதமா?

விடை—ஓ, பரம பவித்திரதையான பிரியசகோதரியே! உன்னுடைய வைராக்யாதி வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், எனக்கு மிகவும் சந்தோஷமானது. இனிமேல் பிறவிப்பிணி உனக்குவராது. தயா ஸமுத்திரனான ஸ்ரீபரமேசுவரன் நம்மை இரக்ஷிப்பார், பரிதவிக்காதே. இன்றுவரையில் உன்னுடைய பிராரப்தத்தினால் துன்பப்பட்டாய், இனி இராது என்னும் இனிய வசனங்களால் மனங்களிக்கச் செய்து பின்வருமாறு சொன்னார்.

தாயே! அத்யாத்மஞான மென்னும் பெரிய தனத்திற்கு ஆண் பெண் அனைவரும் சுவதந்திரர்களே யாவார்கள். அது அவரவர்கள் மனத்துற்றதேயன்றி மற்றொன்றுமில்லை. கண்களினால்பார்ப்பதற்கும் நாக்கினால் சுவையைக் கிரகிப்பதற்கும், கால்களால் நடப்பதற்கும், அவரவர்களுக்கு எவ்விதமாக அதிகாரமுண்டோ, அப்படியே அவர்களெல்லோரும் மனத்தினால்தியானித்து சாசுவதாநந்தமோக்ஷ சுகத்தையடையலாம். இது எமது குருசுவாமிகளவர்கள் திவ்விய ஸ்ரீபாத பத்மங்கள் சாக்ஷியாக ஸத்தியம். நேத்திர ரோகமில்லாதவர்கள் எல்லோரும் எவ்விதம் சூரியனைத்தரிசிப்பார்களோ, அவ்விதமே ஈசுவர கருணையென்னும் திவ்வியாஞ்சனத்தினால் அஞ்ஞான இருள் அகன்றவர்களெல்லோரும் பரமாத்மாவைத்தரிசிப்பார்கள். இது, நிர்மலமான வேதத்தினுடைய நிச்சய அபிப்பிராயமும் ஸஜ்ஜன ஸம்மதமுமாம். இன்னும் உனக்கு விளங்குதற்காக வேத சாஸ்திராபிப்பிராயத்தைச் சிறிது சொல்லுவோம் ஸாவதான சித்தமுடையவளாய்க்கேள்.

1. கருணாமூர்த்தியும் ஸ்ரீ கைலாசவாஸியுமான பரமேசுவரன் ஸமஸ்தமான வேத வேதாந்த இரகசியங்களெல்லாவற்றையும் ஜகஜ்ஜனனியான பார்வதிதேவிக்கு உபதேசித்ததாகச் சாஸ்திரத்தில் காணப்படுகின்றது. அவ்விதமாகவே, பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் பூதேவிக்குப் போதித்ததாக வைஷ்ணவாகமாதி அநேக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைக் குறித்து



யோசித்துப்பார்த்தால், ஸ்திரீகள் பிரம்ம வித்தைக்கு அதிகாரிகளல்லாவிட்டால், அந்தத் தயாமூர்த்திகள் எவ்வாறு சொல்லுவார்கள்?

2. அறுபத்து நாலு கலைவடிவளான ஸ்ரீபாரதியானவள் ஸ்திரீயல்லவா? 'யாபிரம்மாச்சுதசங்கர பிரபிருதிபிர் தேவைஸ்ஸதா பூசிதா' (பிரம்மாதிதேவர்களால் எவள் பூஜிக்கப்படுகின்றாளோ) என்று சாஸ்திரத்தில் காணப்படுகிறது.

3. பிரம்ம வித்துக்களுள்ளே மூர்த்தினியான யாக்ஞவல்கியமகரிஷியானவர் பிரம்மதத்துவத்தைத் தன்னுடைய மனைவியான மைத்திரேயிக்குப் போதித்த விஷயம் பிருகதாரண்யக உபநிஷத்திலும், ஸ்ரீகபிலாசாரியர் பிரகிருதி புருஷதத்துவத்தைத் தன்னுடைய மாதாவ்வான தேவஹூதிக்குப் போதித்த விஷயம் சாங்க்ய சாஸ்திரத்திலும் உலக முழுவதும் தெரிந்ததல்லவா? மதங்கமகரிஷியான ருஷிபுங்கவர் சபரியை ஞானவதியாகச் செய்த விஷயம் இராமாயணத்தில் பிரசித்தமாகச் சொல்லப்பட்டிருக்கவில்லையா? சூடாலை என்னும் மஹாயோகினி தன் புருஷனான சிகித்வஜமஹாராஜனுக்குப் பிரம்ம தத்துவ உபதேசத்தைச் செய்ததாக வாசிஷ்டத்தில் காணப்படுகின்றதே. சுலபை யென்னுமோர் உயர்ந்த யோகினி ஜீவன்முக்தனான ஜனகமகாராஜனைக்கூட அநேக விதங்களாகச் சோதித்த கதையைக் கேள்விப்பட்டதில்லையா? இதுவுமல்லாமல், ஸ்ரீபக்த விஜயத்தில் சக்குபாய், மீராபாய் முதலிய அநேக ஸ்திரீரத்னங்கள் மஹாத்மாக்களான கதை லோகப்பிரசித்தியாக இருக்கின்றது. வைஷ்ணவ பக்தர்களில் சிரேஷ்டர்களான பன்னிரண்டு ஆழ்வார்களின் சரித்திரமான திவ்விய பிரபந்தத்தில் ஆண்டாள் என்னும் அம்மையினுடைய விஷயம் உலகமுழுமையும் தெரிந்த சங்கதியல்லவா? அவ்விதமாகவே சிவபக்த சிரேஷ்டர்களான அறுபத்து மூன்று நாயன்மார்களில் மங்கையர்க்கரசியார் காரைக்காலம்மையார் முதலானவர்கள் பரமபவித்திரர்களென்ற கதை பெரிய புராணத்திற் பார்த்ததில்லையா? அவ்வளவு தூரம் ஏன் செல்ல வேண்டும். நம்முடைய ஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பென்னும் மஹாயோகினியின் மஹிமையைச் சொல்லத்தரமா? திகந்த விச்ராந்த கீர்த்தியுள்ள ஸ்ரீபகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவருடைய குரு ஒரு பரமயோகினி என்னும் விஷயம் எமக்கு நன்றாகத் தெரிந்ததேயாம்.

உலகத்தில் கீர்த்தி பெற்ற ஸ்ரீவிவேகாநந்த சுவாமிகளின் சிஷ்யவர்க்கத்தில் ஸ்ரீஸோதரி நிவேதிதை என்னும் பெண்மணி பரம

வித்திரியான மஹாயோகினியாம். இவர் வடஹிந்து ஸ்தானத்தில் அநேக இடங்களில் ஸ்திரீகளின் நன்மைக்காக யோக மடங்களேயும் வித்தியாமந்திரங்களேயும் ஸ்தாபித்த புண்ணியவதியாவார். இப்பு நிதவதி சமாதியடைந்து ஐந்து வருடங்களாயின. இப்பாக்கிய வதி ஆங்கில பாஷையில் அநேக கிரந்தங்களேப் பிரசுரித்திருக்கின் ருர்கள். இன்னும் தேகப்பயிற்சியில் தாராபாய், கானவித்தையில் கோஹர்ஜான், அத்யாத்ம வித்தையில் ஆனிபிஸண்டு அம்மையார், சரஸ்வதி ஸமமான ஸரோஜினி தேவியார் முதலானுர் ஸ்திரீ களல்லரா?

ஸ்திரீகளுக்குப் பிரம்ம வித்தையில் அதிகாரமில்லே யென்று சொல்லுபவர்கள், பெண்களுக்கு ஞானம் உண்டானுல் தம்முடைய விஷய போகங்களுக்குப் பங்கம் நேரும் என்ற கருத்தோடு சொல்லி யிருக்கலாமேயல்லாமல் சாஸ்திர சம்மதமாகச் சொன்னதல்ல வென் றறிய வேண்டும்.

ஸ்திரீகளுக்கு நோய்வரும் பொழுது மருந்தை உண்பதற்கு அதிகாரமிருக்குமேயாளுல், மிகப்பாதையாயுள்ள இந்த அக்ஞான நோயைத் தொலேப்பதற்கு ஞானத்தை அவலம்பிக்கலாம்.

இவ்விஷயத்தைச் சொல்வதற்கு அநேக திருஷ்டாந்தங்களிருந் தும், கிரந்த விஸ்தாரபயத்தினுல் விடப்பட்டது. இந்தப் பிரம்ம வித் தையை அப்பியசிப்பவர்களுக்குச் சாதனசதுஷ்டயங்கள் மாத்திரம் நிறைந்திருக்க வேண்டும்; இல்லாவிடில் நிஷ்பிரயோஜனமாம்.

இன்னும், சுத்தமான சகோதரியே! தேகபுத்தியினுற் பார்த் தாலும் புருஷர்களேவிட ஸ்திரீகளுக்கு ஞானம் முக்கியமாக இருக்க வேண்டும். ஏனென்றுல், குழந்தைகள் தமக்குப் புத்திவருகிறவரை யில் எந்நேரமும் தாயினிடம் விடாமல் இருப்பதால், தாயினு டையகுணங்களே குழந்தைகளுக்குத் தப்பாமல் உண்டாகுமல்லவா! புத்தி வந்த பிறகே தந்தையிடமிருந்து ஏதாவது குணங்களேத் தெரிந்து கொள்ளச் சாத்தியமாகும். தாய் கடவுளிடத்துப் பக்தியுள் ளவளாயிருந்தால் இளமையிலிருந்தே குழந்தைகளுக்கு ஜீவகாருண் ணியம், தெய்வ பக்தி, புண்ணிய கர்மம், சாத்வீக ஆகாரம், பகவத் ஸங்கீர்த்தனம் இவைகளே எளிதாகக் கற்பிப்பாள். அதுவுமல்லாமல், தாயானவள் சின்னஞ்சிறுவயதிலேயே குழந்தைகளேக் கட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்துப்பராட்டுவதன்றி அவைகளுக்கு அருங் கீர்த்தனேகளேயும் வேதாந்த தத்துவமமைந்த



அரிய பாடல்களேயும் பாடிச் சாந்தப்படுத்துவதேயல்லாமல்,இப்பொழு துற்றவர்கள் குழந்தைகளுக்குத் தாலாட்டும் இழிவுப் பேச்சுக்க ளிராவல்லவா? மேலும் புருஷருடைய சௌக்கிய முழுவதும் ஸ்திரீ களுடைய தலேயின் மீது யிருக்குமே தவிர, புருஷனுல் ஒன்றுஞ் செய்யமுடியாது. ஸ்திரீ நல்லவளாயிருந்தால் புருஷனுடைய ஜன்ம சாபல்யம் சுலபமாகக் கைக்கூடுமென்று சாஸ்திரம் சொல்லுகின்றது. இல்லாவிட்டால், புருஷனுக்கு அதைவிடப் பெரிய கொடுமையான நரகம் மற்றென்றில்லே. இளமையிலிருந்து குழந்தைகளுக்கு நல்ல நடத்தைகளேக் கற்பித்துக் கொண்டுவந்தால், அவை எப்பொழுதும் வீணுகா. ஒரு பூசினிக்கொடி ஒன்றிற்படர்ந்தால் அதிலிருந்தும் மாற்றுவதற்கு எப்படி முடியாதோ, அப்படி இளமையிலிருக்கும் சுபாவத்தை மாற்றுவது கஷ்டமாகும். இதில் மற்றொரு பெரிய இரகசியம் இருக்கின்றது. அது என்னவென்றுல், ஸ்திரீகள் கர்ப்ப வதியாயிருக்குங் காலத்தில் அவர்களுடைய விசாரத்தை (மனேபாவ னேயை) அநுஸரித்தே பிள்ளேகள் தவறுமல் பிறப்பார்கள். விசாரம் ஒரு அச்சுபோன்றது. மனது, மூசையில் விட்டு உருக்கிய வெண் கலம் போன்றது. உருகிய வெண்கலத்திற்குத் தனிமையான உரு வம் கிடையாது. அச்சினுடைய வடிவம் எப்படியிருக்குமோ, அப் படி அதனிடத்தில் விடப்பட்ட வெண்கலம் அதற்குச் சமானமான உருவத்தையடையும். கர்ப்பிணியான ஸ்திரீயினுடைய பாவனேயை அநுஸரித்துக்கருத்தரிக்கும். இதற்குப்பிரஹ்லாதனும் அபிமன்யனும் சாக்ஷியாவர். பிரஹ்லாதன் அசுர பீஜமானுலும், தனது தாயினது வயிற்றிலிருந்த காலத்தில் அவள், ஸ்ரீ நாரத மகரிஷிக்குப் பணி விடை செய்து, அவருடைய உபதேசப்பிரகாரம் பரமாத்மாவைத் தியானித்ததினுல் பிரஹ்லாதன் பாகவத உத்தமனுய்ப் பிறந்ததற் குக் காரணமாக இருப்பதை ஸ்ரீமத் பாகவதத்தில் விவரமாய்க் காணலாம். அவ்விதமாகவே, அபிமன்னன் சுபத்ரா தேவியி னுடைய வயிற்றிலிருந்த காலத்தில், அர்ஜுனன் பத்ம வியூகத்தினுற் போர் செய்யும்சங்கதியைச் சுபத்திரைக்குச்சொல்லி பத்மவியூகத்திற் பிரவேசித்துத்திரும்பிவரும் மார்க்கத்தைச்சொல்வதற்கு முன்னமே, கருணமயரான ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி தடுத்ததாக புராண கதையுண்டு. ஆகையால் கர்ப்பிணியாயுள்ள ஸ்திரீகளேப் பயப்படுத்தக்கூடாதென் றும், பயங்கரமான செயல்களேக் காட்டக்கூடாதென்றும், பயத்தை உண்டாக்கும் பேச்சுக்களேக் கணவன் [illegible] கூடாதென்றும், சத்வமான உணவுகளே உண்பிக்க வேண்டுமென்றும், [illegible]யான சத்

224239

கதைகளைக் கேட்பிக்கவேண்டுமென்றும், தெய்வ பக்தியோடு இருக்கவேண்டுமென்றும், சாஸ்திரம் சொல்வதற்கு இதே காரணமாம். ஆதிகாலத்தில் எல்லோரும் பரம பக்தர்களாய் ஞான நிஷ்டையில் ஸ்திரீகளும் இருந்த காரணத்தினால் சிசுக்களும் மஹா ஞானவான்களாயிருப்பதற்குக் காரணமானது. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் பரமாத்ம தியானநிஷ்டையோடு கூடியிருந்தால் அதை அநுஸரித்தே புத்திரர்கள் கூட ஞானிகளாய் ஜனிப்பார்கள். இது ஸர்வ சாஸ்திர சம்மதமாம். ஐயோ! நம்முடைய தந்தை தாயர் பகவத் பக்திக்கும், பரமாத்ம தியானத்திற்கும் சிறிது தயையைக் காட்டி நம்மைச் சன்மார்க்கத்தில் செவ்வனே செலுத்தியிருப்பார்களானால் நாமெல்லோரும் ஞானமூர்த்திகளாய் ஜனித்திருப்போமல்லவா? அவ்வித மேன்மையான நிலைக்கு உயர்த்தாத காரணத்தினால் நாம் இந்தக் கஷ்டகதியை யடையலானோம். ஆதலால், இனியாவது புருஷர்கள் தங்கள் மனைவிகளை வண்டிகளை இழுப்பதற்காகப் பணங்கொடுத்துவாங்கின குதிரைபோல் தமது அற்ப சுகபோகத்திற்கு மாத்திரம் வாங்கப்பட்டதென்ற கோர பாப புத்தியை விட்டு, அவர்களைக் கூட ஜபதியான நிஷ்டைகளைச் செய்வித்து சத்புத்திரர்களைப் பெற்று சாசுவத சுகமூர்த்திகளாய் இருக்கக் கருணாமூர்த்தியான பரமேசுவரனை நாம் பிரார்த்திக்கின்றோம். இச்சங்கதியை ஸ்ரீவிவேகாநந்த சுவாமிகள் அப்போதைக்கப்போது சொல்லிக்கொண்டேயிருந்தார். தனக்குச் சித்தித்த சமஸ்த ஞானங்களும் தன் தாயினால் சித்தித்தனவென்றும், தன் தாயார் புத்திர சாந்தானமில்லாமல் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் வெகுகாலம் பரமசிவனைக் குறித்து தியானித்துக் கொண்டிருந்தாளென்றும், அங்கிருந்து திரும்பிவந்த பிறகு தான் ஜனித்ததாகவும் சொல்லியுள்ளார். இந்த விஷயமாய்த் திவ்யஞான தீபிகையில் ஒரு வியாசம் நாம் படித்தோம். அது என்னவென்றால், இங்கிலாந்து ராஜ்யத்தில் ஒரு ஏழை ஸ்திரீக்கு ஒரு குமாரன் இருந்தான். அச்சிறுவன் இளமையிலிருந்து மற்ற பாலர்களை அடிப்பதும் கடிப்பதும் பிராணிகளைக் கொல்வதுமாய்ப்பல கொடுங்கார்யங்களைச் செய்துகொண்டிருந்தான். சிறிது வயது முதிர்ந்த பிறகு கத்தியைக் கையிற்கொண்டு எப்பொழுது சமயம் வாய்க்குமோ அப்பொழுதெல்லாம் பிறருடைய ஆடு, மாடு முதலிய ஜந்துக்களை வீணாகக்கொல்லுவதும், கடைசியில் மனிதர்கள்கூட தனியாக அகப்பட்டுக் கொண்டால் அவர்களது தலையை வெட்டவும் தொடங்கினான். இவ்வித கொடிய செயல்களை நிஷ்காரணமாகச் செய்வதனால் அவனுக்கு மரண தண்டனையைக்



கோர்ட்டார் விதிக்காமல் மிகப்பெரிய சைன்ஸ் சாஸ்திரஞ்ஞர்களை இதற்குக் காரணம் இன்னதெனக் கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தச் சாஸ்திரஞ்ஞர்கள் சொன்னவை அநேகவிதமாக இருந்ததினால் உண்மையான விஷயத்தை அறியமுடியவில்லை. பிறகு ஒரு பெரிய புத்திமானானவர் துன்மார்க்கமாய்ப் பலர்க்குத் துன்பை விளைவிக்கும் இப்பையனுடைய தாயாரை விசாரித்தார். உன்னுடைய குமாரன் இப்படித் துன்மார்க்கனாகயிருப்பதற்குக் காரணம் ஏதாவது உனக்குத் தெரியுமா? நீ கர்ப்ப காலத்தில் என்ன என்ன வேலைகளைச் செய்தாய்? ' என்று கேட்டார். அப்பொழுது அந்த ஸ்திரீ, நான் மிகுந்த தரித்ரஸ்திரீ என்றும், பசுக்களைக்கொல்லும் இடத்தைச் சுத்தம் செய்து அதனாற்கிடைக்கும் கூலியைக்கொண்டு பிழைப்பவளென்றும், பசுக்களையும் ஆடுகளையும் கொல்லும்பொழுது அவைகளின் கை கால்களைப் பிடித்துக்கொள்வதும், அவற்றின் தோலை உரிக்கும்பொழுது கூடவே இருப்பதென்றும், அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதில் தனக்கு மிகவும் பிரியமென்றும், எவ்வளவு ஜந்துக்கள் நாளைய தினம் கொல்லப்படுமோ? அவை எப்படியிருக்குமோ? என்று இரவுமுழுமையும் எந்நாளும் எண்ணிக்கொண்டிருப்பதே தன்னுடைய வேலையென்றும் சொன்னாள். அப்பொழுது மஹா சாஸ்திரஞ்ஞரான அவ்வைத்தியர், இவன் சிசுவாய்க் கர்ப்பத்திலிருந்தபோது இவளுடைய சங்கல்பத்தை யநுசரித்திருப்பதனால், கர்ப்பகாலத்தில் தாயின்குணத்தைச் சார்ந்தே கருத்தரிக்கும் என்றபடி இவள் புத்திரனை இவனுக்கு உண்டான செயல் ஈது என்று தீர்மானித்தார். இதுமனிதர்களுக்கு மாத்திரமே யல்லாமல் ஜந்துக்களுக்கும் இருக்கின்றது. சில விடங்களில் பெண்குதிரைக்கு ருதுசமயம்பார்த்து, ஒரு உயர்ந்த சமஸ்த லக்ஷணங்கள் பொருந்திய ஒரு ஆண்குதிரையை அப்பெண் குதிரையினிடத்தில் நிற்கவைப்பது, முகத்தை நக்கச்செய்வது முதலிய விஷய சேஷ்டைகளைச் செய்வித்துப் பெண்குதிரையின் கண்ணைக்கட்டிவிட்டு அந்தலக்ஷணமான குதிரையைத் தூரமாகக்கொண்டுபோய், மற்றொரு ஏதோ ஸாமானியமான குதிரையைக் கொண்டுவந்து பெண்குதிரையின்மேல் விட்டு கலக்கும்படிச் செய்தபிறகு, இந்தச் சாதாரணமான குதிரையைத் தூரமாகக் கொண்டுபோய், முன்னேகாட்டின சமஸ்தலக்ஷணத்தோடுங் கூடிய குதிரையைக் கொண்டுவந்து எதிரே நிறுத்திப் பெண்குதிரையினது கண்கட்டை அவிழ்த்து ஆண்குதிரையைச் சிறிதுநேரம் அங்கேயே நிறுத்திய

பிறகு, அதைத் தான் வசிக்கும் இடத்திற்குக் கொண்டுபோவார்கள். இப்படி ஏன் செய்யவேண்டுமென்றால், கர்ப்போற்பத்தி காலத்தில் பெண்குதிரை எந்த ஆண்குதிரையை எண்ணிக்கொண்டிருந்ததோ, அக்குதிரையைப் போன்ற இலக்ஷணமுடைய குட்டியை ஈனும் என்பது இயற்கையாகவேயிருப்பதால் சிரேஷ்டமான குதிரையைப் பெற அவ்விதம் செய்வதுண்டு. இவ்வாறு மிருகங்களுக்கு மிருக்கும் பொழுது, அதிக புத்தியையுடைய மனிதர்களைக் குறித்துக்கூறவும் வேண்டுமா? ஆகையால், எவ்விதமாகப் பார்த்தாலும் புருஷர்களை விட ஸ்திரீகளுக்கு ஞானம் அத்தியாவசியம். ஸ்திரீகள் கர்ப்பகாலத்தில் துராசாரிகளாயிருந்தால் அவர்களுக்கு அப்பொழுது பிறந்தவர்களும் குரூரசுவபாவிகளாகவே விளங்குவார்கள். ஸ்திரீகள் சதாசாரிகளாய்த் தெய்வபக்திபரர்களாயிருந்தால், அவர்களுக்கு சக்சந்ததிகள் உண்டாகித் தாய்தந்தையர்களும் கடைத்தேறுவார்கள்.

## பிரம்ம தியானத்திற்குக் காலம்
### கருதவேண்டுவதின்றெனல்

வினா. — ஐயனே! எனக்குப் பல நாள்களாக பெரியதொரு ஐயம் என் மனத்தே இருந்து என்னை வாதிக்கின்றது. அது சாதாரணமானவர்களைக் கேட்கத் தகுந்ததல்ல. தங்களிடமாவது தங்களைப்போன்றவர்களிடமாவது நான் அச்சங்கதியை விண்ணப்பித்து சந்தேகநிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். அது என்னவென்றால் நான் ஸ்திரீயானதினால் ருது காலத்தில் பிரதிதினம்போல் பரப்பிரம்மதியானம் செய்யலாமா? செய்யலாகாதா? என்பதுதான்.

விடை. — அம்மையே! இந்தக்கேள்வி மிகவும் உபயோககரமாக இருக்கின்றது. இந்தச்சந்தேகம் அநேகருக்கு உண்டு. இது மிகவும் மேலான சங்கதி. இந்த விஷயம் தேகபுத்தியை உடையவர்களை மாத்திரம் அதிகமாகப் பாதிக்குமேதவிர, ஆத்ம புத்தியை யுடையவர்களை இச்சந்தேகம் பாதிக்கமாட்டாது. பரப்பிரம்மநிஷ்டை எப்பொழுதும் இருக்கவேண்டும். ஆத்மா எப்பொழுதும் சுத்த, புத்த, முக்த சுபாவ மாக இருக்கின்றது. அதற்குத் தேக இந்திரியங்களோடு ஒருவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆதலால், காலபேதத்தைக் கருதாமல் பிரம்மநிஷ்டையைச் செய்யவேண்டும். ஆனால் சாஸ்திரத்தில் சிறிதுவிரோதம் சொல்லியிருக்கக்கூடும். சாஸ்திரம், கர்மகாண்டமென்றும், ஞான காண்டமென்றும் இரண்டுபிரிவுகளாக இருக்



கின்றது. அதில் கர்மகாண்ட விதியை அநுஸரித்த காரியங்களை ருதுகாலத்தில் செய்யக்கூடாது. அவை யக்ஞாதி கிரதுக்கள். ருதுகாலத்தில் பிரம்ம நிஷ்டர்களான ஸ்திரீகள் தேவதார்ச்சனை, கிரந்தபாராயணம், தம்புரா முதலிய வாத்தியங்களோடு பஜனை செய்தல், கிருஷ்ணாஜினாதி (மான்தோல் முதலிய) ஆசனங்களில் உட்காருதல், துளசி ருத்ராக்ஷாதிமாலைகளோடு ஜபித்தல்முதலிய சில கர்ம காண்டக் கிரியைகளைச் செய்யக்கூடாது செய்தால் சாஸ்திர விரோதமாகும். பிரம்மத்தியானத்தை மாத்திரம் தவறாமல் செய்யலாம். ஏனென்றால், பரமாத்மா எப்பொழுதும் நம் வடிவாகவே நமது இருதயத்திலிருப்பவர். அவர் அகண்டிதர் (காலதேச வஸ்துக்களால் பரிச்சின்னப்படாதவர்.) ஸர்வவியாபி அங்கிங்கெனாதபடி எங்குமுள்ளவர். எங்கும் நிறைந்து எல்லா வஸ்துக்களாக இருப்பினும் பரிசுத்தர். விக்ரஹாதி பூஜைகளின் விஷயமாய்ச் சொல்லியவை எல்லாம் கண்டங்கள். ஆகையால் தேகத்திற்கு அன்னியமாக இருப்பவைகள், அவ்விதமான வஸ்துக்கள். அவைகளை ருதுகாலத்தில் தொடுவது நலமல்ல. அவற்றின் நிஜ சுவரூபத்தை யறிந்தவர்களுக்கு அனாவசியம். ஆத்மா ருதுகாலத்திலும் இதரகாலத்திலும் தானாய்த் தன்னிடத்திலிருப்பது. அது சஜாதீய விஜாதீய சுவகத பேதரஹிதம். ஆதலால் ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வகாலத்திலும் அதைத் தியானம் செய்யலாம். ருதுகாலத்தில் தியானம் செய்யக்கூடாதென்று சொல்லுவதில் ஒரு பெரிய அபாயத்திற் கிடமுண்டாகும். அது என்னவென்றால், ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் எட்டாவது அத்தியாயத்தில் மரண சமயத்தில், எதைதை நினைந்து இவ்வுடலை விடுவனோ அவ்வவ்வடிவை அடைவான் என்று சொல்லியிருக்கின்றனர். ஆகையால் ஒவ்வொருவரும் நீண்டகாலம் பிரம்ம நிஷ்டையிலிருந்தாலும், மரண காலத்தில் தியானமில்லாவிட்டால், உயர்ந்த பலனைப் பெறமுடியாது. ஆகவே இவ்வளவுகாலம் கஷ்டப்பட்டு ருதுகாலத்தில் பிராணனை விட்டால், அந்தச் சமயத்தில் தியான மில்லாவிடில் என்ன பிரயோஜனம். ஆதலால் எப்பொழுதும் சுவரூபதியானத்தை விடக்கூடாது. எந்தச் சமயத்தில் பிராணன் போகுமோ, அது தெரிவது கஷ்டம். ஆதலினாற்றான் வேதாந்த சாஸ்திரத்தில் அசுசியாயிருந்தாலும் தியானத்தை மறக்கக்கூடாதென்று சொன்ன இரகசியமும் இதுவேயாகும். அசுசி காலத்திலும் தியானிப்பதற்கு இதுமுதலே பழகிவர வேண்டும். மரண சமயத்தில் சுசியாய் நிஷ்டையிலிருந்து பிராணனை விடுவது மிகவும் அரிதாகும். ஆகையால் அசுசிப்போது தியானப்பழக்கத்தைச் செய்துவந்தால் நிர்

யாணகாலத்தில் சம்சயம்உண்டாகாது. அப்படிக்கல்லாமல் சுசிகாலத்தில் மாத்திரம் தியானத்தை அப்யசித்துவந்தால், மலமூத்ராதிகளிலுழன்றிருக்கும் மரணத்தறுவாயில் ஐயோ! சௌசம் ஸ்நாக முதலியவை செய்யாமல் எப்படிப் பரமாத்மாவைத் தியானிப்பதென்று சந்தேக முண்டாகும். அப்பொழுது ஸ்நாநசௌசாதிகிரியைகளுக்குத் தகுந்த சௌகரிய முண்டாகுமென்று நம்பக்கூடாது. சரீராதிகளில் எவ்வளவு அசுத்தங்களிருந்தாலும் ஆத்மாவை அவை பற்றமாட்டா. துர்கந்த ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரியனுக்கு அந்தத் துர்வாசனை பற்றுமென்று நினைப்பது எவ்வளவு புத்தியில்லாமை. தேக தேகிகளுடைய ஸ்திதி அவ்விதமாகவே யிருக்கின்றன. அன்னையே! இவ்விஷயமாய்ச் சாஸ்திரத்தில் சொல்லிய சங்கதிகளுள் சிலவற்றைச் சொல்லுவோம் கேள்.

(சு) யதாபிரகாசயத்யேக: | கிருத்ஸ்னம் லோகமிமம்ரவி: |
க்ஷேத்ரம் க்ஷேத்ரீததா கிருத்ஸ்நம் | பிரகாசயதிபாரத||. ப. அ. 13. சு. 33.

(தா) பாரத! ஒரு சூரியன் உலகமுழுவதையும் எப்படிப் பிரகாசிப்பிப்பானோ, அப்படி ஆத்மா க்ஷேத்திர முழுவதையும் பிரகாசிப்பிக்கின்றான். இங்கு சூரியன் அனைத்தையும் விளக்கினாலும் அவைகளின் மலினங்கள் அச்சூரியனை எப்படிப்பற்ற மாட்டாவோ, அப்படி ஆத்மா உடல் முழுவதையும் விளக்கியும் அவைகளின் அசுத்தங்களாற் பற்றப்படான் என்பதைக் கிரகிக்கவேண்டும்.

(சு) க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞயோரேவ மந்தரம் ஞான சக்ஷுஷா |
பூதபிரகிருதிமோக்ஷஞ்ச ஏவிதுர்யாந் திதேபரம்||. பக.அ.13.சு34.

(தா) இவ்விதமாக க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞர்களுடைய பேதாபேதங்களையும், பிராணிகள் பிரகிருதியிலிருந்து மோக்ஷத்தையடைவதையும், சாஸ்த்ராசார்யப் பிரசாத உபதேச மூலமாக ஆத்மாவை விடுவிக்கும் ஞானக்கண்ணால் எவர் அறிகின்றார்களோ, அவர்கள் பரம்பொருளை அடைகின்றார்கள் என்று பகவான் உபதேசித்திருக்கின்றார்.

(சு). தத்ரைவம்ஸதி கர்த்தார மாத்மானம் கேவலம்துய:|
பஸ்யத்ய கிருதபுத்தித்வாந்ந ஸபஸ்யதி துர்மதி:|| பக அ18.சு16

(தா) அவை இவ்வாறிருக்க, எவன்நிரூபாதிகமும் நிச்சங்கமுமான ஆத்மாவைத் தன் அறிவு திருந்தப்பெறுமையினால் கர்த்தாவாகக்



காண்கின்றானோ அந்தத்துன்மதியன் (தமோகுணத்தினால்தேகாத்ம புத்தியையுடைய மூடன்) ஆத்துமதத்துவத்தை யதார்த்தமாக அறிய மாட்டானென்று பகவத் வசனம்.

(சு). தேஹோ ஹமித்யேவ ஜடஸ்ய புத்திர்|
தேஹேச ஜீவே விதுஷஸ்துவ ஹம் தீ:||
விவேகவிக்ஞா நவதோ மஹாத் மனோ|
பிரம்ஹாஹ மித்யேவ மதிஸ்ஸதாத்மனி||

(தா). தமோகுணத்தினால் ஜடபுத்தியுடையவனுக்கு சரீரமேதானென்ற புத்திதிடமாக இருக்கும். சிறிது கற்று நிர்மலபுத்தியுடையவனுக்கு ஜீவனேதானென்ற புத்திதிடமாக இருக்கும். ஆத்மஅனாத்ம விசாரத்தினால் பிரம்மஞானமுள்ள மஹாத்மாவிற்கு நித்ய, சுத்த, முக்தமான பிரம்மமேதானென்னும் புத்தி எப்பொழுதும் ஆத்மாவினிடத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கு மென்று விவேக சூடாமணி சொல்லுகின்றது.

(சு). ஸாகாலஸூத்ரபதவீ ஸா மஹாவீசி வாகுரா |
ஸாஸிபத்ரவ னஸ்ரேணீதேஹோ ஹமிதியாமதி:||

(தா). தேகமேதான்என்கிற எந்தப்புத்தி இருக்கிறதோ, அதுவே காலசூத்ரமென்னும் நரகமார்கமாம். அதுவே ஸூகமென்னும் மஹாவலையாம். தானென்ற அத் தேக புத்தியே அசிவனம் என்னும் நரகக்கூடமாம். ஆதலால் பிராணன் நீங்கும் கஷ்டம் நேர்ந்தாலும் தேகமே தானென்னும் புத்தியைத்தொலைத்து, சாக்ஷியான போதமே தானென்னும் புத்தியை எப்பொழுதும் விடக்கூடாதென்று சித்தகீதையில் ஜனகருக்கு உபதேசிக்கப் பட்டிருக்கின்றது.

(சு.) யம்யம் வாபிஸ்மரன் பாவம் | தியஜத்யந்தேகளேபரம் |
தம் தமேவைதி கௌந்தேய | ஸதா தத்பாவபாவித:||

(தா.) குந்திமைந்த! ஒருவன் தன் மரணகாலத்தில் எந்தெந்தப் பாவனைகளை நினைத்து உடம்பை விடுவானோ, அந்தந்த அவஸ்தையையே தவறாமல் அடைவான். காரணமென்ன வென்றால், மரணத்திற்கு முன் எந்தெந்த பாவனைகள் தன் இருதயத்தில் பாவிக்கப்பட்டனவோ, மரண சமயத்தில் அவைகளே உண்டாகும். ஆதலால் எப்பொழுதும் பரமேசுவர தியானத்தை மறக்கக்கூடாதென்பது கருத்தாம்.

(சு.) "தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர" பக. அ. 8. சு. 7

(தா) ஆதலால் ஓ, அர்ஜுனா! சர்வகால சர்வாவஸ்தைகளில் பரமாத்மாவான என்னைத்தியானித்துக் கொண்டேயிருக்கவேண்டும். இவ்வாறு சொல்லுவதினால் காலத்தைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. மேலும், எல்லாமந்திரங்களையும் விட அஜப, காயத்ரி முக்யமானவை இந்த அஜபமந்திரத்தை ஜீவர்கள் ருது காலத்திலும் ரதிகாலத்திலும் விடாமல் எப்பொழுதும் தினமொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறு நூறு முறை ஜபித்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த இரகசியம் முக்கியமாகப் பிரம்மவேத்தாக்களெல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

(சு.) ஸகாரேண பஹிர்யாதி | ஹகாரேண விஶேத்புனஃ||
ஹம்ஸஹம் ஸேதி யந்மந்த்ரம் | ஜீவோஜபதி ஸர்வதா||

(தா.) இருதய கமலத்திலிருந்து, ஸகாரத்தினால் வெளியே வந்து, மறுபடியும் ஹகாரத்தினால் உள்ளே பிரவேசித்து ஸோஹம் ஸோஹம் என்று எப்பொழுதும் பிரம்மாத்மைக்ய மஹா மந்திரமான ஜபம் நடந்து கொண்டேயிருக்கின்றது. இந்த இரகசியம் தெரியாமலே பந்தப்பட்டவர்களாகின்றார்கள்.

(சு.) அத்தியந்த மலினோதேஹோ | தேஹீத்வத்யந்த நிர்மலஃ |
உபயோ ரந்தரம் ஞாத்வா | கஸ்ய சௌசம் விதீயதே||

(தா.) பஞ்சபூதக்கூட்டமாய் மலமூத்திர கிருமி கீடங்கள் பொருந்திய இந்தத்தேகம் எவருடையதானாலும் சரியே, எப்பொழுதும் அசுசியானதே. சுத்த முக்தமாயிருக்கும் ஆத்மா எப்பொழுதும் பரிசுத்தமாகவே இருக்கின்றது. இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்து கொண்டால் சௌசவிதி (சுத்தப்படுத்தவேண்டிய கடமை) எதற்குச் சொன்னதென்று தெரியவரும். ஒருவேளை சௌசாசாராதி கிரியைகள் தேகத்திற்குச்செய்யப்பட்டாலும் இருதய சுத்தியைச் செய்வதற்கு எவரால் கூடும்? இருதயத்திலிருந்தல்லவா எல்லா மந்திரங்களும், தியானங்களும், வேதாத்யயனங்களும் உண்டாகின்றன. அங்குச்சுத்தியைச் செய்பவர்கள் எவராவது இருக்கின்றார்களா? இல்லை. எச்சில் பாத்திரத்தை மேலுக்குச் சுத்தமாகக் கழுவி, உள்ளே நெடு நாளாக விருக்கும் எச்சிலைக்கழுவாமல், கெட்ட வாசனையோடு இருக்கும்பொழுது அந்தப் பாத்திரம் சுத்தமாக இருக்கிறதென்று சொல்லுவது எவ்வளவு பயித்தியம்?



(சு.) ஸர்வேஷாமேவசௌசானா மர்த்தசௌசம் பரம்ஸ்மிருதம் |
யோர்த்தேசுசிஸ்ஸ சுசிஃ ந ம்ருத்வாரி சுசிஸ்சுசிஃ||

(தா.) சௌசாதி கிரியைகள் எல்லாவற்றிலும் மனோபரி சுத்தம் மேலான சுத்தியென்று மகரிஷிகள் நினைப்பார்கள். எவன்நிர்மல மனத்தனாக இருப்பனோ, அவன் எவ்வளவு அசுத்தனாக விருந்தாலும், மஹாசுசியையுடையவன். மனோசுத்தியில்லாதவன் மண்ணாலும் நீராலும் எத்தனை தரம் சுத்தியைச் செய்தாலும் அவன் மிகவும் அசுத்தனென்றே சாணக்யஸ்மிருதி சொல்லும்.

(சு.) வாசாம் சௌசம் ச மனஸஃ | சௌசமிந்திரிய நிக்ரஹஃ |
ஸர்வபூத தயாசௌச | மேதத்சௌசம் பரார்த்தினாம்||.

(தா.) பரமாத்மாவைச் சிந்தைசெய்பவருக்கு இருக்கவேண்டிய சௌசம்(தூய்மை), ஹிதோபதேசம் சொல்லுகின்றதாவது:—1. வாக்சுத்தி அதாவது, ஸத்யமாகவும், பிராணிகளுக்கு இதமாகவும் இனிமையாகவும் பேசுவது. 2. மனோ சுத்தி அதாவது, கெட்ட எண்ணமற்றிருப்பது (விஷய வாஸனை யில்லமாமலிருப்பது) 3. சக்ஷுராதி இந்திரிய சுத்தி அதாவது நேத்ராதி இந்திரியங்களை அதனதன் விஷயங்களான கெட்ட விருத்திகளில் பிரவேசிக்க வொட்டாமல் தடுப்பது. 4. எல்லாப் பிராணிகளிடத்திலும் கருணையோடிருப்பது இவையே உண்மையான சுத்தியாம்.

(சு.) ஞானசௌசம் பரித்யஜ்ய | பாஹ்யே யோ ரமதே நரஃ |
ஸமூடஃ காஞ்சனம் த்யக்த்வா| லோஷ்டம் கிருஹ்ணாதி ஸுவ்ரத||

(தா.) மேற்சொன்ன ஞான சுத்தியை வெறுத்துப் புறச்சுத்தியில் அழுந்தியவர்களாய், அதாவது மேற்குறித்த குணங்களில்லாதவர்களாய் மூன்று சந்திகாலத்தில் நீரில்மூழ்கல், ஊர்த்வபுண்டரங்களையாவது சோடசவிபூதி திரிபுண்டரங்களையாவது தரித்தல், துளசி ருத்ராக்ஷம் முதலிய மாலைகளை அணிதல், மடிவஸ்திரத்தைக் கட்டிக்கொள்ளுதல் முதலிய வெளி ஆசாரக்கிரியைகளைக் கொண்டிருப்பவர்களின் விவேகம் எப்படியிருக்குமென்றால், கையிலிருக்கும் தங்கத்தை எறிந்து விட்டு மண்ணாங் கட்டியைக் கிரகித்தல் போலாகும்.

(சு) ரத்யந்தரே மூத்ர புரீஷயோர்வா |
சண்டாள வேஶ்ம ன்ய தவா ஶ்மஶானே |
கிருதபிரயத் னோப்ய கிருதபிரயத்நஃ |
ஸதாஸ்மரேத் கேசவநாமதேயம்||

(தா.) ரதிகாலத்திலாவது, மலமூத்திர விஸர்ஜன சமயங்களிலாவது, பறையரது சேரியிலாவது, சுடலையிலாவது, ஸ்நாநஸந்த்யாதி கிருத்யங்களினால் சுசியோடிருந்தாவது, கைகால் கழுவாமலாவது ஸர்வேஸ்வரஸ்மரண தியான கீர்த்தனங்களைச் செய்யலாமென்று வைசுவாநரஸ்மிருதி சொல்லுகின்றது.

(சு.) நோதேசகாலநியமஃ | சௌசாசௌசவிநிர்ணயஃ |
பரம் சங்கீர்த்தனாதேவ | ராமராமேதி முச்யதே||.

(தா.) பரமாத்மாவின் தியானத்திற்குத் தேச கால நியமங்களில்லை, தேசமென்றால், புண்ணிய ஸ்தலத்திலும் அல்லது அசுத்தமான மலின பூமியிலும் இருந்து தியானஞ் செய்யலாம். காலமென்றால், உதயாஸ்தமனாதி சமயத்திலும் தியானம் செய்யலாம். அல்லது ருதுகாலம், சூதககாலம் முதலிய கால பேதங்களையும் கவனியாது தியானம் செய்யலாம். நியமமென்றால், ஸ்நாநம், மடி, ஆஸனாதிகள் இவை இல்லாமலே தியானம் செய்யலாம். ஆகவே, சுத்தியோடிருந்தாவது, அசுத்தியோடிருந்தாவது தியானம் செய்யலாம். ஸ்ரீராமராம என்னும் மிகச்சிறந்த ராம ஸங்கீர்த்தனத்தை எந்தச் சமயத்தில் செய்தாலும் பந்தத்திலிருந்து விடுபடச் செய்யும்.

(சு) சுசிர்வாப்ய சுசிர்வாபி | யோஜபேத் பிரணவம் ஸதா |
ஸ நலிப்யதி பாபேன | பத்மபத்ர மிவாம்பஸா||

(தா.) சுசியோடிருந்தாவது, அசுசியோடிருந்தாவது எவன்பிரணவத்தை விடாமல் எப்பொழுதும் ஜபிப்பானோ (பரமாத்மாவைத்தியானிப்பானோ), அவன் தாமரை இலை தண்ணீரை எவ்விதம் ஒட்டாமலிருக்குமோ அவ்விதம் பாபத்தினால் (ஸம்ஸார மலினத்தால்) பற்றப்படமாட்டானென்று யோக சூடாமணி உபநிஷத் சொல்லுகின்றது. இன்னும் இவ்விஷயமாக மூடர்கள் தெரிந்து கொள்வதற்கே ஸந்தியா வந்தனத்தில் எப்பொழுதும் செய்யலாமென்ற இவ்விரகசியமானமந்திரத்தைப் படிப்பிக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

(சு.) அபவித்ரஃ பவித்ரோ வா | ஸர்வாவஸ் தாம் கதோபி வா |
ய ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் | ஸ பாஹ்யாப்யந்தரஃ சுசிஃ||.

(தா.) எவன் ஸ்நாந முதலிய கிரியைகளினால் சுத்தமாயும், ஸ்நாந ஸந்தியாவந்தன முதலியவைகளைச் செய்யாமல் அசுத்தமாயும் அல்லது எல்லா அவஸ்தைகளையுமடைந்து மிருந்தாலும் அதாவது அசௌசமாயும், சூதகமாயும், மலமூத்திரங்களை விடும் சமயமாயும்,



ஸ்திரீயால் பிரசவித்த காலமாயும், வீட்டுக்கு விலக்கமாயும் இருந்தாலும், அப்பொழுதும் பரமாத்மதியானத்தைச் செய்யலாம். அப்படித் தியானிப்பவர்கள் அந்தத் தியானத்தின் மேன்மையான பரிசுத்தத்தினால் அசுசியாயிருப்பவர்களும் அப்பொழுதே அகச்சுத்தியும், புறச்சுத்தியும் உடையவர்களாவார்கள்.

(சு.) ஸர்வதர்மான் பரித்யஜ்ய | மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ | மோக்ஷயிஷ்யாமி மாசுசஃ||.

பக. அ. 18. சு 66.

(தா.) ஓ, அர்ஜுனா! நீ, உலகில் எவ்வளவு தர்மங்களிருக்கின்றனவோ, அவ்வெல்லாத் தர்மங்களையும் துறந்து பரமாத்மாவாகிய என்னை ஒருவனையே சரணாகதியாக (அடைக்கலமாக) நாடிக்கொள். நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுபட்டவனாகச் செய்கிறேன், வருந்தாதே. அதாவது கர்மகாண்டத்தில் சொல்லியுள்ள தர்மங்கள் ஏகாந்தபக்தியோடு தியானிக்கும் பிரம்மநிஷ்டர்களுக்கு அனாவசியம். கர்மகாண்ட அனுஷ்டானத்தினால் உண்டாகும் பயன் சொற்பமாம். ஞானகாண்ட அனுஷ்டானமான பரமாத்மதியானத்தினால் உண்டாகும் பயன் மிகவும் அதிகமாம். நூறுரூபாயளவு லாபம் வரும்பொழுது ஒரு காசளவு கடன்வந்தால், அதனால் என்னதோஷம்? என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத்கீதையில் மிகவும் இரகசியமாக இருக்கும் இச்சுலோகத்தைத் திருவாய்மலர்ந்துள்ளார். இதை ஸ்ரீராமாநுஜாச்சாரியார் அவர்கள் வேதஸாரமென்றும் ஸ்ரீ கிருஷ்ணமதமென்றும் சரமசுலோகமென்றும் போதித்தார்.

(சு.) விதினாz விதினா வாபி | பக்த்யா யே மாமுபாஸதே |
தேப்ய: பலம் பிரயச்சாமி | பிரஸன்னோஹம் நஸம்சய:||

(தா.) எவர் அனன்யபக்தியோடு விதிப்படியாவது விதியைமீறியாவது ஸர்வேசுவரனாக இருக்கும் என்னை (பரமேசுவரனை)த் தியானிப்பார்களோ, அத்தகைய பக்தர்களுக்கு நான் பிரஸன்னனாய் அவர்கள் விரும்பும் பலன்களை அளிப்பேன். இதில் சந்தேகமில்லை யென்று ஸ்ரீ சிவகீதையில் பரமசிவன் பிரதிக்ஞை செய்திருக்கின்றார்.

(சு.) தேஹோஹம் மானபாசேன | திருடம் பத்தோஸி ஸர்வத: |
போதோஹம் ஞானகட்கேன | தன்னிகிருத்ய சுகீ பவ||

(தா.) ஓ, பரம்பரிசுத்தளான சகோதரியே! தேகமே தானென்னும் மாயாபாசத்தினால் கெட்டியாக எப்பொழுதும் கட்டப்பட்டவ

னாயிருக்கின்றாய். இப்பொழுது தேகவிலக்ஷணமாய், சாக்ஷியாய், போதரூபமாயிருக்கும் வாளினால் அந்தப்பாசத்தை அறுத்து விமுக்தியையடைவாயாக. அதாவது, தேகமேதானென்ற பாவனையே பந்தம். பிரக்ஞானமான போதமேதானென்ற திடபுத்தியே ஜீவன் முக்தியென்று ஸ்ரீவசிஷ்டர் ஸ்ரீ இராமசந்திர மூர்த்திக்கு உபதேசித்தார். மேற்சொன்னவைகளெல்லாம் பரமார்த்த தத்துவமறிந்தவர்களைக் குறித்துச் சொல்லியவை. அப்படிச்சொல்லுவதினால் சுசி, ஆசாரங்கள் அவசியமில்லையென்பது அபிப்பிராயமல்ல. ஸ்நாந, சௌசாசாரங்கள் தவறாமல் இருக்கவேண்டியவையே; சுசி இல்லாமலிருக்கக் கூடாது. அது தமோகுண ஸ்வபாவம். ஆகையால் சுசி, ஆசாரங்கள் பிரம்ம நிஷ்டர்களுக்கு அத்யாவசியம். "ஆசாரஹீநம் நபுனந்தி வேதா:" ஒழுக்கமற்றவனை வேதங்கள் பவித்திரனாகச் செய்யமாட்டா. ஆகையால்,மேலோர் ஒழுக்கப்படி பிரவர்த்திப்பது மிகவும் மேலானது.

(சு.) பிரம்மசாரீ கிருஹஸ்தோ வா| வானப்ரஸ்தோத வா யதி:|
நாரீ வா வ்ருஷலோ வாபி | பக்வோ பிரம்ம விசாரயேத்||

(தா.) பிரம்மசாரீ, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன் அல்லது யதி, ஸ்திரீ, சூத்திரன் இவர்களில் யாருக்காவது மனோபரிபக்குவமிருந்தால் பிரம்மவிசாரம் செய்யலாமென்று ரம்ணகீதை.

(சு.) யோகாதி காரிணஸ்ஸர்வே | பிராணினஸ்ஸர்வதா யத: |
பாலோவிருத்தோ வியாதியுக்தோ| யுவா ஸ்திரீ சூத்ரஜன்மபிருத்||

(தா.) ஸம்ஸாரதுக்க நிவர்த்தியின் பொருட்டு எல்லோரும் ஞானத்திற்கு அதிகாரிகளே யாவார்கள் (அதாவது பால்யன், வயது சென்றவன், வியாதியுடையவன், எவ்வனப் பருவமுள்ளவன், ஸ்திரீ, சூத்ரன்) ஆகிய இவர்களெல்லோரும் சமான அதிகாரிகளே யென்று ஸனத்குமாரஸம்ஹிதை.

(சு.) மாம்ஹிபார்த்த வ்யாபாஸ்ரித்ய | யேபிஸ்யு: பாபயோ நய: |
ஸ்திரியோ வைஸ்யாஸ்ததா | சூத்ராஸ்தேபி யாந்தி பராங்கதிம்||

(தா.) ஓ, பார்த்த! தாழ்ந்தபிறவியில் பிறந்தவர்கள் யாரோ அவர்களும், ஸ்திரீகளும், வைசியர்களும், சூத்திரர்களும் என்னைத் தியானித்து ஞானவான்களாகிச் சாசுவ்தாநந்தமான பரமபதத்தை அடைகின்றார்களென்று பகவத்கீதை.

(சு.) மைத்ரேயீ சுலபா சார்ங்கீ | சாண்டிலீ ச தபஸ்விநீ |
ஏதே சான்யே ச பஹவோ | நீசயோநி கதா அபி||
ஞான நிஷ்டாம் பராம் பிராப்தா:



(தா.) மைத்திரேயி, சுலபை, சார்ங்கி, சாண்டிலீ, தபஸ்விநீ, என்னும் ஸ்திரீகளும், தாழ்ந்த ஜாதியிற் பிறந்த மற்றையர் பலரும் மேம்பட்ட ஞான நிஷ்டையை மேவினார்கள். என்றுயோக சாஸ்திரத்தில் காணப்படுகிறது.

(சு.) ஸங்கல்பவாஸனா ஜாலை: | ஸ்வைரேவாயாதி பந்தனம்|
மனோலாலா மயைர்பந்தை: | கோஸகாரக்ருமிர்யதா||

(தா.) மனிதர்கள் தங்களுடைய மனோஸங்கல்பவாஸனா வலைகளால் தங்களுக்குத் தாங்களே இந்த ஸம்சாரமகாபந்தத்தைக் கல்பித்து அதில் சிக்கிக்கொண்டு ஜனனமரணதுக்கங்களுக்குப் பாத்திரர்களாகின்றார்கள். எப்படி யென்றால், பட்டுப்பூச்சி தன்னிடமிருந்து உற்பத்தியான பட்டு நூலினால் கூடுகட்டி அதில் அகப்பட்டுக்கொண்டு அதிலேயே இறந்துவிடுகின்றது.

(சு.) க்ருஸோதி துக்கபத்தோஹம் | ஹஸ்தபாதாதிமானஹம்|
இதிபாவனரூபேண | வியவஹாரேண பத்யதே||

(தா.) நான் மிக மெலிந்தவன்; மிகுந்த துக்கமுடையவன்; கைகால்கள் சக்தியற்று ஒன்றும் செய்வதற்கு முடியாமல் இருக்கிறேன். நான் சூத்திரன்,வைசியன், க்ஷத்திரியன், பிராமணன், ஸ்திரீ, என்று அனாத்மாவான தேகத்தில் ஆத்மபுத்தியோடு கூடி மிருகப்பிராயம்போல் ஸ்வஸ்வரூபமான தன்னுடைய ஸ்திதியைத் தெரிந்துகொள்ளாமல் கட்டுப்பட்டவர்களாகிறார்கள்.

(சு.) நாஹம் துக்கீ நமே தேஹோ | பந்த: கோஸ்யாத்மனஸ்திதி: |
இதிபாவனரூபேண | வியவஹாரேண முச்யதே||

(தா) நித்யசுத்த சுவயம் பிரகாசனான நான் துக்கியல்ல. ஜனனமற்ற எனக்கு தேகம் எப்படி உண்டாகும்? ஸச்சிதானந்த இலக்ஷணங்களையுடைய ஆத்மாவான எனக்கு பந்தமேது? இப்படிப்பட்ட விசாரவடிவவியவகாரங்களினால் முக்தனாகின்றானென்று வாசிஷ்டம்.

(சு.) ஆத்மானாத்ம விசாரேண | முநிர்முச்யதி பந்தனாத் |
தத்வினா ஜன்ம கோட்யாபி | பந்தச்சேதோ நஸித்யதி||

(தா) ஆத்மானாத்ம விசாரத்தினால் மௌனசீலன் ஸம்ஸாரபந்தத்திலிருந்து முக்தனாகின்றான். இந்த ஆத்மானாத்ம விசாரம் செய்யாமல் கோடிஜன்மங்கள் சாஸ்திரபாடத்தை கண்டபாடமாகச் செய்தாலும் பந்தநீக்கத்தைப் பெறமுடியாது.

**(சு.) அஞ்ஞான ஸர்ப்ப தஷ்டஸ்ய | பிரம்மஞ்ஞானௌஷதம் விநா |
கிமு வேதைஸ்ச ஶாஸ்திரைஸ்ச | கிமு மந்திரைஃ கிமௌஷதை:||**

(தா.) அஞ்ஞானமென்னும் கருநாகத்தினால் தீண்டப்பட்டவனுக்கு பிரம்மஞானமென்னும் மருந்தையன்றி, நாலு வேதங்களினாலும், ஆறு சாஸ்த்ரங்களினாலும், அநேகவித மந்திரங்களினாலும், பலவகைக் கல்பங்களினாலும் உபயோகமில்லை, அப்படிப்பட்ட பிரம்மஞானத்தைச் சொல்லப்போகின்றோம். ஒன்றுபட்ட மனத்தோடு கேள். இது வேதவேதாந்தங்களின் இரகசியமாம். இது பல பிறவிகளிற்செய்த புண்ணியகர்மங்களினுடைய பலமாம். இதற்காக ருஷீஸ்வரர்கள் அநேக வருஷங்களாகக் கடுந்தவங்களைச் செய்தார்கள். நீ உத்தமாதிகாரமுடையவளா யிருக்கின்றாய். ஆகையால் இதனுடைய மர்மத்தை இப்பொழுது சொல்லுகிறோம்; ஆசார்யர்களனைவருக்கும் பரமாசார்யராய் மெய்ஞ்ஞானமுத்திரைக்கைம்மலரையுடைத்தாய்க் குறுநகையுடன் விளங்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை இருதயத்தில் பக்தியோடு தியானித்து வெளிமுகமாயிருக்கும் இந்திரியங்களை உண்முகமாக்கி, மனத்தைப்புத்தியோடு ஒன்றுபடுத்தி, அசைவில்லாமல் இருப்பாய். நாம் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லுவாய். வினா:—உன்னுடைய கழுத்திலிருக்கும் மாலை யாருடையது?

விடை:—அது என்னுடையது.

வினா:—அப்பொழுது நீ வேறு, உன்னைவிட அந்த ஆபரணம் வேறல்லவா?

விடை:—ஆம்.

வினா:—இப்பொழுது பிரத்தியக்ஷமாய் இரண்டாக இருக்கவில்லையா?

விடை:—ஆம், இரண்டாகத்தான் இருக்கின்றன.

வினா.—அதுபோல் உன்னுடைய தேகம் யாருடையது?

விடை:—என்னுடையது.

வினா:—அப்பொழுது நீ வேறாகவும், தேகம் வேறாகவுமிருக்கவில்லையா?

விடை:—ஆம்.

வினா:—கைகால்கள் முதலிய கர்மேந்திரியங்களும், கண் காது முதலான ஞானேந்திரியங்களும் யாருடையவை?

விடை:—கண், கை, முதலிய இந்திரியங்கள் எல்லாம் என்னுடையவை.



வினா:—இவையெல்லாம் உன்னுடையவையென்று உனக்கு எப்படி தெரியும்?

விடை:—மனதினால் தெரிந்துகொண்டேன்.

வினா:—உன் மனது நல்லது, உன் மனம் சஞ்சலமானது என்று உனது மனதினால் தெரிந்து கொண்டேனென்னும் சங்கதி எப்படி கிரகித்தாய்?

விடை:—மனது முதலியவைகளுக்கு அதிபதியான புத்தியொன்று இருக்குங்காரணத்தினால் மனத்தின் வாயிலாகத் தேகமுதலிய பிரபஞ்ச முழுமையும் தெரிந்துகொள்கின்றேன்.

வினா:—அதுஸரியே, புத்தியினுடைய சக்தியினால் எல்லாவற்றையும் கிரகித்துக்கொள்ளலா மென்று உனக்கு எப்படி தெரியும்?

விடை:—அதற்குமேல் ஆத்மாவான நான் இருப்பதினால் தெரிந்து கொண்டேன்.

வினா:—நீயே ஆத்மா என்னும் சங்கதி எப்படி தெரியும்?

விடை.—அதற்குமேல் வேறொன்றுமில்லை. ஆத்மாஸ்வயம்பிரகாசமானதினால் தெரியவருகிறது.

வினா:—இதுவரை என்னுடையது,என்னுடையதென்றுஇரண்டு வஸ்துக்கள் காணப்பட, இப்பொழுது நீ ஒருவர் மாத்திரமாகி, அதற்குக் காரணம் மற்றொன்று மில்லையென்றும், அது சுவயம் பிரகாசமென்றும் சொல்லுகின்றாயே, அதுவே உன்னுடைய நிஜசுவரூபமல்லவா?

விடை:-ஆம்நான் ஸர்வஸாக்ஷி, ஸ்வயம்பிரகாசம், ஸந்தேகமில்லை.

ஆதலால் பெண்மணியே! இந்த விஷயமாய் நாம் சொல்லும் ஸங்கதியை செவ்வையாய்க்கேள், அதையே பிரத்யகாத்மா (அல்லது கூடஸ்தன்) எனச்சொல்லுவார்கள். இவ்விஷயத்தில் கிஞ்சிக்ஞத்வாதி தர்மமுடைத்தாகி அந்தக்காண அல்லது அவித்தியா சபளிதன் ஜீவன். ஸர்வஞ்ஞத்தவாதி தர்மமுடையவனாகி மாயா சபளிதன் ஈசுவரன். இந்த ஜீவ ஈசுரர்களே துவம்பத தத்பத வாச்சியர்கள். கிஞ்சிக்ஞத்வாதி தர்ம மற்று கடாகாசம் போன்றது ஜீவஸாக்ஷியாகிய பிரத்யகாத்மா அல்லது கூடஸ்தன்

ஸர்வஞ்ஞத்வாதி தர்மமற்றுமகாகாசம் போன்றது ஈசுவரஸாக்ஷியாகிய பிரம்மம். இந்தப்பிரத்தியகாத்மா, பிரம்மம் இரண்டுமே துவம்பத தத்பதலக்ஷியர்கள்.

வாச்யர்களான ஜீவேசுவரர்களுக்கு ஒருநாளும் அபேதம் பொருந்தாது. லக்ஷியர்களுக்கே அபேதம் பொருந்தும். ஆகையால் ஸ்வயம்பிரகாசஸாக்ஷியாகச்சொன்ன பிரத்யகாத்மா துவம்பத லக்ஷியமாம். அதற்கும் தத்பதலக்ஷியமான பரப்ரம்மத்திற்கும், அஸிபதத்திற்கு அர்த்தமான ஐக்கியம் உண்டு. ஆகையால் நீ, நான், இந்த ஜகத் என்ற மயக்கத்தை விட்டு ஸர்வபூதாந்தர்யாமியாய்ப் பிரகாசிக்கும் பரஞ்சோதியே நீ என்று உறுதியாக நம்பு. இந்தத்தேகாதிபிரபஞ்சமுழுமையும் கானல்நீர் போல் பொய். இந்த நிலையில் நீயாகவே நிற்பதற்குக் கஷ்டமாக இருந்தால், ஸித்தாஸனத்தில் ஆசீனமாய் (அமர்ந்து) பிரணவ (ஓம்) மந்திரத்தைத் துணையாகக் கொண்டு தியானித்து, அந்த மஹா மந்திர சுவரூபமான பரமாத்மா பரப்பிரம்மம் நீயென்று அநுஸந்தானம் செய். இதுவே வேதாந்த இரகசியம். இதற்கே பிரம்மோபதேசம் என்று பெயர். அதையே உனக்குப்போதித்தோம். இதை ஸத்தியமாக நம்பு. ஸந்தேகமிருக்கக்கூடாது. இந்த ஸ்திதியில் சில காலமிருந்து பிரம்மானந்தத்தையனுபவித்து, பிறகு ஸம்ஸாரமென்னும் பெரிய வலையில் அகப்பட்டுக்கொண்ட முமுக்ஷுக்களான ஜீவர்களுடைய மனோ பரிபக்குவத்தையநுசரித்து கர்ம, பக்தி, யோக, ஞானங்களை ஜாதிவர்ணாச்ரம, ஸ்திரீ புருஷ பேதங்களில்லாமலே உலகிலிருக்கும் எல்லோருக்கும் உபதேசிப்பாய்.

(சு) நேதி நேதீதி நேதீதி | சேஷிதம் யத்பரம்பதம் |
நிராகர்த்து மசக்த்யா த்வா| த்ததஸ்மீதி சுகீபவ||

(தா) இந்த உலகம் நானல்ல. தேகம் நானல்ல. இந்திரியங்களும் நானல்ல. பிராணன்களும் அல்ல. மனதும் அல்ல. புத்தியுமல்ல. அல்ல அல்லவென்று நிராகரித்துத் தள்ளுவதற்கு சாத்தியமில்லாமல் சேஷித்த எந்த ஒருபரம்பதம் இருக்கின்றதோ, அந்தப் பரப்பிரம்மமே நானென்று ஸுகமாக இரு. யுக்திகளினாலும், அநுபவத்தினாலும், சுருதிகளினாலும் மற்றவையாவும் தள்ளி விடலாமேயன்றி பிரம்ம வஸ்துவைத் தள்ள முடியாது. அது தள்ளப்படாததற்குக் காரணம் இன்னதெனத் தெரிந்துகொண்டு, அதுவே நானென்று நிஸ்ஸம்ஸயமாக நிச்சயிப்பதே மோக்ஷமாம்.

(சு) ஆத்மானம் ஸந்ததம்பிரஹ்ம | வித்தி சைகம் நிரந்தரம் |
அஹம்த்யாதா பரம்த்யேயம் | மகண்டம் கண்டசோகதம்||.

(தா) பிரம்மத்தை ஜீவாத்மாவைவிட வேறாகப்பாவிக்கக் கூடாதென்று சொல்லுகின்றார்கள். ஆதலால் எப்பொழுதும் இடைவிடாம



லிருப்பதும் அத்விதீயமுமான பிரம்மத்தை உனது சுவரூபமாகவே அறிந்துகொள். நான் தியானம் செய்பவன், ஈசுவரன் தியானிக்கத் தகுந்தவனென்னும் கண்ட பாவனையினால் அகண்டமான பிரம்மத்தை ஏன் வேறாகப் பிரிக்கின்றாய்? நீ காலதேச வஸ்து பரிச்சேத ரகித பிரம்ம சுவரூபமாயிருக்க, தியாதா, தியானம், தியேயம் என்னும் கல்பனை நியாயமாக இருக்கலாகாதென்று வாசிஷ்டம்.

(சு) இந்திரியாணி பராண்யாஹு | ரிந்திரியேப்ய$^{3}$ ப்ரம் மனஃ |
மனஸஸ்து பரா புத்தி | ர்யோ புத்தேஃ பரதஸ்துஸஃ||

(தா) உலகத்தை விடபரம் (மேலானது) தேகம், தேகத்தைவிடப் பரம் இந்திரியங்கள், இந்திரியங்களை விடப்பரம் மனது, மனதை விடப்பரம் புத்தி, புத்தியை விடப்பரம் ஆத்மா. அதுவே பரப்பிரம்மம். ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று மேலாகக் காட்டிக் கடைசியில் அனைத்திற்கும்பரமான பரமாத்மா விடத்தில் நின்று விடுகின்றது. அது எல்லாவற்றிற்கும் காரணம். அதற்குக் காரணமானது வேறொன்று மில்லையென்று பகவத்கீதை அ. 3. சு. 42.

(சுருதி) இந்திரியேப்ய$^{3}$ பராஹ்யார்த்தா$^{2}$ | அர்த்தேப்யஶ்ச பரம்மனஃ |
மனஸஸ்துபரா புத்தி | ர் புத்தேராத்மா மஹான்பர$^{3}$||

(தா) தேகத்தைவிட இந்திரியங்கள் சூக்ஷுமங்கள். இந்திரியங்களைவிட சூக்ஷுமங்கள் சூட்சும பூதங்கள். அவைகளை விட சூக்ஷுமமானது மனது. மனத்தைவிட சூக்ஷ்மம் புத்தி. புத்தியை விட அதி சூக்ஷுமமாய் இருப்பது மஹத்தத்வம். ஆதலால் ஒன்றை விட ஒன்று படிப்படியாக உயர்ந்தது.

(சுருதி) மஹத$^{3}$ பரமவ்யக்த | மவ்யக்தாத் புருஷ$^{3}$ பரஃ |
புருஷாந்ந பரம் கிஞ்சி | த் ஸாகாஷ்டா ஸாபராகதிஃ||

(தா.) மகத்தத்துவத்தைவிட சூக்ஷுமம் அவ்யக்தம். அவ்யக்தத்தை (பிரகிருதியை) விடசூக்ஷுமம் புருஷன் (ஆத்மா). புருஷனை விடப் பரமானது வேறொன்றுமில்லை. அதுவே பரமான காஷ்டை (எல்லை), அதுவே பரமகதி (அதாவது பரமபதம்). காஷ்டை என்றால் நிஷ்டையின் முடிவு. இதற்கே கைவல்யம், மோக்ஷம், அமனஸ்கம், அசல பரிபூர்ணம், ஸகஜானந்த ராஜயோகம் என்று பல பர்யாய நாமதேயங்களுண்டு.

(சுருதி) ஏஷஸர்வேஷு பூதேஷு | கூடோத்மாந பிரகாசதே |
திருஶ்யதே த்வக்கிரய யாபுத்யா | சூக்ஷ்மியா சூக்ஷ்மதர்ஶிபிஃ||

(தா.) இந்த ஆத்மா ஸர்வபூதங்களிலும் அதிசூக்ஷ்மமாய் இருக்கின்ற காரணத்தினால் மந்தபுத்தியை யுடையவர்களுக்கு பிரகாசிப்பதில்லை. சூக்ஷ்ம தரிசிகளால் விஷய விரக்த அதிசூக்ஷ்மமான குசாக்ரபுத்தியினால் அது தரிசிக்கப்படும். அதாவது, இந்திரிய லோலர்களான சுஷ்கவேதாந்திகளினால் ஆத்மா தரிசிக்க ஸாத்தியமாகாது என்று கடவல்லி உபநிஷத் விவரித்துச் சொல்லுகின்றது.

## ஜாதிபேத இரகசியம்.

வினா.—ஓ, ஸ்வாமி? தீனதயாபரா? ஸ்திரீகளுக்குப் பிரம்மவித்தையில் அதிகாரம் இல்லையென்று சொல்வதுபோல், சூத்திரர்களுக்குங்கூட உத்தரவில்லையென்று சிலர் சொல்லுவது நிஜமா யிருக்குமா?

விடை.—ஓ, பிரம்ம நிஷ்டையையுடைய பிரியசகோதரியே! இது தீராத தோர்ஸம்ஸயம். இதைத்தீர்மானமாகச் சொல்வது மிகவும் பிரயாசை. இந்தக்கேள்வி தொன்று தொட்டே வருகின்றது. சாஸ்திரத்தில் சிலவிடங்களில் தேக சம்பந்தமாய் வர்ணாஸ்ரமங்கள் காணப்படுகின்றன. சிலவிடங்களில் குணசம்பந்தமாயும் காணக் கூடும். தேகசம்பந்தமாய்ச் சொல்லும் பொழுது, பூர்வ பக்ஷமாகவும் அமுக்கியமாகவும்இருக்கும். குணஸம்பந்தமாய்ச் சொல்லும்பொழுது, உத்தரபக்ஷமாகவும் முக்கியமாகவும் இருக்கும். ஆகையால், பூர்வபக்ஷம் உத்தரபக்ஷத்தினால் நிச்சயமாகப் பாதிக்கப்படும். கருப்பஞ் சாறுக்கும் அதன் திப்பிக்கும் எவ்வளவு தாரதம்யம் இருக்குமோ, அல்லது மோருக்கும் வெண்ணெய்க்கும் எவ்வளவு பேதம் இருக்குமோ, அவ்வளவு தாரதம்யமும் பேதமும் முக்கியத்திற்கும் அமுக்கியத்திற்கும் இருக்கின்றன. இந்த ஜாதிபேதம் எப்பொழுது உண்டானது? எதற்காக உண்டானது? யாரால் ஏற்படுத்தப் பட்டது? என்று சொல்வதற்கு இப்பொழுது யாராலும் சாத்தியமாகாது. ரிஷி வர்க்கத்தில் இவ்விதமான பேதம் காணப்படவில்லை. அதைப்பற்றியோசித்துப்பார்த்தால், நிச்சயமாகக் குணத்தை யநுஸரித்தே யிருக்கிறதாகத் தெரிகின்றது. ஈசுவரசிருஷ்டியிலேயே இருக்குமென்று சொன்னால், ஸர்வஸமனும், நிஷ்பக்ஷபாதியும் பரமதயாளுவுமாகி, அக்கடவுளை வைது தீயகதியை யடைவதே யல்லாமல், மற்றொன்று மில்லை. கடவுளின் படைப்பில் பேதமிருந்தால் நிச்சயமாகப் பிரத்யேகமான ஒரு அடையாளமிருக்கும். அவ்விதஅடையாளங்கள் மனித வகுப்பில் இல்லாததினால், உனது எண்ணத்திற்கு இடமேயில்லை. நாற்கால்



மிருகங்களைப் பார்த்தோமானால் பசு, யானை, குதிரை, ஆடு, மான், ஒட்டகம் முதலிய பல நாலுகால் மிருகங்களில் வெவ்வேறு குறிகள் அவைகளின் பிறவியிலேயே இருக்கின்றன. அப்படியே, பக்ஷிவர்க்கத்திலும் கிளி, குயில், கொக்கு, மயில், கோழி, அன்னம் முதலிய அநேக பக்ஷிவர்க்கங்களுக்கும் அநேக அடையாளங்கள் சுவயமாகவே இருக்கின்றன. அவ்விதமாகவே, விருக்ஷவர்க்கங்களிலும், மச்சவர்க்கங்களிலும் அநேக வித்தியாசங்களோடு படைத்த ஸர்வஞ்ஞனை பரமேசுவரன் மனிதவர்க்கத்தில் ஏதாவது ஒரு பேதமிருந்தால் அதைக் குறிக்கும் ஓர் அடையாளத்தை உண்டுபண்ணி இருக்கக் கூடாதா? ஒரு வஸ்துவைச் சொல்லும்பொழுது அதன் லக்ஷணத்தைக் கேட்பது நியாய சாஸ்திர ஸித்தாந்தம். பிராம்மணத் தன்மைக்கு பிரம்ம ஞானமே அடையாளமென்பது வேதசம்மதம். இப்பொழுது ஜாதிவர்ணங்களுடைய உண்மைநிலை தெரியாமலிருப்பதால் கொடுமையான துன்பத்திற்குக் காரணமானது. இந்தப் பெருங்குற்றமே நம்முடைய பாரதகண்டத்தைத் துக்கக்கடலில் ஆழ்த்தியதற்கு ஏற்றகாரணமென்று எண்ணுகின்றோம். இப்படித் தீவிரமாகச் சொல்லுவதினால் கலப்புப் போஜனம் கலப்பு விவாஹ முதலியன இருக்கவேண்டு மென்பது எம்முடைய கருத்தல்ல. அதை நாம் எப்பொழுதும் விரும்போம். ஆனால், ஆத்மகோடிகளின் பெருக்கிற்கு எல்லாச் சுவதந்திரமும் இருக்கவேண்டு மென்பது எமது விருப்பம். இந்த ஸ்திதி பாரதீயர்களுக்கு எவ்வளவு காலம்வரைக்கும் உண்டாகாதோ அதுவரை வலிமை குன்றும். தனக்குக் கீழே மற்றொருவன் இருக்கவேண்டு மென்ற எண்ணம் ஒருவனுக்கு இருக்குமாகில் மற்றொருவனுக்குக் கீழ் தான் தாழ்ந்து நிற்கவேண்டு மென்பது பிரகிருதியினுடைய தவறாத நிச்சயம். இப்படிச் சொல்லுவதினால் உயர்ந்த நிலையிலிருப்பவர்களைத் தாழ்ந்த பதவிக்குக் கொண்டுவரவேண்டு மென்ற எண்ணமல்ல. தாழ்ந்தஸ்திதியிலிருப்பவர்கள் முன்னேற்றத்திற்கு வழிகிடைக்காமல் கலங்குவது எல்லாருக்குந் தெரிந்தே யிருக்கின்றதல்லவா? அவர்களை உயர்ந்த ஸ்திதிக்குப் பிரயத்தன பூர்வகமாக கைப்பற்றி மேற்போகச் செய்யவேண்டு மென்பதே அபிப்பிராயம். தனவான்களைத் தரித்திரர்களாகச் செய்வது தோஷமே தவிர, தரித்திரர்களைத் தனவான்களாகச் செய்வது மேலாகும். அப்படியே, ஞானதனத்தைச் சம்பாதிப்பதற்கு அதிக ஆசையுள்ளவர்களை முழுப்பலத்தோடு கீழேமிதிப்பது மிகச் சங்கடம். இக்கொடுந்தொழில் எவருடைய இருதயத்தைப் பிளவுபடுத்தாம லிருக்கும்?

இந்தக் காரணத்தினால் அநேக புண்ணிய புருஷர்களுடைய கண்களி லிருந்து துக்கோஷ்ணநீர் எப்பொழுதும் சொரிந்து கொண்டேயிருக்கின்றது. இந்தத்துக்கம் நிறைந்த விஷவிருஷ்டியால் உலகம் தபித்துக் கொண்டிருக்கின்றது. ஹா! என்ன கொடுங்காரியம்! ஒருதகப்பனுடைய தனத்திற்குப் புத்திரர்களெல்லோரும் சமான பாகிகளாக இருக்க, பலவந்தர்களான புத்திரர்கள் பலமற்ற சகோதரர்களுக்குத் தன அதிகாரம் இல்லையென்று சொல்வது எவ்வளவு பெரும்பாதகம்? அவ்விதமே நம்முடைய தந்தையான சர்வேசுரனுடைய ஞான தனத்திற்கு எல்லோரும் ஸமான பாகஸ்தர்களே. அநேக ஜீவகோடிகளின் முன்னேற்றத்தைத் தடுப்பது எவ்வளவு தெய்வதுரோகம்? குழந்தைகள்விருத்தியாவது தகப்பனுக்கு எவ்வளவு சந்தோஷகரமாமோ, அப்படி ஈசுவரனுக்கு ஜீவர்கள் பூர்ணத்வத்தை அடைவது அவ்வளவு சந்தோஷகரமாக இருக்கும். குழந்தைகளின் அபிவிருத்தியைக் கெடுப்பவர்களின்மீது தகப்பனுக்கு எவ்வளவு கோபமுண்டாகுமோ, அவ்விதம் ஜீவர்களின் அபிவிருத்தியைத் தொம்சம் செய்பவர்களின் மேல் ஈசுவரனுக்கு அவ்வளவு கோபம் தப்பாமலுண்டாகும். ஆகையாற்றான் தெய்வசேவையைவிட லோகசேவை உயர்ந்ததென்று மகரிஷிகள் சொல்லும் இரகசியமாம். அதற்காகவே உலகிலிருக்கும் எல்லாமதங்களிலும் 'தன்னைப்போலவே மற்றவர்களையும் பாராட்டவேண்டும், என்று நிர்பந்த பூர்வகமாகக் கட்டளையிடப்பட்டிருக்கின்றது.

(சு) ஆத்மௌபம்யேந ஸர்வத்ர | ஸமம்பச்யதியோர் ஜுந |
ஸுகம் வாயதிவாதுக்கம் | ஸயோகீபரமோ மத:||பக. அ 4.சு 32.

(தா) ஓ, அர்ஜுனா! எவன், தான் உவமையாயிருந்து எங்கும் எல்லாப் பிராணிகளின் இன்பத்தையும் துன்பத்தையும் ஒப்பநோக்குகின்றானோ, அவன் மேலான யோகியாக மதிக்கப்படுகின்றான். அதாவது தனக்குச் சுகமுண்டாகவேண்டும் என்பது எப்படிப் பிரீதியோ, துக்கம் நேரின் அதனிடத்து எப்படி அப்ரீதியோ, அப்படி எல்லாப் பிராணிகளுக்கும் இருக்குமென்பது உள்ளது. ஆகவே பிராணிகளின் துக்கநிவர்த்திக்கும், சுகப்பிராப்திக்கும் முயற்சிப்பவன் எவனோ அவனே (தபசி, யோகி, ஞானி) எல்லோரினும், பகவானை எனக்குப்பிரியனென்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாகீதையில் அருளினார்.

(சு) ஸமோஹம்ஸர்வபூதேஷு | நமேத்வேஷ்யோஸ்தி நப்ரிய: |
யேபஜந்தி துமாம் பக்த்யா|மயிதேதேஷுசாப்யஹம்||பக அ9 சு29



(தா) ஓ, அர்ஜுனா! நான் எல்லாப்பிராணிகளிடத்தும் சிறிதளவும் பேதமில்லாமல் ஸமமாகவேயிருக்கின்றேன். எனக்குப்பகையானவன் இல்லை; பிரியமானவனில்லை. ஆனால் எவர்கள் என்னைப் பக்தியோடு தொழுகின்றார்களோ (அவர்கள் யாராயிருந்தாலும் சரி) என்னிடத்தில் எப்பொழுதும் இருக்கின்றார்கள். யானும் (எப்பொழுதும்) அவர்களிடத்தில் இருக்கின்றேன். அதாவது எனக்குச் சாதி ஆச்ரமம், ஆண் பெண் என்ற எவ்வித பேதமுமில்லை என்பது கருத்தாம். எவர்கள் என்ற சொற்பிரயோகத்தினால் எவராகிலும்சரியே, பக்தியுள்ளவராகில் அவர்கள் பகவதநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகலாமென்பதாம். இதற்கு கோபிகைகளே அத்தாக்ஷியாவர்.

(சு) மஹர்ஷயஸ்ஸப்தபூர்வே | சத்வாரோமனவஸ்ததா [சு 6.
மத்பாவாமானஸாஜாதா | யேஷாம்லோகா இமா:ப்ரஜா:||பக.அ10.

(தா) (பிருகுமுதலாய) ஸப்தமகரிஷிகளும் (அவர்களுக்குமுற்பட்ட ஸனகாதி யோகிகளும்) அல்லது ஸாவர்ணி (அல்லது சுவாயம்புவாதி) நான்கு மநுக்களுமாகிய இவர்களெல்லோரும் என் சம்பந்தமான தன்மையையுடையவர்களாய் என் சங்கல்பமாத்திரத்தினால் தோன்றியவர்கள். உலகத்திலுள்ள ப்ரஜைகளெல்லாரும் அவர்களிடத்திலிருந்தே தோன்றியவர்களென்று ஸ்ரீ பகவத்வசனம் இருப்பதினால் இந்த விஷயத்தில் சந்தேகம் ஏன் உண்டாகவேண்டும்? அதாவது ஈசுவராம்சரான பிருகு முதலிய சப்தரிஷிகளும் ஸனகஸனந்தனாதியோகிகளும்,ஸாவர்ணிய மநுக்களும், நாமும் அவர்களுடைய ஸந்ததிகளே என்று ஸ்ரீமந்நாராயண வசனம். அதை மீறிச் சொல்வதற்கு யாரால் தரம்?

ஸ்ரீஜகத்குரு சங்கர பகவத்பாதருக்கும் முதலில் ஜாதிபேதமிருந்ததாகவும், அவ்விதபேதம்இருக்கக்கூடாதென்று ஸ்ரீபரமசிவன் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் சண்டாளவேடந்தாங்கி ஸ்ரீசங்கராசாரியரோடு வாதித்து அவருக்கு அபேதத்தை உபதேசித்ததாகவும் மநீஷாபஞ்சகத்தில் காணப்படுகின்றது.

(சு) ஸத்யாசார்யஸ்யகமனே | கதாசிந்முக்திதாயகம் |
காசிக்ஷேத்ரம் பிரதிஸஹ | கௌர்யாமார்கேதுசங்கரம்||
(சு) அந்தியவேஷகரம் த்ருஷ்ட்வா | கச்சகச்சேதி சாப்ரவீத் |
சங்க்ரஸ்சோபி சண்டாள | ஸ்தம்புந: ப்ராஹசங்கரம்||

(தா) இந்த உலகத்தில் பரமதயாசாலியாய் ஷட்குணைச்வர்யஸம்பன்னனான பரமசிவன், துக்கங்களென்னும் ஜல ஜந்துகளுக்கு இருப்

பிடமான ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் மூழ்கிக்கிடக்கும் ஜீவகோடிகளை ஈடேற்றவிரும்பி சண்டாளஉருவேற்று, ஒருகாலத்தில் முத்தியையளிக்கும் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தைக்குறித்துப் போகும் ஸ்ரீ சங்கராசாரியரது சமீபத்தில்வர, அந்தச் சண்டாளவேஷதாரியான பரமசிவமூர்த்தியைப்பார்த்து தூரப்போ தூரப்போவென்று சங்கராசாரியர் சொல்ல, அவரோடு சண்டாளவேஷந்தரித்த ஈசுவரன் இவ்விதமாகச் சொல்லத்தொடங்கினன்.

(சு) அன்னமயாதன்னமய | மதவாசைதன்யமேவசைதன்யாத்
யதிவரதூரீகர்த்தும் | வாஞ்சஸிகிம்பூருஹிகச்சகச்சேதி |

(தா)ஓ, யதிவரரே! இந்தக்கேள்விகளுக்கு எற்றவிடை அளிப்பீர். அன்னஸாரமான உமது சரீரத்திலிருந்து, அன்னவிகாரமான எனது சரீரத்தைத் தூரமாக விலகிப்போக விரும்புகின்றீரா? அல்லது, சைதன்யஸ்வரூபமான உமது ப்ரத்யகாத்மாவிலிருந்து, சைதன்ய ரூபமான எனது பிரத்யகாத்மாவைத் தூரமாக எட்டிப்போக விரும்புகின்றீரா? சொல்லும். அதாவது, அன்னமயமான எனது சரீரம் அசுத்தமாக இருந்தால், உம்முடைய சரீரமும் அதே அன்னமயமானதால், அதுவும் அசுத்தமேயாம். அல்லது, சைதன்யரூபமான ஆத்மாவை விலக்கவிரும்பினல், ஆத்மா ஸர்வவியாபி ஆத்மசைதன்யம் இல்லாதவிடம் எங்குளது? என்னும் ஸமரசத்தைப் போதித்து அந்தர்தானமாயினர். இவ்விஷயமாய் சுருதி, ஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தைச் சொல்லுவோம், கேள்.

(சு) அந்த்யஜாதி:த்விஜாதிஸ்ச | ஏகஏவசஹோதரா |
ஏகயோனி பிரஸூதத்வாத் | ஏகஸாகோஜாயதே||

(தா) கடைப்பட்டஜாதியில் பிறந்தாலும் சரி அல்லது உயர்வான ஜாதியில் ஜன்மித்தாலும்சரி இவர்களிருவரும்சஹோதரர்களே. அது எப்படி என்றால், எல்லோரும் ஒரே ப்ரம்மயோனியிலிருந்து ஜன்மித்ததினாலும், ஒரே ஈசுவரனிடத்திலிருந்து வெளிவந்த காரணத்தினாலும் சகோதரர்களே. 'யோனி' என்றதனால் இதற்கு, ''மம யோனிர் மஹத் பிரஹ்ம தஸ்மின் கர்ப்பம் ததாம்யஹம்' எனது கருப்பையானது பெரிய பிரஹ்மம்(முக்குணன் மிகையானபிரகிருதி), அதில் கருவை (ஸர்வப்ராணி ஜன்மகாரணமாய இரண்யகர்ப்பஜன்மத்தின் விதையை)க்கொடுக்கின்றேன் (நாட்டுகின்றேன்), என்னும் கீதா பிரமாணமே சான்றாம். மேலும் ஸ்ரீசங்கரபகவத் பாதாசார்யர் ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரஸங்க்ரஹத்தில் இதுஸ்ரீவியாசமதமென



ன்றுஎழுதி யிருக்கின்றார். இதுவல்லவா உண்மையான நிலை. ஒருகால் அவருடைய காலத்திலாவது, ரிஷிகளுடைய காலத்திலாவது, பிராமணர்களல்லாதவர்களில் எவரேனும் அவரைக் கேள்விகேட்க, வல்லமையுள்ளார் இல்லாவிட்டாலும், காலாந்தரத்தில் மற்ற வர்ணஸ்தர்களில் புத்திமான்கள் பிறந்தக்கால் நிலையற்ற காயத்தோடு சம்பந்தப்பட்டஜாதிவர்ணங்களை ஸ்தாபித்தால் தனக்கு, பிறகு எவ்வளவு அபகீர்த்தி உண்டாகுமென்று அவர் அப்பொழுதே யோசித்து, இவ்விதமாகத்தன் ஸமத்வபுத்தியோடு எழுதினர். இன்னும், ஆத்மதிருஷ்டியையுடைய அந்தத் தயாமூர்த்திதன் அநுபவத்திற்கும், வேதப்பிரமாணத்திற்கும் விரோதமான வழியை உபதேசிப்பாரா! பரமதயாளுக்களும், ஈசுவராம்ஸ ஸம்பூதர்களும், காருண்யமூர்த்திகளுமான அந்த மகாத்மாக்களிடத்தில் அஞ்ஞானத்தினலுண்டாகும் பேதமிருக்குமா? இராது.

(சு.) பிரஹ்மக்ஷத்திரிய விட்சூத்திராம்| ஸ்சாதுர்வர்ணந் குணத்மகாந்|
விப்ரஸுக்லோந்ருபோரக்த: | பீதோவைஸ்யோzந்தியஜோzஸித:||

(தா.)பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களான நான்குவர்ணங்களையுடையவர்கள் அவரவர் குணகர்மங்களை யநுசரித்து பிரிக்கப்பட்டனர். அவர்களில் வெண்மை நிறமுடையவன் பிராமணனென்றும், சிவப்பு நிறமுடையவன் க்ஷத்திரியனென்றும், மஞ்சள் நிறமுடையவன் வைசியனென்றும், கறுப்பு நிறமுடையவன் சூத்திரனென்றும் தெரியத்தக்கது. வர்ணமெனல் நிறத்திற்காம். இங்கே சரீரத்தின் நிறம் என்று சொன்னல் எல்லாவித தோஷங்களுமுண்டாகும். அதாவது சூத்திரர்களில் வெண்மை நிறமுடையவர்களும், பிராமணர்களில் கருமை நிறமுடையவர்களும் இருக்கின்றார்களாதலால் அது ஒவ்வாத அர்த்தமாகும். ஆகவே, இவ்விடத்தில் ஸத்துவகுணம் வெண்மையாகவும், ரஜோகுணம் சிவப்பாகவும், தமோகுணம் கருப்பாகவுங்கொள்வது சாஸ்திர ஸம்மதமாகும். அதாவது, சத்துவகுணமுள்ளவன் எக்குலத்தில் பிறந்தவனயினும் அவன் பிராம்மணனே. ரஜோகுணமிருப்பவன் க்ஷத்திரியன். ஸத்வ ரஜோகுணக்கலப்புள்ளவன் வைசியன். தமோகுணமுடையவன் சூத்திரன். இக்குணங்களை அநுஸரித்து ஜாதிபேதங்களை ஸ்திரப்படுத்துவதில் ஒருவித ஆசங்கையுமிராது.

(சு.) விஸ்த்ருத்ய தர்மசாஸ்திரேஷு | தேஷாம் கர்மஸமீரிதம் |
ஏகஸ்மின்னேக வர்ணேது | சாதுர்வர்ண்யம் குணாத்மகம்||

(தா.) இந்நான்கு வர்ணங்களையுடையவர்களது (ஜன்மத்திலிருந்தே) உண்டான சுவபாவ கர்மங்கள் தர்மசாஸ்த்திரத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு ஜாதியிலும் அவரவர்களுடைய குணகர்மங்களை யநுஸரித்து நான்கு வர்ணங்களிருக்கின்றன.

(சு) மோக்ஷதர்மேzதிகாரித்வ | ஸித்தயே முநிரப்யதாத் |
ஸகர்மே தேவதாயோக | ஞானகாண்டேஷ்வ நுக்ரமாத்||

(தா.) ஸ்ரீவியாஸமுனிவர் மோக்ஷதர்மத்தே அதிகாரப்பெறுதியின்பொருட்டு கர்ம, பக்தியோக, ஞானங்களைக் கிரமமாக விதித்தார்.

(சு.) பிரவர்த்தயதி தத்கர்ம | பரிபாக கிரமம்விதன் | ருஜவஶ்ஶாந்த [வர்ணபாஃ
க்ஷமாவந்தோதயாளவஃ | ஸ்வதர்ம நிரதாயேஸ்யு | ஸ்தேத்விஜே [ஷுத்விஜாதயஃ||

(தா.) அவைகளில் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கர்மபரிபாகத்தை யநுஸரித்து பிரவிருத்திக்கின்றார்கள். மனம், வாக்கு, கர்மம் என்னும் இவைகளை ஒரே ரீதியாக நடத்துபவர்களும் சாத்வீக குணங்களை யுடையவர்களும், பொறுமை யுடையவர்களும் தயையுடையவர்களும் தமது தர்மமான வேதமோதல் தவம் தியான முதலிய பிராஹ்மவித்தையில் பிரவிருத்திப்பவர்கள் யாரோ, அவர்கள் துவிஜர்களில் (பிராம்மணர்களில்) துவிஜர்கள்.

(சு.) காமபோக பிரியாஸ்தீக்ஷ்ணஃ | க்ரோதநஃ பிரியஸாஹஸாஃ |
த்யக்த ஸ்வதர்ம ரக்தாங்கா | ஸ்தேத்விஜாஃ க்ஷத்ரதாம் கதாஃ||

(தா.) மறையோர்களில் காமபரவசர்களாகிப் போகத்திற் பற்றுள்ளவர்களாய், கடின சுவபாவமுள்ளவர்களாய், குரோதிகளாய்; ஸாஹஸப்பிரியர்களாய், முற் சொல்லிய பிராம்ம கர்மத்தை விட்டவர்களாய் ரஜோகுணம் பொருந்தியுள்ளவர்கள் இருபிறப்பாளர்களில் க்ஷத்திரியத் தன்மையை யடைந்தவர்கள்.

(சு.) கோஷுவிருத்திம் ஸமாதாய | பீதாஃகிருஷ்யுபஜீவிநஃ |
நஸ்வகர்ம கரிஷ்யந்தி | தேத்விஜாஃ வைஶ்யதாம்கதாஃ||

(தா.) பசுபரிபாலனம் செய்பவர்களும், வேளாண்மையாற் ஜீவிப்பவர்களும், மஞ்சள் நிறமுள்ளவர்களும், தபம், வேதாத்யயநாதி பிராம்மகர்மங்களைச் செய்யாதவர்கள் துவிஜர்களில் வைசியத்தன்மையினர்.



(சு.) ஹிம்ஸாந்ருத பிரியாஃ க்ஷத்ரா | ஸ்ஸர்வகர்மோப ஜீவிநஃ |
கிருஷ்ணஃ சௌசபரிபிரஷ்டா | ஸதேஜாஃ சூத்ரதாம்கதாஃ||

(தா.) மனோவாக்கு காயங்களால் பிராணி இம்சகர்களாய், பொய் பேசுவதிற்பிரிய முள்ளவர்களாய், நீசதேவதைகளை உபாசிக்கின்றவர்களாய், வரையரையின்றி எல்லா வேலைகளையும் செய்து பிழைப்பவர்களாய், தமோகுணமுள்ளவர்களாய், சௌசாசார பிரஷ்டர்களான பிராம்மணர்களே சூத்திரர்களானார்கள். அதாவது, பிராம்மணர்களில் பிராமணனும், பிராமணர்களில் க்ஷத்திரியனும், பிராமணர்களில் வைசியனும், பிராமணர்களில் சூத்திரனும் இருக்கின்றார்கள். அப்படியே சூத்திரர்களில் சூத்திரனும், சூத்திரர்களில் வைசியனும், சூத்திரர்களில் க்ஷத்திரியனும், சூத்திரர்களில் பிராமணனும் இருக்கின்றார்கள். இவ்விதமே நான்கு வர்ணங்களை யுடைவர்களிடத்தும் மேற்சொல்லிய குணங்களை யநுஸரித்து வர்ணங்கள் உண்டாயினவே யல்லாமல் வேறெவ்விதத்தினாலு முண்டாகவில்லை யென்றபொருள். இப்பொருளையே ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் 18 வது அத்தியாயத்தில் திருவாய்மலர்ந்திருக்கின்றார்.

(சு.) பிராஹ்மண க்ஷத்திரிய விஶாம் | சூத்திராணஞ் சபரம்தப |
கர்மாணி பிரவிபக்தாநி | ஸ்வபாவ பிரபவைர்குணைஃ||

(தா.) பரந்தப! பிராமணர்களுக்கும் க்ஷத்திரிய வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் இயல்பாயுண்டாகும் குணங்களுக்கு ஏற்ப கர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்நால் வர்ணத்தவரது கர்மங்களின் பிரிவை பகவான் கூறியிருக்கின்றார். அவற்றை கீதையில் 18 அத்தியாயத்தின் 42. 43. 44 வது சுலோகங்களிற் காணலாம்.

(சு.) சண்டாளதேஹே பஶ்வாதிஸ்தாவரே பிரஹ்ம விக்ரஹே |
அன்யேஷுதாரதம்யேன ஸ்திதேஷு ததாம்யஹம் ||

(தா.) நான் சண்டாள சரீரத்திலும், பசுக்கள் முதலியவற்றிலும் ஸ்தாவரங்களிலும், துரும்பு முதல் பிரம்மாபர்யந்தமான ஸமஸ்தத்திலும் தாரதம்மியமில்லாமல் (ஸமமாக) இருக்கிறேன். இது பகவத்வாக்யம், வராகோபநிஷத்திலுள்ளது. இன்னும் மகாபாரதம் வனபர்வத்தே.

(சு.) நயோநிர்நாபி ஸம்ஸ்காரோ | நசுருதம் நசஸந்ததிஃ |
காரணாநிதுவிஜத்வஸ்ய | விருத்தமேவது காரணம் ||

(தா.) பிராமணத் தன்மைக்குக்காரணம் பிராமணஸ்திரீயினிடத்தில் பிறப்பதல்ல, உபநயனாதி ஸமஸ்காரங்களுமல்ல, வேதாத்யய

னமுமல்ல, பிராமண சந்ததியுமல்ல. காரணம் வேறேயாம். அதென்ன வென்றால் ஸத்தியம் தர்மம் முதலிய வற்றில் நிற்றலேயாம்.

சு.) ஸத்யதானம் க்ஷமாசீல | மான்ருஸம் ஸ்யம் தபோக்ருணை |
த்ருஸ்யந்தே யத்ர நாகேந்திர | ஸபிராஹ்மண இதிஸ்மிருதஃ||

(தா.) ஓ, நாகேந்திரா! ஸத்யம், தானம், க்ஷமை, சாந்தசீலம், அசூயையற்றிருப்பது, தபம், ஜீவகாருண்யம் முதலாய குணங்கள் எவனிடத்தில் காணப்படுமோ, அவன் பிராமணனெனப்படுவான்.

சு.) சூத்ரேதுயத்பவேல் லக்ஷயம் | த்விஜேதச்ச நவித்யதே |
நைவசூத்ரோ பவேச் சூத்ரோ | பிராஹ்மணோ நசபிராஹ்மணஃ||

(தா.) மேற்சொல்லிய குணங்கள் சூத்திரனிடம் இருக்குமேயாகில் அவனைச் சூத்திரனென்று நினைக்கக்கூடாது. அதாவது, அவன் பிராமணோத்தமனென்பது வேத சம்மதம். பிராம்மணஜாதியில் பிறந்தும் மேற்குறித்த குணங்கள் இல்லாவிடில், அவன் பிராம்மணனல்லன். ஆனால், அவன் சூத்திரனே.

(சு.) யத்ரை தல்லக்ஷயதே ஸர்ப | விருத்தம் ஸபிராஹ்மணஃ ஸ்மிருதஃ|
யத்ர நைதத்பவேத் ஸர்ப | தம் சூத்ர மிதி நிர்திஸேத்||

(தா.) ஓ, சர்ப்பமே! சத்யதான தபங்களான மேற்சொல்லிய சாது விருத்திகள் எவனிடத்தில் காணப்படுமோ, அவனை பிராம்மணனென்று நிஸ்ஸம்சயமாக நினைக்கவேண்டும். இப்பிரம்மவிருத்திகளில்லாதவன் சூத்திரனே என்பதிற் சந்தேகமில்லை.

(சு.) பஜன் பக்த்யாவிஹீனோயஃ | ஸஃசண்டாளோபிதீயதே |
சண்டாளோபி பஜன்பக்த்யா | பிராம்மணேப்யோதிகோமம||

(தா.) எவன் பக்திஞான மில்லாதவனோ அவன் பிராம்மண ஜன்மத்தில் ஜனித்தானாயினும் அவன் சண்டாளனென்று பிரம்மவேதாக்களினால் சொல்லப்படுவான். சண்டாளகுலத்தில் பிறந்தவனாயினும், பக்தி ஞானங்களோடுகூடியவனாகில் அவன் வேதியரைவிட விழுமியோனென்று ஸ்ரீ கணேசபகவான் கணேசகீதையில் கூறியிருக்கின்றார்.

(சு.) ஞானயக்ஞோ டுபேனைவ | பிராஹ்மணோவாஉந்த்யஜோபிவா|
ஸம்ஸாரஸாகரம் தீர்த்வா | முக்தி பாரம்ஹி கச்சதி||

(தா.) பிராம்மணனாவது சண்டாளனாவது ஞானமென்னும் தெப்பத்தினால் ஜனனமரண துக்கமான இந்தக் கோரஸம்ஸாரக் கடலைத் தாண்டி முக்தியென்னும் கரையை (பரமபதத்தை) யடைகின்றான்.



(சு.) ஞானம் ஸர்வாந்தரம்பாதி கூடஸ்தாத்ம ஸ்வரூபகம் |
பிரக்ஞா மாத்ர மிதம் ஸூக்ஷ்மம் | கோபி ஜானாதி புண்யகிருத்||

(தா.) பிரக்ஞா மாத்திரமாயும், கூடஸ்தாத்ம சுவரூபமாயும், சூக்ஷ்மமாயுமுள்ள இந்த ஞானம் எல்லாப் பிராணிகளினுடைய ஹிருதயத்திலும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. நல்வினையைச் செய்யும் எவன் அதை அறியாமலிருப்பான்! புண்ணியரெல்லோருக்கும் அது வேத்யமென்று ரிபுகீதை கூறுகின்றது.

(சு.) பிரஹ்மபேதேன ஜானாதி | ஸமுக்திம் நைவபத்யதே |
ஸமானம் ஸர்வஜந்தூனாம் | பிரஹ்ம சூத்ரேண கத்யதே||

(தா.) எவன் பரமாத்மாவைப் பேதபுத்தியோடு பார்ப்பானோ அவன் மோக்ஷத்தை அடையவேமாட்டான். பிரம்மம் எல்லா ஜந்துக்களிடத்திலும் ஸமமாகவும், அந்தப் பிரம்மமே எல்லோருடைய ஆத்மாவாகவும் இருக்கின்றதென்று பிரம்ம ஸூத்திரத்தில் பகவான் ஸ்ரீ பாதராயணர் அருளியிருக்கின்றார்.

(சுருதி) யதோவா இமானிபூதானி ஜாயந்தே | யேன
ஜாதானிஜீவந்தி | யத்பிரயந்த்யபிஸம்விஸந்தி | தத்விஜிக்ஞா
| ஸஸ்வதத்பிரஹ்ம||

(தா.) யாதொரு பரமாத்மாவிலிருந்து இந்த எல்லா ஜீவகோடிகளும் ஜன்மிக்கின்றனவோ, ஜன்மித்த எல்லாப்பிராணிகளும் யாதொரு ஈசுவரகருணையினால் ஜீவித்திருக்கின்றனவோ, அவை யாதொரு பரப்பிரம்மத்தில் மீண்டும் ஐக்கியமாகின்றனவோ, அதுவே பரப்பிரம்மமென்று தெரிந்து கொள் என்று தைத்திரீய சுருதிதெரிவிக்கின்றது. இன்னும்,

(சு.) ஜன்மனா ஜாயதேசூத்ரஃ | கர்மணா ஜாயதே த்விஜஃ |
வேதபாடாத்து விப்ரஸ்யாத் | பிரஹ்மக்ஞானாத்து பிராஹ்மணஃ||

(தா.) எவனும் ஜனனத்தினால் சூத்திரனும், ஆத்மஸம்ஸ்காராதி கர்மத்தினால் துவிஜனும், வேதாத்யயனத்தினால் விப்ரனும், பிரம்ம ஞானத்தினால் பிராம்மணனுமாகின்றான்.

(சு.) சூத்ரோபி சீல ஸம்பந்நோ | குணவான் பிராஹ்மணோபவேத் |
பிராஹ்மணோபி கிரியாஹீனஃ | சூத்ராத் பிரத்ய வரோபவேத்||

(தா.) சூத்திர ஜன்மத்தில் பிறந்தவனாயினும், சமதமாதி சற்குண ஸம்பன்னனாகயிருந்தால் அவன் பிராம்மணனே. பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவனாயினும், ஸதாசார சற்குணங்கட்குப் புறம்பாகில் அவன் சூத்திரனைக்காட்டிலும் நீசனென்று நினைக்கப்படுவான்.

(சு.) மத்பக்தம் சூத்ரஸாமான்யா | தவமங்யந்தியேநராஃ |
நரகேஷ்வவ திஷ்டந்தி | வர்ஷகோடி நராதமாஃ||

(தா.) எந்தமானவர்கள் சூத்ரஜன்மத்தில் பிறந்த என்னுடைய பக்தனைச் சூத்திரசாமான்னியனென்று நினைத்து அவமானம் செய்வார்களோ, அந்தக்கடைப்பட்ட நரர்கள் கோடி (கணக்கில்லா) வருடங்கள் நரகத்தில் விழுந்து கிடப்பார்கள்.

(சு.) சண்டாளம்பி மத்பக்தம் | நாவமங்யேத புத்திமாங் |
அவமானாத்பதத்யேவ | ரௌரவேநரகேசஸஃ ||

(தா.) சண்டாள ஜன்மத்தில் பிறந்தவனானாலும், என்னிடத்தில்பக்தியுடையவனைப்புத்திமானானவன் அவமானம் செய்யக்கூடாது. அப்படிச் சண்டாளனென்று அவமானம் செய்வானாயின் அவன் ரௌரவ நரகத்தில் விழுவான்.

(சு.) நசூத்ரா பக்வத்பக்தா | விப்ராபாக வதாஸ்மிருதா ஃ |
ஸர்வவர்ணேஷு தேசூத்ரா | யேஹ்யபக்தா ஜனார்தனே||

(தா.) சூத்ரயோனியிற்பிறந்தவர்களானாலும் பகவத்பக்தர்கள் சூத்திரர்களாக மாட்டார்கள். மற்றுயாதெனில், பாகவதோத்தமர்களான விப்ரோத்தமர்களென்பதும் வேதஸம்மதம். பரம தயாளுவான ஜனார்தனனிடத்தில் பக்தியற்றவர்கள், எக்குடியிற் பிறந்தவர்களாயினும், அவர்களே சூத்திரர்களென்பதும் சுருதி நிச்சயமென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் பாரதத்தில் சொல்லியிருக்கின்றார்.

(சு.) பக்திரஷ்ட விதாஹ்யேஷா | யஸ்மின் மிலேச்சேபிவர்ததே ||
ஸவிப்ரேந்த்ரோ முநிஸ்ஸ்ரீமான் | ஸயதிஃ ஸசபண்டித ஃ||
தஸ்மை தே யந்ததோகிராஹ்யம் | ஸசபூஜ்யோயதாஹ்யஹம்

(தா.) எண்வகையான பகவத்பக்தி எந்த ஒரு மிலேச்சனிடமிருக்குமோ, அவன் உத்தமப்பிராம்மணன். அவனேமுனீஸ்வரன். அவனே ஸ்ரீமந்தன். அவனே ஸந்நியாஸி. அவனேபண்டிதன். அவன் பொருட்டு எல்லாவித்தைகளையும் கொடுக்கலாம். அவனிடத்திலிருந்து வேதப்பிராம்மணர்கள் கூட உபதேசம்பெற்றுக் கொள்ளலாம். பகவானாகியநான் எப்படிப் பூஜ்யனோ, அப்படியே அவனும் பூஜிக்கத்தகுந்தவன். இது வாமனபுராணத்திலுள்ள ஸ்ரீமந்நாராயண வசனம்.

(சு.) மத்பக்தம் சுவபசம்வாபி | நிந்தாம் குர்வந்தி யேநராஃ |
பத்மகோடி சதேவாபி | நக்ஷமாமிவசுந்தரே ||



(தா.) எனதுபக்தன் சண்டாளனாயிருந்தாலும் அவனை நிந்தித்தவர் எவர்களோ, அவர்களைப் பத்மகோடி நூறுனாலும் நான் தண்டிக்காமலிருக்கமாட்டேன்.

(சு.) சுவபசோபிமஹீபாலோ | விஷ்ணுபக்தோ த்விஜாதிக ஃ |
விஷ்ணுபக்தி விஹீநஸ்து | யதிஸ்ச சுவபசாதம ஃ||

(தா.) சண்டாளனானாலும், மகிபாலனே! பகவத்பக்தன் பிராமணனே. யதியானாலும் பகவத்பக்தியில்லாதவன் சண்டாளதமனே.

(சு.) நஜாதிகாரணம் தாத | குணாஃ கல்யாணகாரணம் |
விருத்தஸ்தமபி சாண்டாளம் | தம் தேவா பிராஹ்மணம்விதுஃ ||

(தா.) குழந்தாய்! உயர்ந்த ஜாதியே ஒருவனை உயர்த்தக்காரணமாகாது. குற்றமற்ற குணங்களே அவனது கல்யாணத்திற்குக் காரணமாம். சற்குணசீலன் சண்டாளனாயிருந்தாலும், தேவதைகள் அவனைப் பிராம்மணனென்று நினைப்பார்கள்.

(சு.) சுவபசஸ்ஸிவ பக்தஸ்ச | உத்தமோத்தமஜன்மபாக் |
சிவபக்திவிஹீனஸ்ச | பிராஹ்மணஃ சுவபசாதமா ஃ |
சிவபக்தஸ் ஸதாபூஜ்ய | சுவபசோபிராஹ்மணோத்தம ஃ||

(தா.) சண்டாளனானாலும், ஸ்ரீபரமசிவனிடத்தில் பக்தியுடையவனாயிருந்தால், அவன் உத்தமோத்தம ஜன்மத்தையுடையவனாவான். சிவபக்தியில்லாதவன் பிராம்மணனாயினும் சண்டாளாதமர்களுக்கு ஸமானன்.

(சுருதி.) யதா ஸுதீப்தாத் பாவகா | த் விஸ்புலிங்கா ஃ ஸஹஸ்ரஸ ஃ |
பிரபவந்தேஸரூபா ஃ | த தாக்ஷராத் விவிதா ஃ |
சௌம்யபாவாஃ பிரஜாயந்தே தத்ர சைவாபியந்தி ||

(தா.) எவ்விதம் எரிந்து கொண்டிருக்கும் அக்கினியிலிருந்து அக்னிவடிவமான பொறிகள் ஆயிரக்கணக்காக உண்டாமோ, அவ்விதம் அக்ஷரனாகிய பரமாத்மாவினிடமிருந்து தன்னுடைய அம்சங்களான ஜீவகோடிகள் விவித (வேறுவேறு) வடிவோடு உண்டானாலும் அவையெல்லாம் பரமாத்மாவின் அம்சங்களே. அதாவது அக்னி, வர்ணமருந்தின் பேதத்தினால் சிவப்பு நீலமுதலாகிய நிறபேதங்களாகமாறினாலும் நிஜமாக அக்னி எப்படி ஒன்றாகுமோ, அப்படியே இந்த ஜீவராசிகளும் ஈசுவராம்சங்களே. அல்லது வெள்ளை நூல் அநேகவித சாயங்கள் போடும் பொழுது, நாமரூபங்கள் வெவ்வேறாகக் காணப்பட்டாலும், சாயத்தை நீக்கிநோக்கில் வெள்ளை நூலேயாவது

போல், ஜீவகோடிகளின் குணங்களை நீக்கிப்பார்த்தால் ஒரே பிரம்மமாகக் காணப்படுமென்று முண்டகோபனிஷத் முழக்குகின்றது.

(சு.) நசர்மணோ நரக்தஸ்ய | மாம்ஸஸ்யசநசாஸ்திந: |
நஜாதிராத்மநோஜாதி | ரவியவஹார? பிரகல்பித:|

(தா.) ஸர்வ பூதங்களிலிருக்கும் ஆத்மாவிற்கு ஜாதிபேதமில்லை. மேலும் தோலுக்கும், ரக்தத்திற்கும், தசைக்கும், என்புக்கும் ஜாதி கிடையாது. பின்னையோவென்றால் ஜாதி யென்பது வியவகார சாதாரணத்திற்குக் கற்பிக்கப்பட்டதேயன்றி வேறில்லை என்று தேஜோபிந்து உபநிஷத் சொல்லும். இன்னும் மகா பாரதத்தில் அந்நிய ஜாதியில் இருப்பவர்களும், மோக்ஷத்தையடையலாமென்று சொல்லி, முக்தர்களானவர்களின் பெயர்களை வித்தியாசமில்லாமல் ஸமரஸமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது.

(சு.) ஜைகீஷவ்யோயதாவிப்ரோ | யதாசைவாஸிதாதய:|
க்ஷத்ரியாஜனகாத்யாஸ்து | துலாதாராதயோவிஶ:||
தர்மவியாதாதயஸ்ஸப்த சூத்ரா: சைலவகாதய:|
மைத்ரேயி சுலபா சார்ங்கி | சாண்டிலீசதபஸ்விநீ||
ஏதேசாங்யேசபஹவோ | நீசயோநிகதாzபி,
ஞானநிஷ்டாம் பராம்பிராப்தா:||

(தா.) ஜைகீஷனென்னும் பிராம்மணனும், அப்படியே அஸிதாதியரும், ஜனகர் முதலான க்ஷத்திரியர்களும், துலாதாரி முதலான வைசியர்களும், தர்ம வியாதர் முதலான ஏழு சூத்திரர்களும், ஸ்திரீகளில் மைத்ரேயி, சுலபா, சார்ங்கி, சாண்டிலீ, தபஸ்விநீ முதலிய ஸ்திரீகளும், இவ்வாறே கடைச்சாதியரான பலர் உயர் ஞான நிஷ்டையை யடைந்து முக்தர்களானார்கள். இன்னும்இவ்விஷயத்தைக் குறித்து மநுஸ்மிருதியிலுள்ளதைச் சொல்வோம் கேள்.

(சு) ருஷ்யஶ்ருங்கோ மிருகாஜ்ஜாத: | கௌசிகோ காதிநந்தந: |
ஜம்புகோ, ஜம்புகோத்பத்தி: | கௌத மோகௌத ஸம்பவ: ||
வால்மீகோவல்மிகோத்பத்தி: | அகஸ்தியஃ கும்பஸம்பவ: |
வியாஸோலுப்தகன்ய ஸம்பூதோ | வஸிஷ்டோவூர்வஶீஸுத: ||
நாரதோரஜகீபுத்ரோ | கௌண்டிந் யோமுண்டிகீஸுத: |
மதங்கஸ்ய மதங்கஸ்யாத் | மாண்டவ்யோ மண்டூகீஸுத: |
ஸாங்கியாஸஸ்பரஸம் பூதோ | கார்கேயோகார்தபீஸுத: |
ஶுநகீகர்ப்ப ஸம்பூதோ | சௌனகாதிமஹர்ஷய: ||



(தா) மகரிஷிகளின் காலத்தில் குணங்களை யநுஸரித்து ஜாதி உண்டானதற்கு இதுவே திருஷ்டாந்தமாம். எப்படி என்றால், ருஷ்ய சிருங்கமகரிஷி மானினிடத்திலும், விஶ்வாமித்திரமுநீசுவரர் க்ஷத்திரியகுலத்திலும், ஜம்புகமுனி நரியினிடத்திலும், கௌதம மகரிஷிமுயலினின்றும், வால்மீகிமகரிஷி புற்றிலிருந்தும், அகஸ்திய மகரிஷி கும்பத்தினின்றும், ஸ்ரீவேதவியாசர் செம்படஸ்திரீயினிடத்திலும், ஸ்ரீவஸிஷ்டர் ஊர்வசியினிடத்திலும், ஸ்ரீ நாரதர் வண்ணாத்தியினிடத்திலும்,கௌண்டின்யமகரிஷி விதவையினிடத்திலும், மதங்க மகரிஷி சக்கிலி ஸ்திரீயினிடத்திலும், மாண்டவ்யமுனி தவளையினிடத்திலும், சாங்கிய மகரிஷி சண்டாள ஸ்திரீயினிடத்திலும், கார்கேய மகரிஷி கழுதைவயிற்றிலும், சௌனகாதி ரிஷிசிரேஷ்டர்கள் நாயினிடத்திலும் அவதரித்தார்கள். இவர்களெல்லோரும் பரமதபோதனர்களே. இங்ஙனமிருக்க ஜாதிபேதம் தேஹ ஸம்பந்தமாய் எவ்வாறிருக்கும்! இருக்கமாட்டாது.

(சு.) ஜன்மநாஜாயதே ஜந்து: | ஸம்ஸ்காராத் துவிஜஉச்யதே|
வேதபாராயணோ விப்ரோ | பிரஹ்மஞானேது பிராஹ்மண: ||

(தா.) ஜன்மத்தினால் எல்லோரும் ஜந்து ஸமானர்களே. ஆனால், ஸம்ஸ்காரத்தினால் துவிஜர்(இருபிறப்பாளர்) களெனப் படுகின்றார்கள். வேதபாராயணத்தினால் விப்ரத்தன்மையுண்டாகும். பிரம்மஞானமுண்டாகும் பொழுது தான் பிராம்மணனென்று சொல்லுவதற்குத் தகுந்தவனாவான்.

(சு.) த்விஜவத் க்ஷத்திரிய ஸ்யோக்த:| பிராணாயாமோ மஹாமுநே|
விரக்தானாம் பிரபுத்தானாம் | வைஶ்யானாஞ்ச ததைவச||
சூத்ராணாஞ்ச ததாஸ்திரீணாம் | பிராணஸம்யமநம்முநே||

(தா.) ஓ முநிசிரேஷ்டரே! பிராம்மணர்களுக்கு யோகசாஸ்திரத்தில் எவ்வளவு அதிகாரமுண்டோ, அவ்வளவு அதிகாரம் க்ஷத்திரியனுக்கும் விரக்தர்களாகவும் புத்திமான்களாகவு முள்ள வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இருக்கின்றதென யோகசாரம் சொல்லும்.

(சு.) மாம்ஹிபார்த்த வ்யபாஶ்ரித்ய | யேபிஸ்யு: பாபயோநய: |
ஸ்திரியோ வைஶ்யாஸ்ததா சூத்ரா | ஸ்தேபியாந்தி பராங்கதிம்||
பக-அ-9-4-32.

(தா.) ஓ அர்ஜுனா! ஸ்திரீகளும், வைசியர்களும், சூத்திரர்களும், இன்னும் இவர் போன்ற எவர்களும் பிறப்பில் தாழ்ந்தவர்களாக இருப்பினும், அவர்களுங்கூட பரமாத்மாவாகிய என்னை அடைக்

கல்மாகக்கொண்டு மேலான கதியை அடைவார்களென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில், உபதேசித்தருளினார்.

ஓ, நிர்மல விசார குணசாலியாகிய தாயே! சாக்ஷாத் நாராயணருடைய வசனம் இப்படியிருக்க, ஏன் ஸந்தேகிக்கின்றாய்?

இன்னும் மகாபாரதத்தில் அநுசாந்தி பர்வம் அத்தியாயம் 143-ல் ஸ்ரீ பரமசிவன் ஸ்ரீ பார்வதிதேவிக்கு வர்ணங்களின் உயர்வும் தாழ்வும் குணங்களிலே யுண்டாகுமென்று தெளிவாகபோதித்தார்.

(சு.) ஞான விக்ஞான ஸம்பன்னஃ| ஸம்ஸ்கிருதோ வேதபாரகஃ |
விப்ரோ பவதி தர்மாத்மா | க்ஷத்திரியஃ சுவேநகர்மணா ||

(தா.) மனிதப்பிறவியிற் பிறந்தவர்களில் யாவனாயினும் சரி, ஞானவிஞ்ஞானங்களோடு கூடினவனாய் மலின குணங்களை விட்டவனாய் வேதத்தின் முடிவைக்கண்டவன் எவனோ, அவன் பிராம்மணன். மேற் சொல்லிய குணங்களோடு கூடியவனாய்த் தர்மாத்மாவான க்ஷத்திரியனானாலும் அவன் பிராம்மணனே.

(சு.) ஏதைஃ கர்மபலைர்தேவி | நியூனஜாதி குலோத்பவஃ |
சூத்ரோப்யாகம ஸம்பன்னோ | த்விஜோபவதிஸம்ஸ்கிருதஃ ||

(தா.) ஓ பார்வதி! மேற் சொல்லிய புண்ணிய கர்மங்களே பிராம்மணத்துவத்திற்குக்காரணம், வேறுகாரணமாக ஜாதி யுண்டாவதில்லை. பரிசுத்த ஹிருதயமுடையவனாய் ஞானசம்பன்னனாகி யிருந்தால் சூத்திரன் கூட பிராம்மணனே.

(சு.) பிராம்மணோவாப் யஸத்விருத்தஃ| ஸர்வஸங்கரபோஜனஃ|
பிராம்மண்யந்து ஸமுத்ஸ்ருஜ்ய| சூத்ரோபவதிதாதிருஶஃ|

(தா) பிராம்மணனாக ஜன்மித்தாலும் நல்லொழுக்கம் நீங்கியவனாய்க் கலப்புப்புசிப்பைசெய்வானானால் பிராமணத் தன்மையற்றுமேற் சொல்லிய ரீதியை அநுஸரித்து சூத்திரத் தன்மையை அடைவான்.

(சு.) கர்மபிஃ சுசிபிர்தேவி | சுத்தாத்மா விஜிதேந்திரிய ஃ |
சூத்ரோபி த்விஜவத்ஸேவ்ய | இதிபிரம்மாநுஶாஸனம் ||

(தா.) ஓ பார்வதிதேவி! சுத்தமான சாத்விக கர்மங்களோடு கூடியவனாய் பரிசுத்தமனதை யுடையவனாய் இந்திரியங்களை வென்றவனாயுள்ளவன் சூத்திரனாகப் பிறந்தாலும், அவன் பிராம்மணனைப் போல எல்லோராலும் சேவிக்கத் தகுந்தவனென்பது வேதத்தின் துணிபாம்.

(சு) ஸ்வபாவம் கர்மசுபம் | யத்ரஶூத்ரேபி திஷ்டதி |
விசிஷ்டஃ ஸத்விஜாதேர்வை | விக்ஞேய இதிமே மதிஃ||



(தா.) இயல்பாயே சுத்தமான புண்ணியகர்மத்தை அநுஷ்டிக்கும் குணமுடையவன் சூத்திரனாகிலும், பிராம்மணனைவிட விசேஷமானவனென்பது என்னுடைய தீர்ந்த அபிப்பிராயமாம். அதாவது பரமசிவனுடைய மதம் இது என்பது பொருளாம்.

(சு.) யதிசைல ஸமம்பாபம் | விஸ்தீர்ணம் யோஜநான்பஹூன் |
பித்யதேதியான யோகேன | நாங்யோபேதஃ கதஞ்சன|

(தா.) அனேகயோஜனைவிஸ்தீர்ணமாய் ஆகாசம்வரையில் அளாவிய பர்வதம்போல் பாபமிருந்தாலும், பரமாத்ம தியானத்தினால் தூளியாய்ப் போய்விடும். பாபம் நாசமாவதற்கு ஞானயோகத்தைக் காட்டிலும் வேறெவ்விதமார்க்கமுமில்லை என்று யோக கல்ப துருமம் சொல்லுகின்றது.

(சு.) ஸம்ஸாரார்ணவமக்னானம் | ஜந்தூனமவிவேகினம் |
அகதீனம்கதி: ஸாக்ஷாத் | ஞானமேவஹிகேவலம் ||

(தா.) ஓ. தங்கையே! ஜனனமரணமென்னும் ஸம்சார துக்கக்கடலில் மூழ்கியபிராணிகளும், விவேகமற்றவர்களும் எவ்வித கதியற்றவர்களுமாகிய யெல்லோருக்கும், சாக்ஷாத்பரமாத்மஞானமே கதி என்பது மகரிஷிகளுடைய மதமாம்.

(சு,) முஹூர்த்தமபியோகச்சே | ந்நாஸாக்ரே மனஸாஸஹ |
ஸர்வம் தரதிபாப்மாநம் | தஸ்யஜன்ம ஶதார்ஜிதம் ||

(தா.) எவன் ஒரு முஹூர்த்தமாத்திரமாவது நாசி நுனியில் ஏகாக்ரசித்தத்தோடு பரமாத்மாவைத் தியானிப்பானோ, அவனது நூறு ஜன்மங்களில் செய்த பாபங்கள் முழுவதும் அப்பொழுதே அழியுமென்று பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணபகவான் உத்தர கீதையில் அருளியிருக்கின்றார்.

(சு.) அஹம் பிரஹ்மேதி மாம்தியாயே | தேகாக்ரம் மனஸாகிருதம்
ஸர்வம்தரதிபாப்மாநம் | கல்பகோடிஶதைஃகிருதம் ||

(தா.) எவன் தன்னுடைய மனத்தை ஒருமைப்படுத்தி பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணனைத் தனது ஆத்மாவாகத் தியானிப்பனோ, அவன் நூறுகற்பகோடிகளிற்செய்த பாபமனைத்தையும் போக்கடித்து மோக்ஷத்தை அடைவானென்று ஸ்ரீ வாசுதேவனுடைய அமிர்த வசனம்.

அம்மையே! நம்மில் யார் கோரமான பாபத்தைச் செய்திருக்கின்றார்களோ, அவர்களே முதன்முதல் பர்ப்பிரம்ம தியான பக்தி பிரார்த்தனைகளைச் செய்யவேண்டும். எப்படி என்றால், எவர்களுக்கு

நோய் அதிகமாக இருக்குமோ, அவர்களேயல்லவா சீக்கிரத்தில் மருந்தைச் சேவிக்கவேண்டும். நோய் தீர்ந்த பிறகு மருந்தைச் சாப்பிடவேண்டுமென்று சொல்வது எவ்வளவு புத்தி ஈனம்! மருந்தைச் சாப்பிடுவதினால் எப்படி நோய் தீருமோ, அப்படி தெரிந்தாவது தெரியாமலாவது செய்த தீவினையினால் கஷ்ட நிலையிலிருப்பவர்கள் ஈசுவரனைத் தியானிக்க வேண்டும். தியானம் செய்யாவிட்டால் பாபம் எப்படி நசிக்கும்! நசிக்காது.

வினா:—பிராம்மணோஸ்ய முகாமாஸீ | த்பாஹூ ராஜந்யஃ கிருதஃ |
ஊரூததஸ்யயத்வைஸ்யஃ | பத்ப்யாம்சூத்ரோzஜாயத ||

(தா.) விராட் புருஷனுடைய முகத்திலிருந்து பிராம்மணனும், தோள்களிலிருந்து க்ஷத்திரியனும், துடைகளிலிருந்து வைசியனும், பாதங்களிலிருந்து சூத்திரனும் தோன்றினார்கள். முகத்தின் கீழ் கீழ்ப்பாகங்களிலிருந்து ஒவ்வொருவரும் உண்டானதினால் ஒருவரைவிட ஒருவர் தாழ்ந்தவர் என்று சொல்லுவதில் என்ன குற்றம்? இதுவேதமல்லவா? இந்தப் புருஷ சூக்த சுருதியைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுவதில்லையா?

விடை:—இந்தச் சுருதி வேதவசனமானதால் அதை மாத்திரம் சிரசாக வகிப்போமே யல்லாமல், அதற்குப் பொருளுரைப்பவர் தத்தம் இஷ்டாநுஸாரமாகக் கூறியுள்ளார். அதில் மாத்திரம் விசாரமுண்டு. இந்தச் சுருதிக்கு உண்மையான அர்த்தத்தை ஆர்ய சமாஜ மதத்தார் எழுதியிருக்கின்றார்கள். அது நமக்கு அனுவசியம். நமது ஸநாதந வழியாகக் குணத்தைக்கொண்டு நோக்கும்பொழுது பிரம்ம ஞானிகள் முகத்திலிருந்தும், குடிகளைக் காக்க வல்லபமுள்ளவர்கள் தோட்களிலிருந்தும், வாணிபவியல்புள்ளவர்கள் துடைகளிலிருந்தும், சேவகா விருத்தி (பணித்தொழில்) செய்பவர்கள் பாதங்களிலிருந்தும் பிறந்தார்களென்று சொல்வதில் என்ன விரோதமிருக்கிறது! ஓர்வித விரோதமுமிராது. சேவகா விருத்தி என்றால் கிராமத்தலையாரி முதல் ராஜப்பிரதிநிதி வரையில் இருப்பவர்கள் சேவகர்களே. இவர்களிலும் பிரம்ம ஞானிகள் இருக்கக்கூடும். 'பிராம்மணோஸ்ய முகமாஸீத்' என்னும் சுருதிப்படி முகத்திலிருந்து பிராம்மணர்கள் பிறந்தார்கள் எனலால் முகத்தைவிட மார்பு, துடை, பாதம் இவை வொன்றுக் கொன்று கீழ்ப்பாகமாவதால் ஜாதியிலும் கீழ் கீழான ஸ்திதியிருக்கின்றதென்று சொல்லுதல் நலமாம். பிரம்ம குலமென்று சொல்லப்படுபவர்கள் நிச்சயமாக வைசியர்களாகவே வேண்டும். ஏனென்றால் பிரம்மதேவர் ஸ்ரீமந் நாராயணருடைய உந்தி



கமலத்திலிருந்து உற்பவித்த காரணத்தினால் நாபியிடம் துடைகளில் சேர்ந்ததே. அன்றியும் கங்காதேவி விஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டான காரணத்தினால் கங்கையோ சூத்திர ஸ்திரீயேயாக வேண்டும். மேலும் சப்த ரிஷிகளும், மநுக்களும், சநகாதி யோகிகளும், பகவானது மானஸமக்களென்பது சாஸ்திரத்தின் நிர்ணயம். இருதயம் மார்பிடத்திற் சேர்ந்ததேயாம். அப்படியாயின் அவர்கள் க்ஷத்திரியர்களாகவே வேண்டும். மானவர்களெல்லோரும் அவர்களினின்றும் உண்டானவர்களென்று சாஸ்திரம் சொல்லுவதால் அனைவரும் க்ஷத்திரியர்களேயாவார்கள்.

(சு) மஹர்ஷயஸ் ஸப்தபூர்வே | சத்வாரோமன வஸ்ததா |
மத்பாவாமானஸாஜாதா | ஏஷாம்லோகா இமாஃ பிரஜாஃ ||

உலகத்தில் இந்தப் பிரஜைகள் எவர்களிடத்தினின்றும் உண்டானார்களோ, அந்த ஏழுமகரிஷிகளும், முந்தின நான்குமநுக்களும் எனது வடிவத்தை யுடையவர்களாய் மனத்தாலுண்டாக்கப்பட்டவர்களாகப் பிறந்தார்கள்.

இன்னும் 'பிராம்மணோஸ்ய முகமாஸீத்' என்னும், சுருதியில் ஒருமைப்பிரயோகமிருப்பதனால் ஒரு பிராமணனும் ஒரு க்ஷத்திரியனும் ஒரு வைசியனும் ஒரு சூத்திரனும் உண்டானார்களென்று உரை செய்வார்கள். அப்பொழுது இவர்களுக்கு ஸ்திரிகள் எங்கிருந்து உண்டானார்களென்னும் ஒரு வினா தோன்றும். இன்னும் சுவபச கிராத சண்டாளாதி ஜாதிகளை எவர் சிருஷ்டித்தார்? என்னும் இரண்டாவது வினாகூட உதிக்கும். இன்னும், அனாதியாக விருக்கும் நாஸ்திகர் சாங்கியர், ஜைனர், புத்தர், ஜூதர், பாரசீகர் இவர்களைச் சிருஷ்டித்த கடவுள் யாரென்று மூன்றாவது வினாகூட எழுவதற்கு அவகாசமுண்டாகும். மற்றும் கிருஸ்தவர்கள், துருக்கர்கள், நீக்ரோக்கள் முதலிய எவ்வளவோ ஜாதிகள் பூலோகத்தில் இருக்கின்றனர். இவர்களைப் படைத்தவர் இந்து சாஸ்திரத்திற் சொல்லிய கடவுளல்லாமல் மற்றொரு ஈசுவரனிருக்கவேண்டும். ஆகவே இவ்வித பொருளற்ற பாமரர்களுடைய பேச்சுகளைக் கேட்டுக் கெட்டுப்போவதுமல்லாமல், நம்முடைய தேசம் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. ஜாதிவர்ணாஸ்ரம ஸ்திதியைப்பற்றி இந்துதேச சரித்திரத்தில் சொல்லப்பட்டிருப்பது சரியாக யிருக்கின்றது. அதாவது பாரத தேசத்திற்கு ஆதி காலத்தில் ஆரியர்கள் வந்தபொழுது அவர்கள் ஒரு ஜாதியாரென்றும், அவர்களில் வித்தையைப்போதிப்பதற்கும் தேவபூஜையைச் செய்வ

தற்கும் சிலரை ஏற்படுத்தினார்கள். பகைவரை அடக்குதற்குப் பலமுள்ளவரும் தைரிய முடையவர்களுமாகச் சிலரை நியமித்தார்கள். தேகவலிவும், மனோவன்மையும் போதியவளவில்லாதவரை வியாபார கிருத்தியங்களுக்கென வகுத்தார்கள். புத்தி விளக்கமின்மையரைப் பயிரிடுவதற்கும் மற்ற வேலைகளைச் செய்வதற்கும் நிச்சயித்தார்கள். அவர்கள் எல்லோரும் சகோதர வாஞ்சையோடு ஜீவித்திருந்தார்களென்று சொல்லியுள்ளது.

இப்பிரிவைக்கொண்டவர்களே கிரமமாக நான்கு வர்ணஸ்தர்களானார்கள். ஆதலால் இப்பொழுதும் ஆரியர்களில் ஜாதபேதமில்லை. ஸ்மிருதிகளும் புராணங்களும் இடைக்காலத்தில் எழுதப்பட்டவை. அக்காலத்தைய அந்நான்கு பிரிவினரும் பலப்பட்டு இருக்கலாம். அவர்களுள் சில மனோவிரோதங்களும் உண்டானதாகத் தோன்றுகின்றது. ஆதிய ஆரியர்கள் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டதற்கு இப்போதைய ஜனங்களின் பரிபக்குவத்தை யநுஸரித்தும் அப்போதைய ஸ்திதியையநுஸரித்தும் இருக்கக்கூடும். இக்காலத்தில் ஜாதி நிமித்தம் சகோதர சினேகம் விடுபட்டு, பூனையும் எலியும்போல் விஷம ஸ்திதிக்கு வந்துவிட்டது. ஆகையால் இவ்வித பாப விசாரத்தைப் போக்கி எல்லோரும் சகோதர நேசத்தைப் பாராட்டிப் பொதுப்பட மனிதர்களின் புத்தி விகாசத்தையநுஸரித்து, உயர்படியில் ஏறுபவர்களுக்கு இயன்றவரை துணைசெய்தால் நம்முடைய தேசம் இகபரசுகங்களுக்கு ஈடாவதல்லாமல் எல்லா ஜனங்களும் நித்ய சுகிகளாவார்கள். சரீரத்தினுடைய கறுப்பு, சிவப்பு, வெளுப்பு முதலான நிறபேதங்கள், குளிர்வெப்பங்களை யனுசரித்தும், ஆகார வியவஹாரங்களைக் குறித்தும் மாறுபடுகின்றன. வெய்யல் விசேஷமாகப் படுவதினாலும், சாரமற்ற ஆகாரத்தை உண்பதினாலும் உடம்பின் தோல் கறுப்பாக மாறும். புருஷனுடைய தலையை மொட்டையடித்தபொழுது குடுமையிருந்தவிடத்திலுள்ள வெண்மை மற்றைய விடங்களிலிராது. காரணமென்னவென்றால், குடுமியிருக்கும்பாகத்தில் வெய்யல் விசேஷமாகப் படுவதில்லை. ஆகையால் எப்பொழுதும் வெய்யலில் கூலிவேலையைச் செய்து சத்தில்லாத அன்னத்தைத் தின்பதால் சரீரத்தின் சர்மம் கறுப்பாக இருப்பவர்களை ஈனஜாதியென்று எண்ணாமல் அவர்களின் மீது தயையுடையவர்களாய் நம்முடைய தேசத்தை உயர் நிலைக்குக் கொண்டு வரக்கடவீர்கள். இதற்குப் பரமதயாளுவாக விருக்கும் ஜகதீசுவரன் நம்மை ஆசீர்வதிப்பாராக. சாதுர்வர்ண்யம் மயா ஸிருஷ்டம் குணகர்மவியாகஶ என்பது பகவத்வசனமாம்.



மற்றொரு விதமாகப்பார்க்கின் பகவான் தியான ச...
லவா! அப்பொழுது தன்னுடைய அம்சர்களான ஜீவர்களும் ...னுடைய சுவரூபர்களல்லரா! சர்க்கரையினால் செய்யப்பட்ட பிரதிமையின் எப்பக்கத்தைப் பார்த்தாலும் சர்க்கரையேயல்லாமல் மற்றொன்றுமில்லையல்லவா!

வினா:— புண்ணிய விசேஷத்தினால் பிராம்மணனாய்ப் பிறப்பானென்று சொல்லும் சாஸ்திரம் தங்களுக்கு உடன்பாடுதானா?

விடை:— புண்ணிய மிகுதியால் பிராம்மணனாய்ப் பிறப்பானென்று சொல்லும் சாஸ்திரம் எமக்குச் சம்மதமே தவிர, இப்போதைய பிராம்மண சப்தத்தினால் பற்பலவாறு விவகரிப்பவர்கள் விளம்பும் விஷயங்களை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஏனென்றால், புண்ணியத்தினுடைய பலன் ஆரோக்கியம், ஞானம், ஐஸ்வர்யம் என்பது சாஸ்திர சம்மதம். ஆதலால், பிராமணர்களில் பாப பலனாகிய தரித்திரமும், ரோகமும், அஞ்ஞானமும் இருக்கலாகா. சூத்திரர்களில் ஞானம், ஐஸ்வர்யம், ஆரோக்கியமும் இருக்கக்கூடா; அப்படிக் காணப்படவில்லை. இப்படியிருக்க, நிராதாரமான பேச்சுக்களை நம்புவதில் மனம் ஒப்புமா! ஒப்பமாட்டாது.

(சு) பாபம்விநாஶரீரஸ்ய | துக்கம்நாஸ்திபதேபதே|
யத்கிஞ்சித்திருஶ்யதேதுக்கம் | ஸர்வம்பாபஸமுத்பவம்||
ஸ்தூலம் சைவாத ஸூக்ஷ் மஞ்ச | துக்கம் பாப சமுத்பவம் |
அபாபஞ்சயதாஸ்யாத்வை | ஶரீரம்சுகபாஜனம் ||

(தா.) இதனுடைய அர்த்தத்தை இதில் மற்றோரிடத்தில் காணலாம். இன்னும் பசுவிடமிருந்து புலியும் புலியினிடத்திலிருந்து பசுவும் யானையினிடத்திலிருந்து ஆடாவது குதிரையாவது பிறப்பதில்லை. அவ்விதமாகவே, பலாவிருக்ஷத்திலிருந்து புன்னைமரமும், மாமரத்திலிருந்து எட்டிச்செடியும், வேப்பமரத்திலிருந்து கமலாச் செடியும் உற்பத்தியாவதில்லை. இவை பிரகிருதியின் நியமங்களாம். அதுபோலவே பிராம்மணாதி ஜாதிகள் நிஜமாகவிருக்குமேயானால் பிராம்மணர்களிடமிருந்து பிறப்பவர்கள் சுருதிப்பிரகாரம் பிறப்பிருந்தே பிரஹ்மஞானிகளாகவும் சதாசாரதபோநிஷ்ட சிஷ்டாசாரர்களாகவு மிருக்கவேண்டும். சூத்திரர்களிடமிருந்து ஜன்மிப்பவர்கள் கீழான ஒழுக்கங்களை யுடையவர்களாகவும் ஞானஹீனர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிக்காணப்படவில்லை. ஆதலால், இது சம்மதமல்ல. இதனால் பிஜாங்குரவாதம் இங்கு ஒவ்வாது. இப்படிச் சொல்லுவதினால் ஜாதிபேதமில்லை என்பது பொருளல்ல. ஜாதிபேதம் நிச்

தற்கும் இடமிருக்கின்றது. எப்படி யென்றால், ஒரு மாமரத்திலிருந்து முன்னளவு காய்களைக்கொய்தாலும் அக்காய்களை நான்கு பாகங்களாகச் செய்யலாம். ஒரு விதம் பழமாகவும், இரண்டாவது விதம் முதிர்ந்த காய்களாகவும் மூன்றாவது விதம் இளங்காய்களாகவும் நான்காவது விதம் துவர் பிஞ்சுகளாகவும் இருக்கும். இவைகளுக்குக் குணங்களென்று பெயர். ஒன்று தித்திப்பு, ஒன்று மத்தியமம், ஒன்றுபுளிப்பு, ஒன்று துவர்ப்பு. அதாவது ஸத்துவ ரஜ தமோகுணங்களென்றும் கலப்புக் குணமென்றும் சொல்லப்படும்.

(சு) சாதுர்வர்ண்யம் மயாசிருஷ்டம் குணகர்மவிபாகஶ꞉ ||

என்னும் பகவத்வசனத்தை இப்பொழுதும் சுருதிப்படி அநுஷ்டான நிஷ்டையிலிருக்கும் தபோநிதியான ஒருவரைப் பார்த்தால் பிராம்மண சுவபாவத்தை அறிந்து கொள்ளலாம். ஆகவே விசார சீலர்களுக்கு இவ்வளவே போதுமானது.

வினா:—ஐயனே! எமக்கு சாஸ்திரமும், யுக்தியும், தாங்கள் சொல்லியதுபோதுமானது. வர்ணாசிரம விஷயமாய்த் தங்களுடைய நிச்சயாபிப்பிராயம் எப்படி யிருக்குமோ, அதைக்கபடமில்லாமல் தீனர்களான எம்மீது தயை கூர்ந்து சொல்லியருளப் பிரார்த்திக்கின்றோம்.

விடை:— பக்திபரவசளான சகோதரியே! எம்முடைய மனோ சம்மதத்தை மொழிவோம், கேள்.

(1) கடைச்சாதியில் ஜன்மித்தவராயினும் பரமபக்தர்களாய் சமதமாதி சற்குணங்களோடு கூடியவராய்ப் பிரம்ம நிஷ்டையைப் பொருந்தியவராயிருந்தால், அவரை நாம் பிரம்மரிஷி சிரேஷ்டரென்று போற்றுவோம். (2) பிராமணசாதியில் பிறந்து இழிவான ஒழுக்கமுள்ளவராகித் துர்குணம் நிரம்பியவராய் ஞான வீனராய் இருப்பாராயின் அவரே சண்டாளர்களென்பது எமது நம்பிக்கை. (3) இல்லறவாழ்க்கையிலிருந்துகொண்டு விஷய வாஞ்சை இல்லாதவனாய் தயையுள்ளவனாய் ஞானசம்பன்னனாக ஒருவன் இருப்பானாயின் அவனைப் பரமஹம்ஸ பரிவ்ராஜகயதீஸ்வரனென்பது எமது துணிபாம். (4) துறவு ஆசிரமத்தை மேற்கொண்டவனாயினும் வாஸனையற்று ஞானநிஷ்டையில் நில்லாவிடில் அவன்குடும்பியே அதாவது பெரிய ஸம்ஸாரி யென்பது எமது எண்ணம். இதுவே வர்ணாசிரம விஷயமாக எம்முடைய அபிப்பிராயம்.

(சு,) ஸந்தியாஸம் நிர்மலம் ஞானம் | நதுகாஷாய முண்டனம் |
நிவர்த்தராகஸ்ய கிருஹம் தபோவனம்

என்று சாஸ்திரம் சொல்லுகின்றது.



(சு) யுக்தியுக்த முபாதேயம் | வசனம் பாலகாதபி |
அந்யத்திருணமிவ தியாஜ்ய | மப்யுக்தம் பத்மஜன்மனா ||

உளகமுளதேற் சிறுவருரையுங்கொள்க வொழிந்த
தய னுரைசெயினுந்திரணமொப்பவேகவிடுவாய்.

(தா.) யுக்திக்கு ஒத்திருக்குமாயின் குழந்தைகளின் வசனத்தையும் கொள்ளத் தக்கதாம். யுக்தியுக்தமில்லாத வசனத்தைப் பிரம்மதேவன் சொன்னாலும், துரும்புக்கொப்பாகத் தள்ளத்தக்கதாம். ஏனென்றால், மகான்களான மேலோர்கள் சுருதி யுக்தியனுபவத்தோடு லோக சம்மதப்படி ஜீவர்களுடைய மேம்பாட்டிற்காகச் சொல்லுவார்களே யல்லாமல் விரோதமாகச் சொல்லமாட்டார்கள். விரோதமாகக் காணப்படும் வசனங்கள் ஈசுவர சம்மதமாகா மகரிஷிகளின் ஏற்பாடு மாகா. இதைக்கிரகிக்கவேண்டியே ஸ்ரீ வசிஷ்டபகவான் வாசிஷ்டத்தில் இவ்வாறு அறுதியிட்டனர்.

வினா:—எந்தையே! இப்போது சூத்திரர்களைவிட பிராம்பணர்களுக்குச் சாந்தமும் ஞானமும் அதிகமாகக் காணப்படுகின்றதே. அதற்குக் காரணமென்ன? கூறியருளல் வேண்டும்.

விடை:—சூத்திரர்களைவிட பிராம்மணர்களில் சாந்தமும் ஞானமும் சிலருக்கு அதிகமாக யிருக்கலாம். அதற்குக்காரணம், அவர்களுக்கு இளமையிலிருந்தே ஸாத்வீகமான காய்கறிகளின் புசிப்பும், நீர் மூழ்கலும், சுத்தியும், சிறிது நிஷ்டானுஷ்டானமும் இருப்பதினால் மனோபரிசுத்த முண்டாவதற்கு இடமிருக்கின்றது. இவ்வாறே மச்ச மாம்சாதி பக்ஷணமில்லாமல் ஸ்நானசௌதாதிகளோடு தெய்வ நிஷ்டையைச் சார்ந்துள்ள சூத்திரர்களிற் சிலரிடத்தே சாந்தமும் ஞானமும் தயையும் காணப்படுகின்றன. சாந்த குணத்திற்கு ஸாத்விக ஆகாரம் மிகவும் சகாயமாக இருக்கின்றது. பாபகரமான மாம்சப்புசிப்புள்ளவர்களுக்கு மனவமைதி யுண்டாவது முடியாத விஷயம். இன்னும் இவ்விஷயமாய்ச் சொல்வதற்குப் பல உண்டு. புத்திமான்களுக்கு இவ்வளவே போதுமானது. புத்தியில்லாதவர்களுக்கு எவ்வளவு போதித்தும் என்ன பிரயோஜனம்? தீப்பொறி ஒன்று கிடைக்குமாயின் அதைக்கொண்டு சிரத்தையோடு விருத்தியாக்க உபாயத்தை யறிந்தோர்க்கு விறகுகளின் சகாபத்தி

…ளவு நெருப்பாகச்செய்யக்கூடும். நெருப்பினிடத்து கட்டை தற்கு… ஸ்திரீயாவது, புருஷனாவது, சூத்திரனாவது, பிராம்மணனாவது மற்றும்யாராவது கொடுத்தாலும் அது விருத்தியாவது போல், இருதயத்திலிருக்கும் ஞானக்நியினிடத்து உலக வாசனாரஹிதமான இந்திரிய வடக்கமென்னும் விறகுகளை யார் போடுவார்களோ அவர்களெல்லோருக்கும் பிரம்ம வடிவ ஞானக்நி பிரகாசிக்கும். நெருப்பு நிரம்ப அகப்படினும் அதனிடத்தே கட்டைகளைப்போடாவிடில் அது சாம்பராய்ப் போகுமல்லவா! இன்னும் ஜாதி விஷயமாகச் சம்சயமுள்ளவர்கள் வேதப் பிரமாணமாக இருக்கும் வஜ்ஜிர சூசிகோபனிஷத்தில் காணலாம்.

இரண்டாம் பாதம் சம்பூர்ணம்.

ஹரி : ஓம்.

ஶாந்தி : ஶாந்தி :

மூன்றாவது நான்காவது பாதங்கள் வரும்.

அச்சில் இருக்கின்றன.

R15
N26
224237
சென்னை-600 068